# பேரின்ப சாகரம்

# திருச்சி தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் ஒலி (ரஹ்)

நூல் அறிமுகம்:
A. முகம்மத் பீவி ஆசிரியை
Dr. A. ஆயிஷா பீவி B.Sc., M.B.B.S.,

ஆக்கம்:
எம்.ஏ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா B.A.,
கலிஃபத்துல் காதிரி ஷத்தாரி கூஷிஸ்தி
சர்கலிஃபா ரிஃபாயி

மும்தாஜ் பதிப்பகம்
39, முஸ்லிம் கருமாரத் தெரு
நெல்லிக்குப்பம் – 607 105
தமிழ்நாடு – தென் இந்தியா
அ.பே: 98947 46014

நூல் விவரம்

பெயர் : பேரின்ப சாகரம் திருச்சி தப்லே ஆலம் பாதுஷா நத்தஹர் ஒலி(ரஹ்)

ஆசிரியர் : எம்.ஏ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா
பக்கம் : 125
பதிப்புரிமை : ஆசிரியருக்கு

அச்சகம்:-

யுனைடெட் பைன்ட் கிராஃபிக்ஸ்
101.D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.

இறை அருள் துணை

# எண்ணங்கள்

தஞ்சை மாவட்டத்தில் பிறந்த எனக்கு, சிறுவயதில் சென்னைக்கு அடுத்து தமிழகத்தின் பெரிய ஊர் திருச்சி என்று தான் தெரியும்.

எனது தாயின் மைத்துனர் முகம்மது நத்தர், எனது சிற்றப்பா, வயிற்று வலி ஏற்பட்டு திருச்சியில் நத்தஹர் ஒலி நாதரின் தர்காவில் சிலவாரங்கள் தங்கி குணமடைந்தார்.

இவைகள் தான் திருச்சி நகர் பற்றியும் பாபா தப்லே ஆலம் பற்றியதுமான எனது பாலப்பருவ நினைவுகளின் படிவுகள்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் நான் காட்டுபாபா பஹ்ருத்தீன் ஒலியுல்லா தர்காவில் ஓரிரவு தங்கி இருந்துவிட்டு நாகூர் நோக்கி பேருந்தில் பயணித்து கொண்டிருந்தேன்.

அதிகாலை உறங்கா உறக்கத்தில் பஸ்ஸினுள்ளேயே கனவு கண்டேன். திருச்சி தர்பாரில் மாதா மாமாஜிக்னி அம்மையார் எழுந்து நின்றார்கள். “இங்குவா எனது குருபிரானின் வரலாற்றை எழுது” என்று உத்தரவிட்டார்கள்.

நான் திருச்சி நகருக்கு பலமுறை சென்றுவந்தும் ஏற்கனவே வெளிவந்த இருநூல்களைத் தவிர வேறு ஆதாரங்கள் இல்லாத நிலையில் ஓசூரில் இருந்து தொலை பேசியில் ஒரு குரல் வந்தது.

“நான் திருச்சியில் அடங்கியிலங்கும் மாதா மாமாஜிக்னி அம்மையாரின் அதாவது தஞ்சை மாமன்னர் இராஜராஜ சோழனின் தமக்கையார் குந்தவை நாச்சியாரின் அரசியல் வரலாற்றை எழுதி கொண்டிருக்கிறேன்.”

எனது இனிய நண்பர் வழக்கறிஞர் அன்வர் பாஷா எல். எல் .பி., அவர்களின் குரல்கேட்டு எனக்குள் வியந்தேன். அன்பர் அன்வர்பாஷா சிரமம் பாராமல் பலமைல்கள் தூரம் பயணித்து எனது ஊருக்கு வந்ததுமல்லாமல் ஏராளமாக தகவல்களை அள்ளிவந்தார்.

கண்டுகேட்ட தகவல்கள், வழக்கம்போல் எனக்குள் ஒளியறிவாய் தோன்றும் உதிப்புகளோடு பாபாவின் வரலாற்றை எழுதி என்சிரம் மீது சுமந்து அவர்களது பாத கமலங்களில் பணிவோடு சமர்ப்பிக்கிறேன்.

நூல் ஆக்கம் பெற்று வந்த தருணத்தில் திருச்சி நகரிலிருந்து எனது எழுத்துகளை குறிப்பாக காட்டு பாபா பஹ்ருத்தீன் ஒலியுல்லாவின் வரலாற்று நூலை பாராட்டி என்பணி தொட உற்சாகமளித்த அணிந்துரை வழங்கிய இந்தியன் யூனியன் முஸ்லிம் லீகின் எமது மாநில தலைவர் திருச்சி நகர்தந்த பெருமான் காதர் முகைதீன் சாஹிப் அவர்களுக்கும்.

நூலாக்கத்தில் பங்கு கொண்டு குறிப்புதவி நூல்கள் பலவற்றை கொடுத்துதவிய வள்ளலார் சன்மார்க்க சங்க நெறியில் வரும் எனது நண்பர் நெல்லிக்குப்பம், காராமணிகுப்பத்தில் வசிக்கும் திரு.ஆ.ஐயப்பன் அவர்களுக்கும்.

கையெழுத்துப் பிரதிகள் எடுத்து தந்த எனது மகள் டாக்டர் ஸையிதா. எம்.ஏ.எச். மாஹேநூர் சுல்தானி மற்றும் முரீது பிள்ளைகள் கணிப்பொறி அச்சுப் பணி செய்து தந்த என கலிஃபா ஷேக் தஸ்தகீர் பாதுஷா அவர்களின் மனைவி ஸையிதா அத்தீன் கதிஜா அவர்களுக்கும்

நல்ல முறையில் அட்டைப் படம் தயாரித்தும் நூலை அச்சிட்டும் தந்த சிதம்பரம் சபாநாயகம் அச்சகத்தார் மற்றும் சென்னை யுனைடட் பைன்ட் கிராஃபிக்ஸ் அச்சகத்தை சேர்ந்த பணியாளர்கள் உரிமையாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

எம்.ஏ. ஹைதர் அலீ
கலிஃபத்துல் காதிரி சத்தாரி க்ஷிஸ்தி
சர்கலிஃபா ரிஃபாயி
நெல்லிக்குப்பம்.

*01.06.2010.*

# எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்)
# மற்றும்
# இறைநேசச் செல்வர்களின் சிறப்பு

"அகிலங்களுக்கெல்லாம் நல்லருட் கொடையாக நபியே முஹம்மதே உமை இறைவனாகிய நாம் படைத்திருக்கின்றோம்."

- அருள்மிகு அல்குர்ஆன்.

"இறை நேசர்களான ஞான நாதர்கள் பூமியில் வந்திறங்கிய வானலோகத்து கனி சிந்தும் மரங்களாவர். நிழல் தரும் அந்த மரங்களின் அருகில் ஒதுங்கி அங்கு உதிரும் கனிகளை அருந்தி பசியாறுங்கள்."

- திருநபி (ஸல்) திருவாய் மொழி

"இறைநேசச் செல்வர்கள் அடங்கியிருக்கும் சமாதிகளை தரிசனை (ஜியாரத்) செய்யுமாறு உங்களுக்கு போதிக்கின்றேன். அதன் மூலம் உங்களது சர்வகாரியங்களும் சீர்பெறும்."

- ஃபத்துஹுர் ரப்பானி : 5ம் பிரசங்கம்
- ஹலரத் கௌதுல் அஃலம் (ரலி)

# "இலாஹ்" பிறந்த பூமியில் இறங்கிய இறைநேசப் பகலவன்

லாஇலாஹ இல்லல்லாஹ் என்னும் புனித கலிமாவில் இடம் பெறும் "இலாஹ்" (ஏக இறைமை - ஏகாந்தப் பராபரம்) என்னும் தெய்வீகச் சொல் பிறந்ததாக (அராபி மொழியில் இலாஹ், அராமிக் மொழியில் எல், லத்தீன் மொழியில் எலோஹிம்) மொழி ஆய்வுகள் புகழ்பாடும் பைப்லாஸ் பட்டினத்தை ஒட்டி அமைந்த பஹன்னிஸ் பேரூரில் ...

அன்றைய அகண்ட சிரியாவின் (சிரியா, லெபனான், ஜோர்தான் நாடுகள் இணைந்த) பனிபடர்ந்த மலை தொடர்களின் மேற்கு சரிவில் அமைந்த அடிவாரத்தின் இயற்கை எழில் கொஞ்சும் அடர்ந்த தேவதாரு மரங்களின் கானகப் பாதையில் அமைந்த சோலைகளின் நடுவில்.

ஏசு என வையம் புகழும் நபி ஈசா (அலை) அவர்கள் நடையளந்த நாடுகளென்றும்,

அவர்களின் உதடுகள் சிந்திய ஞான தேன் துளிகளால் நனைந்த தேசமென்றும்,

வையம் புகழும் மாகவிஞன், அந்த மண்ணின் யூத மைந்தன் கலீல் ஜிப்ரான் பாடிப் புகழும் தவ்றாத்தின் ஆதி பூமியில் கி.பி. 956ம் வருடம் பிப்ரவரி மாதம் 13ம் தேதி, ஹிஜ்ரி 347ம் ஆண்டு துல்ஹஜ் மாதம் பிறை 2, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரம்,

பாபா தப்லே ஆலம் நத்தஹர் முத்தஹிருத்தீன் ஒலியுல்லா அவ்லாதுல் அத்ஹர் என்னும் புனித நபி குலத்தில் அஹ்மதுகபீர் பதுஹூன்னிஸா தம்பதியிரின் மைந்தரால் இறைநேசப் பகலவனாய் புவிமீது அவதரித்தார்கள்!

*தேசிகன் நானென்றே திருநடனம் ஆடுகின்ற*
*வாசாம கோசரமே வாழி நிராமயமே*
*-குணங்குடிமஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

# தப்லே ஆலம்
# குவலயம் குலுங்கும் கொட்டோசை

*தும் தும் தும் ... தடம் தடம் தடம் ... தும் தும் தும்*

அகன்ற தாம்பளத்தைப் போன்ற பெரும் கொட்டு (தஃப்) ஒன்றை கையிலேந்தி ஆவேசமாக தட்டிக் கொண்டு நின்றார் அந்த ஏழு வயது சிறுவர். விடியா விடியலில் சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கஸ்ஸின் (திமிஷ்கின்) மாபெரும் அரண்மனையில், உச்சி மாடத்தின் மீது நின்று அவர் எழுப்பிய பேரொலி நகரெங்கும் இடியோசைப் போல் எதிரொலித்தது.

நான்காயிரம் ஆண்டுகால சரித்திரப் புகழ் பெற்ற அந்த பரபரப்பான நகரின் கோட்டைக்கு வெளியே பாடியிறங்கியிருந்த ரோம நாட்டு கொள்ளையன் தஸ்தக்கின் படைவீரர்கள் மன்னரின் மைந்தரான அந்த (1)சிறுவர் எழுப்பிய பேரொலி கொட்டோசை கேட்டு நகரைவிட்டு வெளியில் விரைந்து ஓடுவதை கண்டு நகர மக்கள் வியந்து நின்றார்கள்.

அச்சத்தின் பிடியில், இருளின் போர்வைக்குள், உறக்கமற்ற பயங்கர இரவை கழித்த மக்கள், பொழுது விடிந்தால் நகரில் புகுந்து தஸ்தக்கின் போர் படையினர் என்ன செய்வார்களோ? எத்தனை உயிர்களைக் கொன்று குவிப்பார்களோ? என்று குலை நடுங்கி கிடந்த ஆண்களும் பெண்களும், அச்சம் விலகி குதூகலமும் பரவசமும் கலந்த உணர்வுகளுக்கு ஆளாகி, தெருவீதிகளில் கூட்டம் கூட்டமாக குழுமத் தொடங்கினர். கொட்டோசை எழுந்து பரவி வரும் அரண்மனை வாசலை நோக்கி விரைந்தனர்.

*போதாந்தப் புண்ணியர்கள் போற்றி ஜெயபோற்றி எனும்*
*வேதாந்த வீட்டின் விளக்கே பராபரமே*
*- அருள்திரு தாயுமான சுவாமிகள்*

அதே நேரத்தில் அரசர்க்கரசர் ஸையத் அஹ்மத் கபீரும் அரசியார் பத்ஹுன்னிஸாவும், அரண்மனை காவலர்கள், சேவையாளர்களும், சேடிகளும், அலமலர்ந்து அரண்மனை உப்பரிகைக்கு ஓடி அதிர்ந்து நின்றனர்.

ஏழுவயதே நிறைந்த இளவரசர் எழுப்பியப் பறையோசையை சிரியா நாட்டின் தலைநகரமான திமிஷ்கின் வானங்கள் எதிரொலிப்பதையும், எதிரொலியாய் எழும் இடியோசையைக் கேட்டு தஸ்தக்கின் படைகள் விரண்டோடுவதையும் குடிமக்கள் அரண்மனை நோக்கி விரைந்து வருவதையும் கண்டு அதிசயித்து நின்றனர்.

சமீபகாலமாக ரோம்நாட்டின் படைகள் இஸ்லாமிய நாடுகளுக்குள் புகுந்து அட்டூழியம் செய்து வந்தன. துருக்கியிலும் துருக்மினிஸ்தானிலும், சிரியாவிலும் ஈராக்கிலும், இஸ்லாமியர் கோட்டைகள் பல இடிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அப்பாஸிய கலீஃபா முக்தஃபியின் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் ரோமர்களுடன் அவருக்கு நேசத்தொடர்பு இருந்து வந்தது. ஆனால் வெகுநாட்கள் இது நீடிக்கவில்லை. ஹிஜ்ரி 291ல் ரோமர்கள் இஸ்லாமிய எல்லைப் புறத்தை சூறையாடியமையால் முஸ்லிம்கள் அவர்களை எதிர்த்தார்கள். போர்கள் தொடர்ந்தன. ஐயாயிரம் ரோமர்கள் கொல்லப்பட்டனர்.

சிலுவை யுத்தங்களின் முன்னோடி போல தோன்றும் இந்த நிழல் யுத்தங்கள் கிறிஸ்துவர்களான ரோமர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் தொடர்ந்து நடந்து வந்தன. ஹி.350ல் ரோமர்கள் மஸீஸாவைக் கைப்பற்றினர்.

பல ஆயிரம் முஸ்லிம்களை கிறிஸ்துவர்களாக்கி, எல்லைப்புறத்தில் உள்ள அன்தாக்கியாவை கைப்பற்றி மக்களைக் கொன்று கொள்ளையடித்து, இருபதினாயிரம் முஸ்லிம் சிறுவர் சிறுமிகளை கைது செய்து ரோமுக்கு கொத்தடிமைகளாக கொண்டு சென்றனர்.

இஸ்லாமிய உலகெங்கும் வெறியாட்டம் ஆடிவந்த ரோமர்கள் தஸ்தக்கின் தலைமையில் ஹி.354ம் ஆண்டு திமிஷ்க் நகரின் வடக்கு கோட்டை வாசல் வரை வந்துவிட்டதை அறிந்து நகரமக்கள் அதிர்ச்சிக்கு

ஆளானார்கள். மறுநாள் காலையில் தளபதி தஸ்தக் படையுடன் நகரில் நுழைந்து விடுவான் என்பதால் அவனது பெரும் படையை எதிர்க்க முடியுமா என்று நகரின் அரசர் ஸையத் அஹ்மத் கபீர் மந்திரிப் பிரதானிகளுடன் ஆலோசனை கலந்தார்.

தோல்வி நிச்சயம் என்றாலும் வேறு வழியின்றி ரோமர்களின் படையை எதிர்க்க திமிஷ்க் தயாராகியது. ஆனால் யாரும் எதிர்பாராத வண்ணம் அன்று அதிகாலையில் நடந்த அதிசய சம்பவத்தினால் திமிஷ்க் மக்கள் ஆபத்திலிருந்து தப்பி உயிர் பிழைத்தனர்.

அதிசய சிறுவரான ஸையத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் அரண்மனையின் உப்பரிகையில் பேரொலி பறையோசையை வெகுநேரம் முழங்கிவிட்டு மயங்கி விழுந்தார். மன்னரும் மந்திரிகளும் இளவரசரை கையேந்தி வந்து அரண்மனை முன் மண்டபத்தில் கிடத்தி விசிறி கொண்டு வீசி ஆசுவாசப்படுத்தினர்.

நகரப் பொதுமக்கள் ஆண்களும் பெண்களும் முதியோரும் சிறுவர்களுமாக கூடியிருந்த அத்தாணி மண்டபம் பேரமைதியில் மூழ்கியது. இளவரசர் கிடத்தப்பட்டிருந்த கட்டிலை நோக்கி அனைவரின் கவனமும் கவிழ்ந்திருந்தது.

அரசவை காஜியாரான பக்தியார் முகம்மத், மிகுந்த பணிவோடு இளவரசரின் அருகில் அமர்ந்து கண்ணாடி குவலையில் அருள்மறை சூராக்களுடன் ஸலவாத்தும் ஓதி ஊதி அவர் முகத்தில் தெளித்ததும் இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் படுக்கையில் எழுந்தமர்தார்.

“மைந்தரே உமக்கு என்ன நேர்ந்தது?” என்று தந்தையரான அரசர் அஹ்மத் கபீரும் தாயாரும் பரிவுடன் அணுகியபோது அவர்கூறிய பதில் அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

“இன்று அதிகாலை கண்விழிக்கும் முன் ஒரு கனவு கண்டேன். மனித குலத்தின் ஆதி பிதாவான அபுல் பஸர் ஆதம் (அலை) அவர்கள் என்முன் தோன்றினார்கள். மகனே உமது நகரை ரோம நாட்டு கொள்ளையர்கள் சூழ்ந்துள்ளனர். நீர் எழுந்து உமது பாட்டனார் ஸையத் இக்தியாரின்

பாரம்பரியமான பறைகொட்டை (தஃபை தாயிராவை) கையிலெடுத்துக் கொண்டு அரண்மனை உச்சியில் நின்று முழக்கம் எழுப்பும், பகைவர்கள் விரண்டோடுவார்கள் என்று கூறினார்கள். எனவே தான் விடியா விடியலில் நான் அவ்வாறு செய்தேன்''.

இவ்வாறு இளவல் கூறவே காஜியார் பக்தியார் முகம்மத் பாலகரின் முகத்தை பார்த்து பரவசப்பட்டவராக,

''தப்லே ஆலம் ஜிந்தாபாத்! ஸையத் நத்தஹர் முதஹ்ஹிருத்தீன் நீடுழி வாழ்க! குவலயம் குலுங்கும் கொட்டோசை! வாழ்க வாழ்க!'' என்று உணர்ச்சிவசப்பட்டு சப்தமிட்டார்.

அதற்குள் இளவல் என்ன கூறுகின்றார் என்பது சபையெங்கும் பரவியது மக்கள் பேராச்சரியத்தின் பிடியில் ''தப்லே ஆலம் ஜிந்தாபாத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் ஜிந்தாபாத்'' என்று பெரும் கோஷம் எழுப்பினார்கள்.

ஆனால் காஜியாரின் அடுத்த செயலைக் கண்டு மக்கள் திடுக்கிட்டார்கள். அவர் சிறுவர் நத்தஹர் முத்தஹருத்தீனின் பாதங்களை குனிந்து முத்தமிட்டுவிட்டு எழுந்து சப்தமிட்டார்.

*லவ் யஸ்மவூன கமா ஸம்அத் கலாமுஹா*
*ஹருஅல்அஜா ருகூஹா வஸுஜூத்*
*ஆ! இந்த சிறுவருடைய வார்த்தைகளை*
*நான் புரிந்து கொண்டதுபோல்*
*நீங்கள் புரிந்து கொண்டால்,*
*இவர் முன் விழுந்து ருகூவும் சுஜூதும்*
*வணக்கமும் சிரவணக்கமும்*
*செய்ய தயங்க மாட்டிர்கள்.*

அரபுலகம் புகழும் ஷாயிர் கதீருடைய அந்த கஸீதா பாடலின் பொருளைப் புரிந்து கொண்ட பலர் பரவசப்பட்டார்கள்.

---

*குறிப்பு - நேசர்களே சான்றோர்களான சித்தீக்கீன்களின் இதயங்களை சிரேஷ்டமாக வளர்த்து போஷிக்கும் பொறுப்பை பால பருவத்திலிருந்தே இறைவன் தானே ஏற்றுக்கொள்கிறான் வயோதிகம் வரை அவனே அவர்களை இரட்சிக்கிறான் - ஃபத்ஹுர் ரப்பானி பிரசங்கம் - 54 - ஹலரத் கௌதுல் அஃலம்*

*(1)திருச்சி நகரில் சிறந்திலங்கும் ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்தஹர் வலியுல்லாஹ் பிறப்பு ஹிஜ்ரி 347 துல்ஹஜ் பிறை 2 கிபி 959 பிப்ரவரி 13 ஞாயிற்று கிழமை*

*பெற்றோர் வைத்த பெயர் ஸையத் முத்தஹ்ஹிருத்தீன். பின்னாட்களில் ஏற்பட்ட காரணப் பெயர் நத்தஹர்.*

*(2) பாபா அவர்கள் இலங்கை சென்று ஆதம் மலையில் ஜியாரத் செய்தபோது நகருக்குள் ஆறு உடைப்பெடுத்து வந்தது . பாபா தம் நகரா (பறை) யை எடுத்துவரச் செய்து இரண்டு கோல்களினால் பலமாக அடித்தார்கள். வெள்ளம் வடிந்தது.-*

*இவ்வாறு 'தப்லே ஆலம் பாதுஷா நத்ஹரியா' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.*

*ஒருநாள் காவேரியில் வெள்ளப் பெருக்கெடுத்தது. திரிசிரபுரம் நகர் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டது. பாபா கிஸர் நபியுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். கதிகலங்கிய மக்கள் மலைக்கு வந்து பாபாவிடம் அபயம் தேடினார்கள். பாபா கையிலிருந்த கழியால் மலைமீது ஓங்கி அடித்தார்கள். பேரொலி எழுந்தது வெள்ளம் வடிந்தது -*

*இவ்வாறு திருச்சி உமர் புக்டிப்போவின் 'பாபாவின் வாழ்க்கை வரலாறு ' என்ற நூல் கூறுகிறது.*

*நமக்கு கிடைத்துள்ள தகவலின் அடிப்படையில் இந்த சம்பவம் மேற்கண்டவாறு நிகழ்ந்ததாக கூறியுள்ளோம்.*

*- அல்லாஹு அஃலம் - இறைவனே எல்லாமும் அறிந்தவன்- ஆசிரியர்.*

*எந்தவித மேனுமென் இதயம் தெளிவதற்கே*
*பந்த வினையகலப் பாராய் பராபரமே*
*- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## பாராள விரும்பாத பால அரசர்

இஸ்லாமிய உலகின் நான்காவது அதிசயம் என்று புகழப்பட்ட மஸ்ஜிதெ உமய்யா! திமிஷ்க் நகரின் அந்த பிரதான பள்ளி வாசலின் உள்ளின் உள்ளே மிஃராபின் எதிரில் நின்றிருந்தார்கள் இருபத்தைந்து வயதே நிறைந்த சிரியாவின் அரசர் இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன்.

“அல்லாஹுௗம்ம ரப்பி ஜித்னி இல்ம-இறைவா என் அறிவை விரிவாக்கு” என்ற இறைவனின் திருமறை வாக்கியத்தை முணுமுணுத்துக் கொண்டே இருந்தது இளவலின் நாவு.

பரத்த நதியின் வளமான நீரினால் வனப்பு மிகுந்த சோலைவனங்களில் பேரிலந்தை மரங்களும், ஆப்பிள் மரங்களும், அத்தி மரங்களும் அமைதி காத்தன. அந்த அமைதியினூடே மணம் மிகும் வனமலர்களிலிருந்து எழுந்த இன்பகரமான வாசனை விரிந்து பரந்த நகர் முழுவதும் பரவி உயிரினங்களை ஒருவித மயக்கத்தில் ஆழ்த்தியது.

இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீனின் தந்தையார் ஸைய்த் அஹ்மது கபீர் இறைவனடி சேர்ந்து இன்றோடு பதினெட்டு ஆண்டுகள் நிறைவடைந்திருந்தது.

ஹி.333ம் ஆண்டில் திமிஷ்க் நகரில் அப்பாஸிய கிலாஃபத்தின் கீழ் அரசராக பதவியேற்றுகொண்ட ஸைய்த் இக்தியாரின் மறைவுக்குப்பின் அவர் புதல்வர் ஸைய்த் அஹமத் கபீர் அதிபராகி ஆட்சிப் பொறுப்பை பத்தாண்டு காலம் தொடர்ந்து நடத்தி வந்தார்.

*என்னறிவும் யானும் எனதென்பதுவுமாம் இவைகள்*
*இன்னின்னவையே என்றே நிகழ்த்தாய் பராபரமே*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்*

அக்கால கட்டத்தில் அப்பாஸிய கலிஃபாக்களின் ஆட்சி சிறப்புடன் நீடித்தாலும் எகிப்தில் தோன்றிய ஃபாத்திமிகளின் குழப்பத்தால் இஸ்லாமிய உலகெங்கும் கலகம் மூண்டிருந்தது.

அன்னை ஃபாத்திமாவின் வழிவந்தோர் என்று தம்மை பெருமையாக கூறிக்கொண்ட ஃபாத்திமிகளின் மூலவர் ஸையிது இபுனுஹுஸைன் ஆப்பிரிக்காவின் வடபால் அமைந்த தூனிஸ் நாட்டின் கடற்கரையில் மஹ்திய்யா என்ற நகரை நிறுவி அரசமைத்து தன்னை கலிஃபாவாக பிரகடனப் படுத்திக்கொண்டார்.

ஃபாத்திமிகள் தீவிரவாத ஷீயாக்கள். அருள்மறை திருக்குர்ஆனுக்கு தங்கள் விருப்பபடியெல்லாம் பொருள் கூறி வந்த பாத்தினி கொள்கைவாதிகளின் ஆதரவாளர்கள். பைத்துல் முகத்தஸ்ஸும் அலெப்போவும், பெய்ரூத்தும் ஃபாத்திமிகளின் வசமான பிறகும் திமிஷ்க் நகரில் மட்டும் ஸையத் அஹ்மத் கபீர் தம் படையுடன் அவர்களை எதிர்த்து நின்றார்.

தந்தையின் மறைவால் திடீரென சிறுவயதிலேயே ஆட்சிப் பொறுப்புக்கு நியமனமாகி பதினெட்டு ஆண்டுகாலம் அரசு புரிந்தார்கள் இளம் பாலகர் நத்தஹ்ர் முத்தஹ்ஹிருத்தீன். அமைச்சர்கள் உதவியுடன் இளவல் எடுத்த முயற்சிகளால் தொடர்ந்து திமிஷ்க் அப்பாஸிய கிலாஃபத்தின் சிற்றரசாகவே நீடித்தது.

இதே காலகட்டத்தில் பாக்தாத்தில் அபுல் அப்பாஸ் அஹ்மத் காதிர்பில்லாஹ் கிலாஃபத் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் அப்பாஸிய கிலாஃபத்தின் கை மேலோங்கியது. சிரியாவின் பகுதியான ஹலபிலிருந்து ஃபாத்திமிகளை விரட்ட அவர் எடுத்த படையெடுப்பு வெற்றி பெற்றது.

ஹலப்பிரதேசம் மட்டும் அல்லாமல் சிரியா நாடு முழுவதிலிருந்தும் ஃபாத்திமிகள் விரட்டப்பட்டார்கள். ஹலப் நகரிலிருந்து ஆனா நகர் வரை ஸாலிஹ் என்பவருக்கும் ரமலாவிலிருந்து எகிப்துவரை ஹஸ்ஸானுக்கும் ஆட்சிப் பொறுப்பை பிரித்தார்கள். திமிஷ்க்கில் இளவல் நத்தஹ்ர் முத்தஹ்ஹிருத்தீனுடைய ஆட்சி நீடித்தது.

திறமையுடனும் ராஜதந்திரத்துடனும் ஆட்சி பீடத்தில் அமர்ந்து திமிஷ்க்கின் இறையாண்மையைக் காத்துக் கொண்டிருந்த இளவல் நத்தஹுர் முத்தஹ்ஹிருத்தீன் ஃபாத்திமிகளின் பகை ஒழிந்து நாடு அமைதியுற்றதும் தமது சொந்த வாழ்க்கையின் இலட்சியம் குறித்து சிந்திக்க தொடங்கினார்கள். நாட்டில் பரவியிருந்த பல்வேறு சிந்தனையாளர்களின் கொள்கை கோட்பாடுகள் அவர்களை குழப்பியது.

பனிகொட்டும் அந்த நள்ளிரவில் உலகம் புகழும் உமய்யா பள்ளிவாசலின் உள்ளின் உள்ளே நின்று நூறு ரகாஅத் நஃபில் தொழுகை தொழுதுவிட்டு இறைவனிடம் நேர்வழி காட்டும்படி வேண்டுதல் புரிந்தார்கள்.

பரந்து கிடந்த சிரியாவின் பாலை நிலத்தில் காஸியூன் மலையடிவாரத்தில் அமைந்த, கிழக்கின் ஒளிமுத்து என்று மத்திய கிழக்கு நாடுகளெல்லாம் புகழ்ந்த, அந்த மாபெரும் பள்ளி வாசலின் பளிங்கு தரை, சுற்றி சூழ்ந்திருந்த அல்குதா பசுஞ்சோலைகளிலிருந்து வீசிய குளிர்காற்றால் உறைபனி கட்டிகளைப் போல் குளிர்ந்து கிடந்தது.

மேற்கே விட்டுவிட்டு தொடர்ந்து எல்லை அமைத்த லெபனான் எதிர் குன்றுகளிலிருந்து வந்த பனிகாற்று குளிரையும் இருளையும் மோசமாக்கிக் கொண்டிருந்தது. உமய்யா மசூதியின் உள்ளின் உள்ளே நின்றிருந்த இளவல் நத்தஹுர் முத்தஹ்ஹிருத்தீன் ''இறைவா எனக்கு வழிகாட்டுவாயாக உன் அருளையும் அருகாமையையும் பெறமெய்ஞ்ஞானப் பாதையையும் காட்டுவாயாக'' என்று முறையிட்டார்கள்.

*தர்தம் நிஹான் பா ஸெ தபிபென் முதாயி*
*பாஸித் கிஅஸ் கஸானெ கய்பம் தவாகுனந்த்-*

*மறைந்திருக்கும் தெய்வீகப் பொக்கிஷமே*
*பராபரகி கடவுளே உன்னைப் பிரிந்த*
*பிரிவின் வேதனைப் பிடியிலிருந்து*
*என்னை விடுவி வேறெங்கு செல்வேன்?*
*வேறு யாரிடம் முறையிடுவேன்?*

என்ற பாரசீக கஸீதாவை இளவலின் நாவு முணுமுணுத்தது. பின்னிரவில் உறங்கிவிட்ட இளவலின் கனவில் பெருமானார் (ஸல்) தோன்றினார்கள்.

“மைந்தரே விழித்து எழுவீராக பதினெட்டாண்டு காலம் ஆட்சி கட்டிலில் அமர்ந்து நாடு புரந்தது போதும். நீர் நமது (அவுலாதுன் அத்ஹர்) என்ற புனித குருதியில் உதித்த மைந்தர்.

“உமது பெயரால் நிரந்தர ஆன்மீக ஆட்சி இந்தியாவின் தென்புலத்தில் திருசிரபுரம் என்னும் நகரிலிருந்து யுக முடிவு காலம் வரை நடக்க வேண்டிய அவசியம் உள்ளது,”

என்று உபதேசித்துவிட்டு, “அன்பு மைந்தரே மதினாவை நோக்கி புறப்பட்டு வாரும்” என்று உத்தரவைப் பிறப்பித்து மறைந்தார்கள்.

*மாதா பிதாவும் வருந்தி வருந்திவைத்த*
*போதனையைப் பார்க்கின் பிழையாம் நிராமயமே*
*- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## ஆண்டவனைத் தேடி அலைகின்ற மஜ்தூப்

மதினாவின் வீதிகளில் பன்னாட்டு மாந்தர்களும் ஓடி திரிந்து கொண்டிருந்தார்கள். மக்க நகரில் புகுந்து எல்லாம் வல்ல இறைவனின் இல்லமான கஅபத்துல்லாவை கண்டு களித்து புனித ஹஜ்ஜு கடமையை நிறைவேற்றிவிட்ட மாந்தர்கள் மாநபியின் நகர் நோக்கி விரைந்து தொடர்ந்து வந்து குவிந்தார்கள்.

பாலைவனத்தின் வறண்ட குளிருக்கு அஞ்சி இரவெல்லாம் கண் துஞ்சிய மதினமா நகரம் நான்காம் ஜாமம் தஹஜ்ஜத்தின் பொழுதில் கண்விழித்து சுறுசுறுப்பாகிவிட்டது. பிரம்ம முகூர்த்தம் என்றும் இரு உதயங்களுக்கு இடைப்பட்ட நேரம் என்றும் வேதங்களெல்லாம் புகழும் துருவ நட்சத்திரத்தின் உதயத்திற்கும் சூரிய உதயத்துக்கும் முந்தைய அந்த அதிகாலையில் இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் பெருமானார் (ஸல்) அவர்களின் சன்னிதானத்திலிருந்து வெளியில் வந்தார்.

\- - - - - - -

திமிஷ்க்கிலிருந்து தாயார் பத்ஹுன்னிசாவுடனும் இளைய சகோதரர் ஸையத் ஜலாலுத்தீனுடனும், படை பரிவாரங்கள் சூழ ஹஜ்ஜு செய்வதற்காக ஹிஜாஸை நோக்கி புறப்பட்டு வந்திருந்தார் இளவல். பெருமானார் (ஸல்) அவர்களை தான் கனவில் கண்டதை வெளியில் சொல்லாமல் புனித ஹஜ்ஜு கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று இளவல் கூறியபோது மந்திரிப் பிரதானிகளும் தளபதிகளும் சம்மதித்தனர்.

---

குறிப்பு- மஜ்தூப் - இறைகாதலர்

*ஆரிருந்தென்ன ஆர்போயென்ன அமுதா நின்னருளின்*
*சீரிருந்தால் உய்வேன் சிவமே பராபரமே*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்*

உடன் ஆட்சிப் பொறுப்பை திவானிடம் (தலைமை அமைச்சர்) ஒப்படைத்துவிட்டு சுமார் இருநூறு படைவீரர்கள் தொடர துல்ஹஜ்ஜுப் பிறைக்கு இரண்டு மாதத்துக்கு முன்பாகப் புறப்பட்டு குதிரைகளிலும் கோவேறு கழுதைகளிலுமாக சவாரி செய்த வண்ணம் ஜோர்தானின் தலைநகரமான அம்மான் சென்றடைந்தார்கள்.

அங்கு தங்கி சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டார்கள். சாக்கடலின் கரையோரத்தில் பயணித்து மான், அகாபா, தபூக் வழியாக நஃபுத் பாலைவனத்தில் புகுந்து, தரப் அல்அரப் எனும் நெடுஞ்சாலை வழியாக ஒரு மாத காலத்துக்குள் மதினாவை வந்தடைந்தார்கள். மதினத்துந் நபவியில் ஒரு வாரகாலம் விடுதியிட்டு ஹஜ்ஜுப் பிறையின் தொடக்கத்தில் மக்கமா நகரை வந்தடைந்தார்கள்.

ஹஜ்ஜுப்பிறை ஏழாம் நாளில் இஹ்ராம் வெள்ளாடை அணிந்து ஹரமில் தவாஃப் செய்து எட்டாம் நாள் மினாவில் தங்கி, ஒன்பதாம் நாள் அரஃபா பெருவெளி கடமைகளைப் பூர்த்தி செய்து முஸ்தாலிஃபாவை இரவில் புகுந்து, அதிகாலை ஃபஜ்ரு பொழுதுவரை தங்கி பத்தாம் நாளில் சாத்தானுக்கு கல்வீசி குர்பான் கொடுத்து, பிறை பதிமூன்று முடிய அனைத்து ஹஜ்ஜு கடமைகளையும் முடித்து ஹாஜியாக மதினாவுக்கு திரும்பி வந்தார்கள்.

\- - - - - - -

மதினாவில் உடன் வந்த உறவினர்களுடனும் படை பரிவாரங்களுடனும் ஒருவார காலம் தங்கி அன்று விடியா விடியலில் பெருமானார் (ஸல்) அவர்களின் மக்ஃபராவிலிருந்து வெளிப்பட்ட இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் நபிகளாரின் புனிதநகரைவிட்டு வெகுவேகமாக வெளியேறியதை உடன் வந்தவர்கள் யாரும் கவனிக்கவில்லை.

பொழுது புலர்ந்தது. நகரைச் சுற்றி அரண் போல் அமைந்த பசுமையான பேரீச்சை தோப்புகளிலிருந்து புறப்பட்ட பூங்காற்று மதினத்துந் நபவியின் தாழ்வாரங்களையும் திருச்சமாதிக்கு மேல் பசுமை பச்சை நிறத்தில் கவிழ்ந்திருந்த கும்பஸ் மண்டபத்தையும் தொட்டுத் தழுவி புலகித்துக் கொண்டிருந்தது.

பால அரசர் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீனின் தாயார் ஃபஜ்ரு தொழுகையை விடுதியிட்டிருந்த இல்லத்தில் முடித்துக் கொண்டு வெளியில் வந்து "மைந்தரை முன்னிரவிலிருந்தே காணவில்லை" என்று கூறிய போதுதான் உடன்வந்த உறவினர்களும், தளபதிகளும், படைவீரர்களும் பரபரப்படைந்தனர்.

மஸ்ஜிதுந் நபவியைச் சுற்றி ஏராளமான கடைகள் நிறுவப்பட்டிருந்தன. கடைவீதிகளில் பரபரப்போடு படைவீரர்கள் புகுந்து ஓடி அரசரைத் தேடினார்கள். கருத்துப் பருத்த நீக்ரோவர்கள் சிவந்துயர்ந்த துருக்கியர்கள், மாநிறமுள்ள இந்தியர்கள், மஞ்சள் நிறமும் சப்பை மூக்குமுள்ள சீனத்தவர், சிவந்து பழுத்த மஹ்ரிப்வாசிகள், பால் வெள்ளைநிறம் படைத்த யூனானியர்களும் கூட்டம் கூட்டமாக நடந்து போய் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் இளவல் ஸைய்யித் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீனை காணவில்லை.

வீதியோரங்களில் அரசகுடும்பத்தார்களும், படைவீரர்களும் பயன்படுத்தும் குதிரைகளும், கோவேறு கழுதைகளும் அரபகத்தை சேர்ந்த ஒட்டகங்களும் தளையிடப்பட்டும் தளையிடப்படாமலும் நின்றிருந்தன. தேநீர் கடைகளின் அருகில் ஏராளமான மக்கள் குழுமியிருந்தார்கள். எனினும் ஷாமின் அரசர் முடிபுனைந்த மன்னர் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் அந்த கூட்டங்களில் எங்கேனும் காணப்படவில்லை.

காலை பொழுதும் கடந்தது. பகல் பொழுதும் உச்சிக்கு வந்து கதிரவன் மேற்கு வானில் சாய்ந்தது. ஷாம் தேசத்து அரசர் எங்கே? எங்கே? ஸைய்யித் அஹ்மத் கபீரின் மைந்தர் எங்கே? என்று படைகளோடு உறவினரும் தேடியலைந்தும் பாலமன்னரைக் காணவே இல்லை. அன்னை பத்ஹுன்னிசாவும் சகோதரர் ஸைய்யித் ஜலாலுத்தீனும் மனம் சோர்ந்து படுக்கையில் சாய்ந்துகிடந்தார்கள்.

அந்தி மயங்கி மஹ்ரிபின் தொழுகைக்கு பாங்கொலி எழுப்பப்பட்டபோது முசல்லா விரிப்பையும் படுத்திருந்த பாயையும் சுருட்ட அன்னையார் முயன்றபோது பாயின் கீழ் முடக்கப்பட்ட சுருள் காதிதமொன்றை கண்டெடுத்தார்கள்.

அவசர, அவசரமாகப் பிரித்தபோது அதனில் விவரிக்கப் பட்டிருந்த வாசகம் அனைவரையும் திகைப்படையச் செய்தது.

"மரியாதைக்குரிய எனது தாயாரே! தங்களையும் எனது அன்பு சகோதரரையும் தளபதிகளையும் படைவீரர்களையும் மற்றும் அனைவரையும் வருத்தத்துக்குள்ளாக்கி நான் பிரிந்து போவது பற்றி வருந்துகின்றேன்.

"இன்று பின்னிரவில் அண்ணலெம் பெருமானார்(ஸல்) அவர்கள் என் கனவில் தோன்றினார்கள்! முத்தஹ்ஹிருத்தீன்! ஆட்சி பொறுப்பை உமது சகோதரரிடம் ஒப்படைத்துவிட்டு நீர் கிழக்கே பாரசீகத்தில் உள்ள ஹூர்முஸ் நகருக்கு சென்று உமக்கு மெய்ப்பொருளை உணர்த்தும் ஆன்மீக ஞானம் வழங்க காத்திருக்கும் குருநாதரிடம் சரண்புகுந்து அவர் பாதம் பணிவீராக என்று உத்தரவிட்டார்கள்!

"அன்னையே நான் ஆண்டவனைத் தேடி புறப்பட்டுவிட்டேன். என்னை பின் தொடர்ந்து யாரும் வரவேண்டாம். என் பாதுகாப்புக்கு படைத்த நாயன் போதுமானவன். எனது அருமை தம்பி ஜலாலுத்தீனை அரசகட்டிலில் அமர்த்துங்கள் என அமைச்சர்களையும் நாட்டு மக்களையும் வேண்டுகிறேன்.

"நான் நிச்சயமாக உங்களிடம் திரும்பி வருவேன். இப்போதைக்கு என்னுடன் வந்துள்ள தாங்கள் யாவரும் தாயகமான சிரியா நாட்டுக்கு திரும்பிச் சென்று மக்களிடம் எனது முடிவை எடுத்தோதுங்கள்."

இங்ஙனம்,
ஸையத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன்

*அண்ட புவனமென்று ஆடும் திருக்கூத்தினையான்*
*கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே*
*-மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## அத்தனை சிறுவயதில் எத்தனை அற்புதங்கள்

திமிஷ்க் நகரத்தில் உமய்யா கலிஃபாக்கள் கட்டி வைத்த மாபெரும் அரண்மனையில் நகர மக்கள் ஏராளமாக கூடியிருந்தார்கள்.

பாலமன்னர் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீனை மதினமா நகரில் கையிழந்து விட்டபின் மனத்துயருடன் தாயகம் திரும்பிய மன்னரின் தாயாரும் சகோதரரும் படைவீரர்களும் கூறிய செய்திகள், நகர மாந்தர்களையும் ஆட்சி மன்றப் பிரதானிகளையும் மட்டுமின்றி ஷாம் நாட்டு குடிமக்கள் அனைவரையுமே வேதனையில் ஆழ்த்திவிட்டது.

சிறுவராயிருந்தும் ஆட்சி கட்டிலேறி பதினெட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்திருந்தும் கூட பாலஅரசர் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் ஆற்றிய மக்கள் தொண்டு மகத்தானது.

அப்பாஸியப் படைகளின் துணையோடு ஃபாத்திமிகளை எதிர்த்துப் போராடி அவர்களை விரட்டியடித்த பாங்கும், திமிஷ்க் நகரின் குறுக்கே பாய்ந்தோடும் பரத்த நதியை மக்களின் பயன்பாட்டுக்கு சீர் செய்த பரிவும் குடிமக்களால் நினைவு கூறப்பட்டது.

வெற்றிடமாகிவிட்ட அரியணையில் தமது இளைய மைந்தர் ஸையத் ஜலாலுத்தீனை அமர்த்தி முடிமன்னராக அறிவிக்கப்படவிருந்த பாராளுமன்ற கூட்டத்தில், ஸையத் நத்தஹர் முதஹ்ஹிருத்தீன் ஆட்சி கட்டிலில் அமர்ந்து அரசோச்சிய காலத்தில் ஆலோசகராய் இருந்து உதவி புரிந்து வந்த அவர்களின் தாயார் பத்ஹுன்னிஸா மக்கள் மன்றத்தில் மிகுந்த சோகத்துடன் பேசத் தொடங்கினார்கள்.

*அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக் கப்பாலும்*
*கொண்டநின்னை யாரறிந்து கொள்வார் பராபரமே*
*- தாயுமான சுவாமிகள்*

நாட்டு மக்களுக்கு தமது பணிவான ஸலாத்தினை தெரிவித்துக்கொண்டு ராஜமாதா வேதனையுடன் கூறிய வார்த்தைகள் குடிமக்களின் நெஞ்சை வருடியது.

“அரபு பாலை நிலத்தில் வாழும் மக்களுக்கு பெரும் வியப்பை அளிக்கும் இந்த நகரம் இஸ்லாமிய உலகில் நகரங்களின் மணப்பெண், என்றும், உலகின் அழகுதலம் என்றும் புகழப்படுகிறது. இதனை அருள்மறை குர்ஆன் கூறும் ஆது இன மக்கள் நான்கு இலட்சம் கல் தூண்கள் நாற்பது ஆயிரம் பளிங்கு தூண்கள் ஆகியவற்றை நிறுவி நிர்மாணித்தாதாக கூறுகிறார்கள்.

“பின்னர் நம்ரூதின் மகன் திமிஷ்க் என்பவன் இபுறாகிம் (அலை) அவர்களின் வழிப்பட்டு நின்று இங்கு இறைவணக்க பள்ளியொன்றை நிறுவியதாகவும் கூறுவார்கள். இந்த நகரில்தான் நபி இபுறாகிம் (அலை) அவர்கள் - பிறந்ததாகவும் செய்திகள் உண்டு.

“நபி தாவூத் (அலை) வெற்றி கொண்டு இந்நகரை தமது ஆட்சிக்குள் கொண்டு வந்ததாக கூறுவர். நபி ஈசா(அலை) தமது அன்னை மரியம் (அலை) அவர்களுடன் இங்கு ரப்வா என்ற பகுதியில் வாழ்ந்ததாக வரலாறு உண்டு. உலகமாவீரர் சிக்கந்தர் துல்கர்னைன் இந்நகரை கைப்பற்றியதாகவும் செய்தி உண்டு.

“ஹலரத் உமர் (ரலி) அவரிகளின் ஆட்சி காலத்தில் இந்தநகரின் கவர்னராக பொறுப்பேற்றுக் கொண்ட ஹலரத் முஆவியா (ரலி) அவர்கள் பிற்காலத்தில் தன்னை கலிஃபாவாக அறிவித்துக் கொண்டார். ஆனால் ஒரு சில நூற்றாண்டுகளிலேயே அப்பாஸிகள் முஆவியாவின் வாரிசுகளான உமய்யாக்களிடமிருந்து இந்நகரை கைப்பற்றிக் கொண்டனர்.

“இவ்வாறு நீண்ட வரலாறும் நிறைந்த சிறப்புகளும் கொண்ட இந்த நகரில் நூறு ஆண்டுகளுக்கு முன் சுல்தான் அப்துல் மஜித் என்ற குணவான் அப்பாஸிய கிலாஃபத்தின் கீழ் ஆட்சியாளராக இருந்தார்.

“மதினாவிலிருந்து குடிபெயர்ந்து வந்த எனது மாமனார் ஸையத் இக்தியார்(ரலி) அவர்களின் மாண்பினை உணர்ந்து சுல்தான் அப்துல் மஜீத் லெபனான் மலை குன்றுகளின் மேற்கு தாழ்வில் உள்ள பஹன்னிஸ் என்ற நகரில் தங்கி பரிபாலனம் செய்துவரும் படி உத்தரவிட்டார்.

“சுல்தான் அப்துல் மஜீத் அவர்களின் அந்திம காலத்தில் அவருக்கு வாரிசில்லாத காரணத்தால் எனது மாமனாரின் மீது அவர் கொண்டிருந்த மரியாதையின் காரணமாக எனது கணவர் ஸையத் அஹ்மத் கபீர் அவர்களை இந்நகரின் ஆட்சி கட்டிலில் அமர்த்தினார். நகரத்தின் இந்த வரலாறெல்லாம் நகர மக்களுக்கெல்லாம் தெரிந்த ஒன்றுதான்.

“எனது கணவரின் மறைவுக்குப் பிறகு, ஆட்சி கட்டிலேறியவரும், எனது மைந்தரும், இன்று காணாமல் போய்விட்டதாக நாமெல்லாம் அலமலர்ந்து நிற்கும் இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் ஏழு வயது பருவத்தில் கொட்டோசை எழுப்பி நம்மை படையெடுத்து வந்த ரோமானியப் பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தார்.

“அன்று முதல் அவரை நாம் “தப்லெ ஆலம்” என்று அழைத்து வருகிறோம் என்ற ஒரு தகவலும் உங்களுக்கு தெரிந்ததே. ஆனால் நீங்களெல்லாம் அறியாத அவரைப்பற்றிய வேறு சில தகவல்களை உங்களுக்கு கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

“மக்கமா நகரில் ஹஜ்ஜூ கடமை ஆற்ற சென்ற என் கணவர் பெருமானார்(ஸல்) அவர்களின் சன்னிதானத்துக்கு சென்று தனக்கு குழந்தைப்பேறு வேண்டுமென்று மன்றாடிய போது எனது கணவருக்கு ஒரு மாதுளம் பழத்தை வழங்கி அதை அவர் உண்டபின் தான் ஸையத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் எங்களுக்கு மைந்தராக அருள் பாலிக்கப்பட்டார்.

“அவரை நான் கருக்கொண்டிருந்த காலத்தில் எங்களது மூதாதையரான ஸையதினா அலீ (கர்) அவர்கள் என் கனவில் தோன்றி “உமது மைந்தர் உலகம் போற்றும் இறைநேச செல்வர்களில் ஒருவராகவும் இறைவனின் குத்பாகவும் விளங்குவார்” என்று ஆசிர்வதித்தார்கள்.

“அவர் என்னுடைய கருப்பையில் இருந்தபோதே நிகழ்த்திய அற்புதங்கள் சிலவற்றை மக்கள் முன் இன்று கூற விரும்புகின்றேன். “ஒரு முறை நான் விடியா கருக்கலில் ஃபஜ்ரு தொழுகைக்காக எழுந்தபோது விளக்குகள் காற்றில் அணைந்து இருள் சூழ்ந்துவிட்டது. துணுக்குற்ற என் கண்முன் ஒரு ஒளி தோன்றியது. யாரோ ஒரு சிறுவர் அவ்வொளியைக் கொண்டு விளக்கேற்ற கண்டேன்.

ஒளி பரவ கண்டேன். நொடிப்பொழுதில் “நானே உங்கள் கருவிலுள்ள மைந்தன்!” என்று கூறி மறைந்தார்.

“மீண்டும் ஒரு நாள் நான் அருள்மறை குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கும் பொழுது பிழையாக ஒரு வாக்கியத்தை ஓதிவிட்டேன். அடுத்த கணமே என் அடிவயிற்றிலிருந்து குழந்தையின் குரல் ஒலித்தது. “அம்மா இப்படி ஓதுங்கள், பிழையாக ஓதாதீர்கள்” என்று திருத்தி இனிய குரலில் ஓதக்கேட்டேன்.

“எனது மைந்தர் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் ஒரு வயது பாலகராக இருந்தபோது எமது அரண்மனையில் ஊமை சேடியாயிருந்த ஒருபெண் மைந்தரை எடுத்து முத்தமிடவும் அவர் வாயிலின் எச்சில் அவள் வாயில் பட்டு அவள் பேசத் தொடங்கிவிட்டாள்.

“மைந்தரின் வயது ஐந்தாகியபோது எனது கணவரிடம் தமூத் என்ற யூதர் வந்தார். தனது குருட்டு சிறுவனின் கண்பார்வை மீள ஸையது நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீனை துஆ கேட்கும்படி கூறுங்கள் என்று வேண்டினார். எனது மைந்தர் தனது உமிழ்நீரை அச்சிறுவனின் கண்ணில் தடவியபோது அந்த குருட்டு சிறுவன் கண்பார்வை பெற்றுவிட்டான்.

“இந்த சம்பவங்களை விட அதிசயத்தக்க சில விஷயங்களும் இளவல் ஸையத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீனின் வாழ்க்கையில் நடந்ததுண்டு. பல நாட்களில் நள்ளிரவில் அவர் படுக்கையில் இல்லாமல் காணாமல் போவதுண்டு. விடியலில் நான் வினவுகிறபோது சில விசித்திர விஷயங்களை எனக்கு அவர் கூறியுள்ளார். உலகின் பல பாகங்களுக்கும் சென்று வந்ததாகவும் கூறுவார். பல இடங்களில் பிரசன்னமாகி தான் செய்துவந்த அற்புதங்களையும் சொல்லி காட்டுவார்.”

இவ்வாறு காணாமல் போய்விட்ட தன் மைந்தர் நிகழ்த்திய அற்புதங்களை மக்கள் முன் வெளிப்படுத்திய அன்னையின் வார்த்தைகளை கேட்டு நகர மக்கள் அதிசயித்து நின்றனர். அன்னை தொடர்ந்து கூறினார்கள்.

“எனவே அவருடைய பிரிவை எண்ணி உங்களில் யாரும் வேதனைப்படவேண்டாம். அவர் ஆண்டவனை அடைகின்ற நோக்கத்துடன் குருவைத் தேடி ஹுர்மூஸ் நகரை நோக்கி சென்றுவிட்டார். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் பிரிந்து சென்றுவிட்ட அவருக்காக நாம் ஆண்டவனிடத்தில் துஆ செய்வோம்.

“திமிஷ்க் என்ற இந்த நகரைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்களின் வரலாற்றில் ஒரு சம்பவமுண்டு. பூவுலக சொர்க்கம் என்ற பெயரும் இந்த நகருக்கு பூர்வீகத்தில் இருந்து வந்திருக்கிறது.

“நபி (ஸல்) இளமை பருவத்தில் வணிகத்தின் பொருட்டு இந்நகரின் எல்லை வரை வந்துவிட்டு “நான் ஒரே ஒரு தடவை தான் சுவனம் புக விரும்புகின்றேன். எனவே இப்போது இந்நகரில் புகவிரும்பவில்லை” என்று கூறி திரும்பிவிட்டார்கள் என்று ஒரு வரலாறு உண்டு.

“எனவேதான் எனது மைந்தர் ஸையது நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் பெருமானார் நுழைய விரும்பாத நகரில் தான் வாழ விரும்பாமல் வெளியேறி விட்டாரோ என்று என் சிந்தனையில் ஒரு வேதனை எண்ணம் வளர்கிறது!” என்று கூறிவிட்டு ராஜ மாதா கண் பனித்த போது நகர மக்களோடு நாவலர்களும் காவலர்களும் தளபதிகளும் படைவீரர்களும் கண்ணீர் விட்டு அழுதனர்.

அதே நேரத்தில் ஆயிரம் மைல்களுக்கப்பால் இளவல் ஸையத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் பாலைவனங்களையும் வனாந்தரங்களையும் கடந்து ஹுர்மூஸ் நகரை நோக்கி குதிரையின் மீது பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

## பாபா தப்லே ஆலம் பாதுஷா
## நத்தஹர் ஒலி அவர்களின் குலவழி (ஹஸப் நஸப்)

ஹலரத் சையிதினா முகம்மது (ஸல்)
ஹலரத் சையிதினா அமீருல் மூமினீன் அலீ (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் ஹுசைன் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் முகம்மது பாக்கர் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் ஹசன் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் அலீ தகீ (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் இக்தியார் (ரலி)
ஹலரத் சையிதினா சுல்தான் அஹ்மத் கபீர் (ரலி)
அவர்களின் மைந்தர்கள்
சுல்தான் நத்தஹர் முத்தஹிருத்தீன் தப்லே ஆலம் (ரலி)
சுல்தான் ஸையத் ஜலாலுத்தீன் (ரலி)

நன்றி -தப்லே ஆலம் பாத்துஷா
1000 ம் ஆவது ஆண்டு உரூஸ் சிறப்பு மலர்.

*குரல் நெறியவே கதறி கூப்பிடினும் காணாத*
*கருவே குருவே என் கண்ணே ரகுமானே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## ஹுர்மூஸ் நகர் நோக்கி குதித்தோடிய குதிரை

பாலைவனம் மர்மம் நிறைந்த பூமி. அது மனிதர்களை அச்சமூட்டுகின்றது. முடிவே இல்லாதது போல விரிந்து பரந்துள்ள மணல்வெளியைப் பார்ப்பவர்கள் வியந்து பயந்து நிற்கின்றனர். பாலைவனத்திலிருந்து எழும் அழைப்புக் குரல் ஆண்டவனுடைய குரலாகும் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

மோசே என்னும் நபி மூசா (அலை) அவர்களுக்கு வனாந்தரத்தில்தான் ஆண்டவனின் ஒளித்தோற்றம் வெளிப்பட்டது. ஏசுவாகிய நபி ஈசா (அலை) சத்தியத்தைப் பாலைவனப் பாதையில் தரிசித்தார்கள். நபி முஹம்மத்(ஸல்) பாலைவனத்தில் மெய்ப்பொருளை தன்னுள் உணர்ந்தார்கள்.

யுக யுகாந்திர காலமாக தன்னையும் தன்னை படைத்தவனையும் அடையும் தாகம் மிகுந்தவர்கள் பாலைவனத்தில் தனியே நடந்து செல்கிறார்கள், வனாந்தரங்களில் வாழ்கிறார்கள். ஞானிகளாகவும், துறவிகளாகவும், யோகிகளாகவும், இறை நேசர்களாகவும் பெயர் பெறுகிறார்கள்.

முடிதுறந்த ஷாம் நாட்டின் பாலஅரசர் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் அரேபிய பாலை நிலத்தை கடந்து ஈராக் நாட்டின் பஸ்ரா நகரத்தை நோக்கி விரைந்தார்கள். அரபு குதிரை ஒன்றில் பயணித்த அவர்கள் பத்து நாட்களில் பஸ்ரா துறைமுகப்பட்டினத்தை சென்றடைந்தார்கள்.

*குருலிங்க சங்கமமாய் கொண்ட திருமேனி*
*அருள்மயமென்று அன்புற்று அருள்பெறுவ தெந்நாளோ*
*- அருள்திரு தாயுமான சுவாமிகள்*

இளவலிடம் பயணத்துக்கு தேவையான தங்க நாணயங்கள் கைவசமிருந்தன. எம்பெருமான் (ஸல்) அவர்களின் கனவுத்தோற்றக் கட்டளையை பின்பற்றி உற்றார், ஊரார், உறவுகளைத் துறந்து குருவைத் தேடி பயணித்திருக்கும் இளவல் ஸையத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீனின் இதயம் கனத்திருந்தது.

சூஃபி ஞானிகளான ராபியத்துல் பஸரியாவும் ஹசனுல் பஸரியும் மெய்ஞ்ஞான வாழ்க்கை வாழ்ந்த அந்த நகரம் அவர்களை வரவேற்றது அந்நகரின் பழமை கட்டிடங்களில் ஒன்றாகத் திகழும் மஸ்ஜீத் அலி என்னும் பள்ளி வாசலில் சென்று தங்கினார்கள்.

ஆளரவமற்று கிடந்த பரந்த பள்ளிவாசலின் வெளித்தாழ்வாரத்தில் அன்று பிற்பகலில் அவர்கள் உறங்கி விழித்த போது கண்முன் ஒரு (ரூயா) சூக்கும காட்சி தோன்றியது. அவர்களின் மார்பை பிளந்து கொண்டு வெளிப்பட்ட (கல்பு) இருதயம் ஒளிர்ந்தது. அதனிலிருந்து “அனல்லாஹ் - நான்தான் இறைவன்” என்று ஒரு குரல் ஒலித்தது.

இளவல் திடுக்கிட்டு எழுந்தார்கள். அடுத்த கணம் அந்த காட்சி பார்வையை விட்டு நீங்கியது. ஆனால் அகத்தில் உள்ள ஆண்டவனை அறிந்து கொள்வது எப்படி என்ற ஆதுரம் இளவலின் மனதில் தலை தூக்கியது.

அற்புதமான அரிதுயில் சூக்கும காட்சி தன் முன் வெளிப்பட்ட இந்த பஸ்ரா நகரில், தன் ஆர்வத்துக்கு ஏதேனும் பதில் கிடைக்கும் என்று ஆவலுடன் அவர்கள் அமர்ந்திருந்தபோது, மஸ்ஜிதின் உள் மண்டபத்தில் ஒரு பெரியார் தன் சீடர்களுடன் அளவளாவி அமர்ந்திருக்க கண்டார்கள்.

கூட்டத்திலிருந்து விலகி சற்று தொலைவில் அமர்ந்து அப்பெரியாரின் சொற்பொழிவை செவிமடுத்தார்கள். நாடியவர்களை நமது ஒளியின் பக்கமாக அழைக்கிறோம் - என்ற திருக்குர்ஆன் வாக்கியம் மனதில் உதித்தது. ஆம் அப்போது பேசிக் கொண்டிருந்த பெரியார் மனிதனின் (கல்ப் என்னும்) இருதயத்தையும் (நஃப்ஸ் என்னும்) இச்சையையும் பற்றி பேசிக் கொண்டிருந்தார்.

"ஆதமுடைய மகனின் (மனிதனின்) உடலில் நெஞ்சென்ற மாளிகையைக் கட்டினேன். நெஞ்சுக்குள் இருதயத்தையும், இருதயத்தில் சிந்தனை அறிவையும், அறிவுக்குள் எனது இரகசியத்தையும் உண்டாக்கினான் அந்த இரகசியத்தில் நான் இருக்கிறேன்!" என்று ஆண்டவனாகிய அல்லாஹ் கூறுகிறான் என்பது பெருமானார் (ஸல்) கூறியுள்ள (ஹதீஸ் அல்குதுஸி) இறைவாக்கியமாகும்.(1)"

இவ்வாறு அப்பெரியார் கூறியதும் கூட்டத்தில் அமர்ந்திருந்த அவரது சீடரைப் போன்ற ஒருவர் எழுந்து பவ்யமாக நின்றார். "எஜமானே இவ்வளவு நீண்ட பீடிகையோடு இதனை கூறவேண்டுமா? ஏன்? மனிதனுக்குள் ஆண்டவன் குடியிருக்கிறான் என்று சுருக்கமாக கூறிவிடக்கூடாதா?" என்று வினவினார்.

கூட்டத்தில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. அல்லாஹ்வைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது நகைச்சுவை பேசி நையாண்டியா செய்கிறாய்? என்று அந்த ஷெய்கு ஆகிய பெரியார் சீடன் மீது பாயவில்லை, மாறாக "பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படித்தான் ஆன்மீக விஷயம் பேசும்போது தோழர்கள் மத்தியில் களைப்பு தோன்றினால் விஷயங்களை நகைச்சவையாக மாற்றி விடுவார்கள்" என்றார். பெரியாரின் கூற்று மறுபடியும் சீடர்கள் மத்தியில் சிரிப்பலைகளை உண்டாக்கியது. ஷெய்கு தொடர்ந்து பேசினார்கள்.

"ஆனால் அன்பர்களே!

*"மன்அரப நப்ஸஹு ஃபகத் அரப ரப்பஹு* - தன்னுடைய (நப்ஸாகிய) தன் அறிவை அறிந்தவன் தன் இறைவனை அறிந்துக் கொண்டான்! என்று இந்த விஷயத்தை பெருமானார் (ஸல்) சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியிருக்கிறார்கள்.

"ஆனால் அந்த (நஃப்ஸு என்ற) தன் அறிவை அறிவதுதான் மிகப்பெரிய விஷயம் அன்பர்களே அறிந்து கொள்ளுங்கள் (நஃப்ஸின்) அறிவின் வகையை ஏழாக ஞானமகான்கள் வகைப்படுத்தி விளக்கம் தந்திருக்கிறார்கள்.

---

*நஃப்ஸு : அறிவு – ஆசை – இச்சை*

“அறிவின் (நஃப்ஸின்) முதல் தரம் நஃப்ஸே அம்மாரா என்பதாகும். இந்த தரத்தில் தன் நஃப்ஸை வைத்துள்ள மனிதன் தனது ஐம்புலன்களாலும் ஆளப்பட்டு மிருகங்களைப் போல் அலைகிறான். உண்பதும், உடுப்பதும் புணர்வதும் அவனது தலையாய கடமையாக கருதுவான். இவன் சரீஅத் சட்டத்தை பேணி நடந்து லாயிலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை சப்தமிட்டு முழங்கி வந்தால் பண்படமுடியும்.

“நஃப்ஸே லவ்வாமா. இது நஃப்ஸின் இரண்டாவது நிலை. இது மனிதன் தன் ஆணவத்தையும் அகம்பாவத்தையும், உலகின் இன்பத்தில் தடுமாறி நிற்கும் தன் அவல நிலையையும் உணர்ந்து தெளியும் நிலையாகும்.

“இந்நிலையை இறைவன் குர்ஆனில், குற்றம் செய்தவனை நிந்திக்கும் அவனுடைய இருதயத்தின் மீது சத்தியம் செய்கிறேன் (72.3) என்று கூறியுள்ளான். தவறுகளுக்காக வருந்தும் மனிதன் பெருமை, பொய்மை, ஏமாற்று, புறம் பேசுதல், அவதூறு, சாபமிடுதல் போன்ற தீய பண்புகளை விட்டுவிலகி லாயிலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை தன் காதில் விழுமளவு குறைந்த சப்தத்தில் ஓதி வரவேண்டும். ஞான வழியை (தரீக்கத்தை) நாடி ஷெய்குமார்களை குருமார்களை அணுக வேண்டும்.

“நஃப்ஸே முல்ஹிமா என்பது நஃப்ஸின் மூன்றாம் நிலை. ஷெய்கு ஆகிய குருவின் வழிகாட்டலில் ஏற்படும் புனிதநிலை.

“ஆத்மாவின் மீதும் அதனை (மனிதனாக) உருவாக்கியவன் மீதும். சத்தியமாக எவன் (பாவங்களை விட்டும் தன் ஆத்மாவை) தூய்மையாக்கி கொண்டானோ அவன் நிச்சயமாக சித்தியடைந்துவிட்டான்.

“எவன் (தன் ஆத்மாவாகிய) அதனை (பாவ மண்ணில்) புதைத்து விட்டானோ அவன் நிச்சயமாக நஷ்டமடைந்துவிட்டான்! (91.7.8.9) என்று இறைவன் ஃபுர்கானில் நஃப்ஸின் இந்த மூன்றாம் நிலை குறித்து கூறியுள்ளான்.

“அறிவின் (நஃப்ஸின்)இந்த நிலையிலுள்ள மனிதன் கலிமாவை மவுனமாக ஓதியபடி ஹகீகத் ஆகிய சத்திய நிலையை நெருங்கி விடுவான்.

“நான்காம் நிலை நஃப்ஸே முத்ம இன்னா ஆகும். இந்நிலையை அடைந்தோர் சிறுபாவங்கள், பெரும் பாவங்களை விட்டுவிலகி நற்குணம் நற்செயல்கள் பெற்று விலாயத் ஆகிய இறைநேசப் பண்புகளை எய்தியவராகவும் இருப்பர்.

“இவர்களைத்தான், ஓ சாந்தி பெற்ற ஆன்மாவே நீ இறைவனை பொருந்தியவனாகவும் நல்லடியார்கள் கூட்டத்தில் இணைந்து சுவர்க்கத்தில் புகுந்து கொள்வாயாக! என இறைவன் கூறுகிறான் என்று திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

“ஆனால் அடுத்துள்ள, நஃப்ஸே ராளியா நஃப்ஸே மர்ளியா என்ற அறிவின் இரு நிலைகளும் அடியான் இறைவனை பொருத்தமாக பொருந்திக் கொள்வதையும், இறைவன் அடியானை பொருந்திக் கொள்வதையும் குறிப்பிடும். இதன் விளைவுதான் நஃப்ஸே காமிலா பேரின்பம் பொங்கும் அறிவின் (நஃப்ஸின்) நிலை.

“இந்த சாந்தி நிலையை நாம் அடைந்தாலும் அடையாவிட்டாலும் மரணமடைந்ததும் மண்ணறையில் மையித்தாக நம்மை திணித்து, கூடி நிற்பவர்கள், “யா அய்யதுஹன் நஃப்ஸே முத்மயின்னா இலா ராலியத்துல் மர்லியா! அதாவது - ராலியா, மர்லியா என்ற தெய்வப் பொருத்தம் பெற்ற சாந்தி அடைந்த ஆத்துமாவே!” என்று விளித்து வாழ்த்து கூறுகிறார்கள்.

“ஆனால் மண்ணறையில் புகுத்தப்பட்ட எத்தனை பேர் தெய்வப்பொருத்தம் பெற்றவர்கள்?” ஷெய்கு அவர்கள் கேட்ட கேள்வி சீடர்களை சிந்தனையிலாழ்த்தியது.

“தெய்வப் பொருத்தம் பெறாத மனிதர்கள் ஆத்மாவின் நிலை என்ன?” ஒரு சீடர் வினவினார். “பேய்தான்!” குருவின் பதிலை கேட்டதும் “நாமெல்லாம் பேய்கள்தானா?” என்று வியந்தார் ஒரு சீடர். கூட்டத்தில் மீண்டும் சிரிப்பொலி எழுந்தது.

“ஆம் நாம் பேயாகிவிடக் கூடாது. நஃப்ஸே காமிலா என்ற பெண்ணை மணந்து கொண்டு பேரின்ப சுவர்க்கம் புகவேண்டும்!” ஷெய்கு அவர்கள் கூறியதை கேட்டுவிட்டு,

“மறுபடியும் பெண்ணா?” என்றார் ஒரு சீடர். அவையில் சிரிப்பொலி பரவியது. “ஆம் பெண்தான், மண்ணுலகப் பெண்ணல்ல விண்ணுலகப் பெண் மனோண்மணி என்ற தெய்வப்பெண்!” என்றார் ஷெய்கு ஆகிய அப்பெரியார். “அவளை எங்கு தேடுவது? எப்படி அடைவது?” என்றார் மற்றொரு சீடர்.

“தாயின் பாதத்தில் சுவர்க்கமிருக்கின்றது என்ற ஹதீஸ் மொழியைப் போல குருவின் பாதகமலத்தில் நஃப்ஸே காமிலா என்ற பேரின்ப காதலி உனக்கு மாலையிடக் காத்திருக்கிறாள்!” என்ற ஷெய்கின் மொழி கேட்டு மீண்டும் கூட்டத்தில் சிரிப்பொலி எழுந்தது.

மாலை தொழுகைக்கு பாங்கொலி எழுந்தது. இளவல் ஸையத் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் கண்களில் துளிர்த்த கண்ணீரை துடைத்துக் கொண்டார்கள். விரைந்தெழுந்து சென்று தன் பரியின் முதுகில் அமர்ந்து அதனை தட்டி பறக்கச் செய்தார்கள்.

”எனது குருநாதரே எம்பிரான் முஹம்மத் (ஸல்) எனக்கு சுட்டிகாட்டிய தாங்கள் வாழும் ஹுர்மூஸ் என்னும் பதியே எனக்கு மக்கமா நகரமாகும்” என்று முணுமுணுத்தார்கள்.

“லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்- இதோ வந்தேன் இறைவா! உனை பணிந்தேன்! இதோ வந்தேன் இறைவா!” உரக்க சப்தமிட்டபடி குதிரையில் அமர்ந்து செல்லும் இளைஞரைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தனர் அங்கு நின்றிருந்தவர்கள்.

“யார் இந்த பைத்தியக்காரர்? அல்லாஹ்வின் இல்லமான கஃபத்துல்லாவை சுற்றி வலம் வருவோர் ஓதும் தல்பியாவை உச்சரித்துக் கொண்டு பரிமீது பாய்ந்து செல்லும் இவர் யார்? என்ன வினோதம்? மக்கமா நகரம் கூட மேற்கிலல்லவா இருக்கிறது. இவர் ஏன் கிழக்கே பாய்ந்து செல்கிறார்?” என்று பரிகசித்தனர்.

ஷாம் நாட்டின் முடி துறந்த பால அரசரோ இரவின் இருளைக் கிழித்துக் கொண்டு பாரசீக வளைகுடா கடலோரப் பாதையில் வெகுவேகமாக பயணித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வப்போது அவர்கள் “யா ஷெய்க்! யா ஷெய்க்!” என்று எழுப்பிய கூச்சல் விண்ணை தொட்டது.

---

*உண்மை விசுவாசி இம்மையை , மறுமையை வேண்டமாட்டான், இறைவனையே நாடிநிற்பான் - ஃபத்ஹுர்ரப்பானி - 15 - ஹலரத் கௌதுல் அஃலம் (ரலி)*

*பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிருக் குள்ளிருந்தும்*
*ஆர்க்குந் தெரியாமல் ஆனாய் பராபரமே*
*- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## ஆசையின் பாதையில் ஆவிகளின் கூத்து

சட்டல் அல் அரப் என்ற அகன்றப் பேராறு கடல் நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது. வடக்கே அர்மீனியாவிருந்தும் சிரியாவின் வடக்கெல்லையிலிருந்தும் புறப்பட்டு வரும் ஃபுராத், திக்ரிஸ் நதிகள், பாக்தாத் நகருக்கு அருகில் சங்கமித்து தெற்கு நோக்கிப் பாயும் பள்ளத்தாக்கு தான் 'அதன்' என்னும் சுவர்க்கம் இருந்த இடமாக கருதப்படுகிறது.

இரவோடிரவாக அப்பேராற்றைப் படகில் கடந்து குதிரையில் பயணித்து ஈராக்கின் எல்லையை நீங்கி ஈரானின் பெருநகரமான அபதானை எதிர்கொள்ளும் நெடுஞ்சாலையில் விரைந்தார்கள் இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன்.

ஆனால் நள்ளிரவு நெருங்கவே வழியில் பாழடைந்து கிடந்த முற்கால பாபிலோன் நகரின் இடிந்த கோட்டை வாசலில் இறங்கி இரவை கழிக்க எண்ணினார்கள்.

பாபிலோன் நகரத்தை தலைநகரமாகத் கொண்டு ஆட்சி நடத்திய செமிட்டிக் அரசர்களின் கோட்டை கொத்தளங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் கூட வழிப்பயணிகள் தங்கிச் செல்லக்கூடியப் பாங்குடன் காணப்பட்டன. ஆனால் நபிமார்களில் பலர் வாழ்ந்து மறைந்த இந்த புராதன பூமியில்தான் சிலைவணக்கம் தோன்றியதாகவும் கூறுகின்றனர்.

காட்டுத் திராட்சை கொடிகளிலிருந்து கனிந்து விழுந்த பழங்களின் வாடை கலந்ததால் எங்கும் மதுவின் மயக்க நெடி காற்றில் பரவியிருந்தது. காட்டு வவ்வால்கள் தேவதாருமரங்களின் நெடியகிளைகளில் உறங்காமல் அங்குமிங்கும் உலவி சலசலப்பை ஏற்படுத்தின. கோட்டான்களின் குளறல் ஒலி பீதியை உண்டாக்கியது.

*பூதமுதனாதிவரை பொய்யென்ற மெய்யரெல்லாம்*
*காதலித்த இன்பக் கடலே பராபரமே*
*- அருள்திரு தாயுமான சுவாமிகள்*

அச்சமின்றி படுத்திருந்தாலும், இளவல் உறக்கம் வராமல் விரிப்பின் மீது சிந்தனை வயப்பட்டு புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் படுத்திருந்த திண்ணையின் எரிர்ப்புறம் நெடுஞ்சாலையின் மறுபக்கத்தில் நின்றிருந்த நெடிய புளிய மரத்திலிருந்து பொத்தென்று யாரோ குதித்தது போன்ற சப்தம். இளவல் கண்திறந்து பார்த்தார்கள்.

எரி கொள்ளிப் பிசாசைப் போன்ற ஒரு மனித உருவம்! திடுக்கிட்டு எழுந்த இளவல் அந்த உருவத்தை உற்றுப் பார்த்தார்கள் இது திருடர்களின் அச்சுறுத்தலா அல்லது ஏதேனும் ஜின் வர்க்கத்தை சேர்ந்த அமானுஷ்ய தோற்றமா?

எழுந்து அமர்ந்த இளவல் படுக்கைக்கு அருகில் கிடத்தியிருந்த நீண்டவாளை கையிலெடுத்தார்கள். “அவுது பில்லாஹி மினஷ்ஷைத்தாநிர் ரஜீம் - விரட்டபட்ட சைத்தானிடமிருந்து இறைவா உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்” என்று அவர்கள் உரக்க உச்சரித்ததும் அச்சமிக்க அந்த தோற்றம் உடனே மறைந்தது.

இளவல் அமைதியாக யோசித்தார்கள். இத்தகைய அமானுஷ்ய அனுபவங்கள் அவர்களின் வாழ்க்கையில் இதற்குமுன் ஏற்பட்டது உண்டு. ஆனால் ஜின்கள் தேவுகள், பேய்கள், பிசாசுகளைப் பற்றி அவர்கள் படித்திருக்கிறார்கள், கேள்விப்பட்டிருக்கிறார்கள், நேரில் கண்டதில்லை.

ஜின்களைப் பற்றியும் வானவர்களைப் பற்றியும் இறைவன்தன் திருமறையிலேயே உறுதியாக கூறியுள்ளான். அர்ரஹ்மான் அருளாளன் என்ற பாடத்தில் “இறைவனின் அருட்கொடைகளில் எதனை நீங்கள் பொய்யாக்குவீர்கள். அவன் களிமண்ணால் மனிதனைப் படைத்தான். நெருப்பால் ஜின்னைப் படைத்தான்” என்று கூறப்பட்டுள்ளது.

ஜின் என்ற பதத்தின் பொருளே மறைத்தல் என்பதாகும். எனவே மனிதனின் கண்ணுக்கு மறைந்துவாழும் ஜின் வர்க்கத்தையோ இதர அமானுஷ்ய படைப்புகளையோ இல்லையென்று நம்மால் கூறமுடியாது. மண்ணாலும் நீராலும் படைக்கப் பட்டுள்ள மனிதன் நெருப்பாலும் காற்றாலும் படைக்கப்பட்ட ஜின் அல்லது தேவர்கள் தேவு பூதம் என்ற இனத்தை பார்க்க முடியாது.

அதுபோலவே சாத்தான்கள் அரக்கர்கள் இனத்தையும் மனிதர்கள் பார்க்கமுடியாது. அவர்கள் எங்குவாழ்கிறார்கள் என்பதும் யாருக்கும் தெரியாது. ஏனெனில் தான் வாழும் பிரபஞ்சத்தைப் பற்றிய மனிதனின் அறிவு, கற்றது கையளவு கல்லாதது கடலளவு என்ற பழமொழிக்கு அத்தமானதுதான்.

ஆனால் ஜின்கள் தேவர்கள் அல்லது சாத்தான்கள் அரக்கர்கள் போன்று மனிதர்கள் பார்வைக்கு தெரியாமல் வதியும் பேய்கள், பிசாசுகள் பற்றி வேறு விளக்கங்கள் உள்ளன. இவை பொதுவாக இறந்தவர்களின் ஆவிகள் என்று முற்கால ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மனிதனின் உடலுக்குள் சூக்கும உடலும் சூக்கும உடலுக்குள் ஆத்துமாவும் உள்ளன. மனிதன் இறந்ததும் உருவமில்லா பொம்மைபோன்ற சூக்கும உடலில் அவன் ஆன்மா புகுந்து கொள்கிறது. அந்த உடலில் இருந்தபடி அவன் செய்த நன்மை தீமைகளுக்கு உடலிழந்த மனிதன் சூக்கும கோலத்தில் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறான்.

தெய்வ நிலை அடையாத பெரும்பாலான மனித கோடிகள் இவ்வாறுதான் பேயாய் பிசாசுகளாய் அலைகிறார்கள் என்று எல்லா மதங்களுமே கூறுகின்றன. தெய்வநிலை அடைந்தவர்களின் சூக்கும உடல் பூத உடலின் ரூபத்தை கிரகித்துக் கொள்வதோடு காரண மற்றும் மாகாரண ஜோதிகளுடன் பிரகாசிக்கும்.

உலகில் பிறந்த மனிதன் தெய்வநிலை அடையவேண்டும். அதாவது இறைநேசர்கள் என்ற நிலை அடையவேண்டும் அவுலியாக்களாகிய - இறைநேசர்கள் அச்சமும் துக்கமும் அற்றவர்கள் என்றும் அவர்கள் மரணிப்பதில்லை மாற்றகம் புகுந்திருக்கிறார்கள், அவர்களுக்கு இறைவனின் புறத்திலிருந்து உணவு வழங்கப்படுகிறது என்றும் திருகுர்ஆன் கூறுகிறது.

வையத்து வாழ் வாங்கு வாழுவார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று திருக்குறள் விவரிக்கிறது. மனிதன் தன் இறுதி இலட்சியமான இறைநேச நிலையை அடையும்வரை உலகுக்கு திரும்பி வரவேண்டியிருக்கும், உலகின் அவஸ்தைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும் இது தவிர்க்க முடியாத ஒன்று.

தாம் கற்றதையும் கேட்டதையும் சிந்தித்தவாறு உட்கார்ந்திருந்த இளவல் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் முன் அந்த கொள்ளிவாய் பிசாசு போன்ற தீய உருவம் மீண்டும் எழுந்து நின்றது அவர்களை முன்னோக்கி நடந்து வந்தது. சிறிதே அச்சம் அவர்கள் மனதில் துளிர்த்தது. படுத்திருந்த இடத்தில் எழுந்து நின்று அவூதையும் ஃபலக்கையும் அந்நாஸையும் திருப்பி திருப்பி ஓதினார்கள். ஆனால் அந்த தீய உருவம் அவர்களை நெருங்கி வந்தது.

ஒரு கண நேர நிலைகுலைதலுக்குப்பின் சுதாரித்து கொண்டு, "யாரசூலுல்லாஹ்!" என்று கூச்சலிட்டார்கள். "கனவில் உங்கள் உத்தரவை ஏற்று ஊரை உறவை விட்டு உலக வாழ்கையை விட்டு வெளியேறினேன். இது என்ன சோதனை?" அவர்கள் உள்ளம் தேம்பியது.

தொடர்ந்து "யா அலீ! யா அலீ!" என்று கூச்சலிட்டார்கள். அடுத்த நொடியில் அங்கு பிரகாசமான மற்றொரு ஒளித் தோற்றம்! எழில் நிறைந்த ஒரு மாமனிதர் ஜோதி ரூபமாய் தோன்றி தனது வாளால் எரிகொள்ளியாய் நின்ற பிசாசின் அரக்க உருவத்தை வெட்டி வீழ்த்தியது. வீரிட்டு அலறிய அமானுஷ்ய படைப்பு இருளில் கரைந்து இல்லாமல் மறைந்தது.

ஆனால் ஒளி பொருந்திய ஜோதிமனிதரின் கூற்று அவர்மறைந்த பின்னரும் இளவலின் செவியில் ஒலித்தது. "நான்தான் உமது குரு என்பெயர் ஷைகுஅலி. எம்பெருமானின் (ஸல்) உத்தரவுப்படி ஹுர்முஸ் நகருக்கு வந்து சேரும்."

அடுத்த க்ஷணமே அம்மாமனிதரின் உன்னதத்தை எண்ணிப்பார்த்தும் எண்ணிப் பார்க்க முடியாமலும் நின்றிருந்த இளவல், முடிதுறந்த பால மன்னர் நத்தஹர் பரியின் மீது பாய்ந்தேறி இரவின் இருளை கிழித்துக் கொண்டு ஹுர்மூஸ் நோக்கி பறந்து சென்றார்கள்.

*ஸெ அஹ்லெஃபுக்ரோ ஃபனா பர்ல் ஸாகிஃபக்ரோ ஃபனா*
*அஸ் அங்கே ஹல்த்கிரஃப்தார் மலோ ஜா மாபுராஸ்*
*உலகின் பின்னால் ஓடித்திரியும் அறைகுறை ஞானியை விடு*
*உலகைப் பொறுத்து மரணித்துவிட்ட தர்வேஷைப் பார்*
*மெஞ்ஞானப் பாதையின் இரகசியத்தை அவரிடம் கேள்*
*- மஸ்னவி ஷரீஃபா - மவுலானா ரூமி*

*எனையாட் கொண்டாளவரும் என்குருநாதன் வடிவம்*
*தனையார்க்கும் சொல்ல தகுமோ நிராமயமே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலி*

## குருவோ? நபியோ? கூற அறியேனே!

இரவு முழுவதும் பரியின் முதுகில் பயணித்து ஈரானின் பெருநகரம் அபதானில் விடியா விடியலில் வந்தடைந்த இளவல் நத்தஹர் அங்கு ஒரு நாள் முழுவதும் தாமதித்து ஓய்வெடுத்தார்கள்.

ஹூர்மூஸ் நகரை சென்றடைவதற்கான சாலை வழியை விசாரித்து அறிந்துகொண்டு அப்பாதையில் பயணப்பட்டார்கள். ஸெக்ரெஸ் எனப்படும் மடிப்பு மலையடிவாரத்தையும் மேற்கு சமவெளியில் அமைந்துள்ள பெஹ்பெஹன் நகரையும் தாண்டி, அங்கிருந்து புறப்பட்டு பிரசித்திப்பெற்ற இலக்கிய கேந்திரமான சிராஜ் நகரை வந்தடைந்தார்கள்.

சிராஜ் நகரிலிருந்து பாரசீக வளைகுடா கடற்கரை நகரமான புஷரையும், புஷரைக் கடந்து லார் நகரையும் அங்கிருந்து வடக்கு நோக்கி பயணித்து லாரெஸ்தான் மாநிலத்தின் வடக்கெல்லையில் அமைந்துள்ள ஹூர்மூஸ் நகரை பல நாட்கள் பயணத்துக்குப்பின் அவர்கள் வந்தடைந்த போது இரவின் இருள் பூமியைப் போர்த்த பாய்விரித்து கொண்டிருந்தது.

ஹூர்மூஸ் நகரம் மலையடிவாரத்தில் அமைந்திருந்த போதும் இயற்கை எழில் சூழ்ந்த வனப்பிரதேசமாக காணப்பட்டது. அதிக சந்தடியில்லாத அந்த நகரம் குதிரையின் மீது அமர்ந்து வரும் அரச உடைதரித்த இளவலை கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. "நீர் யார்? எங்கிருந்து வருகிறீர் யாரை பார்க்க வந்திருக்கிறீர்?" என்று பலரும் வினா தொடுத்தனர்.

*பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித*
*மெய்கண்ட நாதனருள் மேவும் நாளெந்நாளோ*
*-தாயுமான சுவாமிகள்.*

“நான் ஷைகு அலீ அவர்களை சந்திக்க வந்திருக்கிறேன்” என்று அவர்கள் கூறியபோது சிலர் நகைத்தார்கள். சிலர் வெளிப்படையாகவே வாய்விட்டு சிரித்தனர். “என்ன அவரிடம் ஞான தீட்சை பெற்று கொள்ள வந்தீரா?” என்று கேட்டு விட்ட சிலர் “ஐயோ பாவம்” என்று பரிதாபப்பட்டார்கள்.

எனினும் அவர்கள் காட்டி விட்ட வழிப்பாதையில் நடந்து, நகரின் கடை கோடியில் அமைந்த தெருவில் நுழைந்து ஷைகு அலீ அவர்களின் இல்லத்தை சென்றடைந்தார்கள் இளவல்.

ஒளி விலகி இருள் அரும்பும் இனிய மாலைப் பொழுதில் வட கிழக்காக நீண்டு விரிந்திருந்த அப்பள்ளத்தாக்கு நகரம், மாலை கதிரவனின் கடைசி ஒளிச் சிதறல்களில் மஞ்சல் ஆடை அணிந்தது போல் பணிந்து கிடந்தது.

தொலை தூரங்களிலெல்லாம் கறுத்து மஞ்சித்து சிதறியிருக்கும் குன்றுகளின் பின் புலத்தில் செங்கதிரோன் அடிவானில் வீழ்ந்து கொண்டிருந்தான். அந்த சிறுநகரம் இரு குன்றுகளுக்கிடையில் தீவு போல வீற்றிருந்தது. குளிர்காற்று வீசத் தொடங்கியது.

இல்லத்தின் உள்ளே நின்றிருந்தார்கள் ஷெய்கின் சீடர்களைப் போல தோன்றிய சிலர். இல்லத்தின் முற்றத்தை அடைந்து ஒரு எண்ணெய் கொப்பறையில் ஜிலேபிகளை சுட்டு அடுக்கி கொண்டிருந்த பெரியாரின் பின் சென்று நின்றார்கள் இளவல் நத்தஹர்.

இரு கைகளையும் தொழுகை நிலையில் கட்டுவது போல் தொப்புளில் இணைத்து கொண்டு அரபு கஸீதா ஒன்றை பாடத் தொடங்கினார்கள்.

*“புகழனைத்தும் ஏகனாகிய இறைவனுக்கு*
*சலாமும் ஸலவாத்தும்*
*எம்பெருமான் முஹம்மத் நபி (ஸல்)*
*அவர்கள் மீது உண்டாகட்டும்.*

*“யா நபி ஸலாம் அலைக்கும்*
*யா ரசூல் ஸலாம் அலைக்கும்*
*அஷ்ரகல் பத்ரு அலைனா”*

*அஷ்ரகல் ஸலவாத்து பைத்தை ஓதி முடித்துவிட்டு முதுகு தெரிய எதிரில் நின்ற குருநாதரை முன்னோக்கி "யாரசூலுல்லாஹ் இந்த அடிமையின் மீது கிருபை கூர்ந்து தங்கள் கருணைப் பார்வையைத் திருப்புவீர்களா?"*

*"யா ரசூலுல்லாஹ்!*

*யா ரசூலுல்லாஹ்!"*

இளவல் இரண்டு மூன்று முறை கெஞ்சியதும் அம்மாபெரும் குருபிரான் எண்ணை கொப்பறையை விட்டுவிட்டு இளவலை நோக்கி திரும்பினார்.

ஆ மழித்த தலை! தாடியும் மீசையும் மட்டுமல்லாமல் இமைமுடிகளும் சிரைத்து களையப்பட்ட முகத்தோற்றம்! ஆனால் முழுநிலவும் வெட்கித் தலைகுனியும் எழில் வடிவம்! பஸராவிலிருந்து பயணப்பட்ட பாதையில் அரக்கனை வெட்டி வீழ்த்திய ஜோதி உருவம்!

திகைத்து நின்ற இளவலை நோக்கி குருபிரான் ஷெய்கு அலீ அவர்கள் கர்ணகடூரமாக வார்த்தைகளை உதிர்த்தார்கள்.

"ஓகோ நீர் அதிகம் பேசுகிறீரா? அட! குருநாதன் தான் சீடனுக்கு நபி!" என்று உமக்கு தெரிந்துவிட்டதா? நல்லது இந்த கொப்பறையில் இப்படி கையை விட்டு ஜிலேபிகளை எடும்" என்று தன் கரத்தை கொதித்து கொப்பளிக்கும் எண்ணெய்க்குள் நுழைத்து ஜிலேபி ஒன்றை எடுத்தார்கள்.

"உம் எடும் என்னிடம் ஞானதீட்சை செய்து கொள்ள வருபவர்களுக்கு இதுதான் முதல் சிட்சை!"

அதிர்ந்து நின்றார்கள் இளவல். ஆனால் அடுத்த நொடியில் "யாஷெய்க்!" என்று பவ்யமாக உச்சரித்தவர்களாக குனிந்து குருவின் பாதத்தை தொட்டு முத்தமிட்டார்கள். நிமிர்ந்து எழுந்து எண்ணெய் கொப்பறையில் கையை விட்டு துழாவி ஜிலேபிகளை எடுத்து தட்டங்களில் அடுக்கினார்கள்.

ஆங்காங்கே நின்றிருந்த சீடர்கள் பலரும் அந்த அதிசயக் காட்சியைக் கண்டு பதைபதைத்து நின்றார்கள். தங்கள் ஷெய்கு தீட்சை கேட்டு வருபவர்களை கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்குவதை அறிந்திருந்தனர். ஆனால் கொதிக்கும் எண்ணெய் கொப்பறைக்குள் கையை செலுத்தும் அதிபயங்கரமான சோதனை எந்த சீடனுக்கும் நடந்ததை அவர்கள் இதுநாள் வரை கண்டதில்லை.

# ஹலரத் தப்லே ஆலம் பாதுஷா (ரலி) அவர்களின் ஸில்ஸிலா (ஞான குரு வழி)

ஹலரத் முஹம்மத் முஸ்தபா ரசூலே கரீம் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்
ஹலரத் அமீருல் முஃமினீன் ஹலரத் அலீ (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் ஹுசைன் ஷஹீத் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் முஹம்மத் பாக்கர் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் ஜாபர் சாதிக் (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் மூஸா ரஜா (ரலி)
ஹலரத் சையிதினா இமாம் முஹம்மத் தகீ (ரலி)
ஹலரத் சையிதினா பாபா ஜமாலுத்தீன் மஜ்ரூஹ்
ஹுசைனி (ரலி)
ஹலரத் சையிதினா பாபா இப்ராஹிம் கரம்சீல்
ஹுசைனி (ரலி)
ஹலரத் சுல்தான் சையத் பாபா ஜோ நகீ ஹுசைனி (என்கிற)
ஷைகு அலீ (ரலி)
ஹலரத் சுல்தான் சையத் பாபா நத்தஹர் ஸர்மஸ்த் தப்லே
ஆலம் தோல் சமந்தர் ஹுசைனி (ரலி)

*ஜென்ம மெடுத்தால் ஜெகமாயை விட்டொழிந்து*
*தன்னை அடைதல் நயங்கான் நிராமயமே*
*- குணங்குடிமஸ்தான் சாஹிபு ஒலி*

# ஜென்மம் எடுத்த பலன் ஜெகத்தில் நான் பெறுவேனோ?

மலைச்சரிவில் அமைந்த அந்த சிறு நகரின் அடிவானத்தில் பொழுது புலர்ந்தது. கதிரவனின் புன்னகையை தரிசிக்க காலைப் பறவைகள் சிறகடித்துக் கொண்டு கிழக்கு நோக்கிப் பறந்தன.

இரவு முழுவதும் பனியில் நனைந்த கரடுமுரடான மலைப் பிரதேசத்தில் பாரைப் படிவங்களும் செம்மண் படிந்த தரைகளும் சூரிய ஒளிப்பட்டு ஆவியெழ, ஆவியில் பிரதிபலித்த வெண்கதிர்கள் பூமியின் பரப்பில் வானவில்லின் வண்ணங்களாய் நடனமாடின.

வானம் நீல வண்ணப் பட்டினைப் போன்று பரந்து விரிந்து கிடந்தது. வெண்முகில்கள் ஆங்காங்கே கொத்து கொத்தாய் பூத்துகிடந்தன. மிகப் பழங்கால கோட்டையைப் போன்று அகன்றிருந்த அந்த வீட்டின் மைய மண்டபத்தில் ஷெய்கு அலீ அவர்களின் சீடர்கள் குழுமியிருந்தனர்.

விரிக்கப்பட்டிருந்த கம்பளி பட்டின் மீது ஷெய்கு அவர்கள் வனப்பிரதேசத்தின் தலைமை சிங்கம் போல் அமர்ந்திருந்தார்கள். ஷாம்தேசத்தின் பால அரசரின் வருகையால் பரபரப்படைந்திருந்த சீடர்கள் காலை தொழுகையை முடித்துக் கொண்டு விரைந்து வந்து அமர்ந்தார்கள்.

பல நாடுகளிலிருந்தும் பல இன பல மொழி சார்ந்த சீடர்களின் அந்த கூட்டு கூட்டம் தங்களுக்குள் அரபு மொழியில் பேசிப் பழகிய காட்சி விசித்திரமாயிருந்தது. பாரசீகர்களும், அராமிக் மொழியினரும், சிரியா மொழியினரும், துருக்கி மொழியினரும், அபிஸீனியா மொழியினரும் அங்கு அமர்ந்திருந்தனர்.

*செங்கிருமி யாதி செனித்த சென்ம பூமிதான்*
*இங்கென்னும் உடல் என்னும் இழுக்கொழிவ தெக்காலம்*

ஷெய்கு அலீ அவர்கள் பாரசீகம் கலந்த அரபு மொழியில் பேசத் தொடங்கினார்கள் -

“ஒரு நாள் அந்திப் பொழுதில் சிராஜ் நகருக்கு போகும் பாதையில் ஒரு விடுதியில் சென்று தங்கிய ஃபார்ஸீ மனிதன் ஒருவன் அங்கு தங்கியிருந்த மற்றொரு பௌத்த மனிதனை சந்தித்தான். பயண களைப்பில் குடித்து களைதீர்ந்த இருவரும் வெகுநேரம் வரை சிரித்து பேசிக் கொண்டிருந்து உறங்கிவிட்டார்கள்.

“விடியா கருக்கலில் விழித்தெழுந்த ஃபார்ஸீ மனிதன் சாராய கடையில் மீண்டும் ஒரு கலயம் மதுவருந்திவிட்டு கொட்டடியில் கட்டியிருந்த தன் குதிரைக்கு பதில் பௌத்த வியாபரியின் கோவேறு கழுதையின் மீதேறி பயணப் பாதையில் விரைந்தான்.

“கதிரவன் உதயமாகி காலை ஒளி கதிர்கள் பூமியின் மீது விழுந்தபின்னும் குடிமயக்கம் தீராத ஃபார்ஸி தான் பயணித்து வந்த வாகனத்தைப் பார்த்து திடுக்கிட்டான். இது பௌத்தனுடையதல்லவா என்று பதறினான். தனக்கு பதிலாக பௌத்தன் எப்படி பயணித்தான் என்று வெகுண்டான்.

“விடுதிக்கு திரும்பி விரைந்து சென்று சாராயக் கடையின் முதலாளியான பெண்ணை தாறுமாறாக திட்டினான். “நாற்றம் பிடித்தவளே அதிகாலையில் என்னை எழுப்பச் சொன்னேன், நீயோ பௌத்தனை எழுப்பி பயணப்படுத்திவிட்டு ஃபார்ஸீ ஆகிய என்னை உறங்கவைத்துவிட்டாய்,” என்று கத்தினான்.

“குடி வெறியில் தன்னை தானென்று கூட உணர்ந்தறிய முடியாத இந்த மனிதனைப் போன்றுதான் மடமைத் தனத்தில் இவ்வுலக மாந்தர் தங்களை இறைவனென்று உணராமல் மனிதனென்று கருதி மதிமயங்கி கிடக்கிறார்கள்.

“எனவேதான் பெருமானார் (ஸல்) அவர்கள் “அந்நாஸீ நியாமுன் ஃபஇதாமாக இன்தபஹூ - மனிதர்கள் உறங்குகிறார்கள். மரணம் வரும்போது விழித்தெழுவார்கள்” என்று கூறினார்கள். சீடர்களே நீங்கள் விழித்தெழுவது எப்போது?

“உங்களுக்குள் உங்களை நீங்கள் மன்அரப நப்ஸஹூ ஃபகத் அரப ரப்பஹூ - தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிந்தான் என்ற நபி மொழியின்படி உங்களை உங்கள் ஆண்டவனாக உணர்ந்தறிவது எப்போது?”

ஷெய்கு நாயகத்தின் விசித்திரமான வார்த்தைகள் கூட்டத்தில் மரண அமைதியை உண்டாக்கியது. ஷெய்கு தொடர்ந்து பேச தொடங்குமுன் ஒரு பாரசீகப் பாடலை பாடினார்கள்.

*அஸ்பராயே சுபூத்தே வஹ்ததத்தெ கிஷ்*
*குப்த்குத் லாஇலாஹ இல்லல்லாஹ்*
*மாஸி வாரா பளக் நபஸ் ஸெமியான் மீபரத்*
*லா இலாஹ இல்லல்லாஹ்*

*ஆண்டவன் தன்னுடைய வஹ்தத்தென்னும்*
*ஏகத்துவ நிலையை உணர்த்துவதற்காக*
*கலிமாவை எடுத்தோதினான்.*
*கலிமா அல்லாவைத் தவிர பூமியில்*
*வேறு ஏதும் உண்டென்பதை*
*ஒரே மூச்சில் ஒழித்துவிடும்.*

“ஆம் தோழர்களே குருவை தேடி அடைவதும் அவனது சொல்லை ஆண்டவனின் கட்டளையாக ஏற்று அடிபணிவதும் மட்டுமே மனித ஜென்மம் எடுத்ததின் பயனை நமக்கு தரமுடியும். உலக மயக்கத்தில் அமிழ்ந்து உங்கள் தலைமீது மண்ணை வாரிகொட்டி கொள்ளாதீர்கள்.

“தன்னுடைய ஆன்மாவை பரிசுத்தப்படுத்தி இறையொளியால் இலங்கிடச் செய்தவன் பாக்கியம் பெற்றவன். ஆன்மாவை உலகின் இச்சை என்ற மண் சேற்றிலே புதைத்துவிட்டவன் நஷ்டமடைந்தான் என்ற வேத வசனத்தை உய்த்துணர்ந்து பாருங்கள்.

“ஃபனாஃபிஷ்ஷெய்கு, ஷெய்கு ஆகிய குருநாதனின் முன் தனக்கென்று தனிப்பட்ட ஆசைகள் இல்லை என்ற பாதையில் நடந்து தன் நஃப்சாகிய இச்சைகளை ஒடுக்கிகொண்டு நடந்தால் கண்முன் பெருமானார் (ஸல்) அவர்களை காணலாம். அவர்களிடமிருந்து (இல்ஹாம் என்னும்) உள்ளுணர்ச்சி உத்தரவைப் பின்பற்றி நடந்தால் இறைவனை அடையலாம்.

“எவன் தன் இறைவனை அடைந்து கொண்டானோ அவன் பேரின்ப பெருவாழ்வை அடைந்து கொள்ளலாம் அழியாத நித்ய நிலையை அடைந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கலாம்.

“இன்ஸான் ஆகிய உன்னுடைய மனித கோலத்தை உயிர் ஆகிய ரூஹு தன்னுடைய கோலமாக கிரகித்து கொள்ளும் போதுதான் நீ இன்ஸானெ காமில் சம்பூர்ண மனிதனாகிறாய். இல்லாவிடில் பிறந்து பிறந்து செத்து செத்து இரண்டும் கெட்ட நிலையில் பேயாய் அலைந்து கொண்டிருப்பாய்.”

ஷெய்கு அவர்கள் உச்சஸ்தாயியில் பேசிய பேச்சைக்கேட்டு சீட கோடிகள் அதிர்ந்து அமர்ந்தனர்[1]. ஒரு சீடர் எழுந்து நின்றார். உரத்த குரலில் ஒரு பாரசீகப் பாடலை பாடினார்.

*அல்லாஹ் ஆண்டவனாகிறவன் ரோஜா மலரைப் போலும், அவனது தூதர் நபி (ஸல்) அவர்கள் தேனைப் போலும், குருபிரானாகிய ஷெய்கு ரோஜாப் பூவும் தேனும் கலந்த இன்பம் நிறைந்த குல்கந்து போன்றிருக்குமென்று நீ அறிவாயாக.*

*எவனொருவன் தான் குருபிரானையும் இறைவனை தாத்து ஆகிய சுயார்த்த ரூபத்தையும் ஒன்றென்று ஏகமாக காணவில்லையோ அவன் முரீது ஆகிய உண்மை சிஷ்யனாகான்! உண்மை சிஷ்யனாகான்! உண்மை சிஷ்யனாகான்!*

அங்கு கூடியிருந்த சீட கோடிகள், கலந்தர்கள் கம்பீரமாக அமர்ந்திருந்த ஷெய்கு நாயகம் ஷைகு அலீ அவர்கள் முன் நெற்றியை தரையில் வைத்து சுஜூது சிரவணக்கம் செய்தார்கள்.

அதே நேரம் அம்மண்டபத்தின் ஜன்னல்களிலும் வெளிவாசலிலும் வேடிக்கைப் பார்த்து கொண்டு நின்றிருந்த நகரமக்கள் சிலரை சீடர்கள் விரட்டியடித்தார்கள்.

“உங்களுக்கு இங்கு வேலையில்லை!

“இது ஹக்கீகத் ஆகிய சத்தியத்தின் இல்லம், இங்கு ஷரீயத்து போதுமென்றிருப்பவர்கள், வர தேவையில்லை. இங்கு நடப்பதை உங்களால் புரிந்து கொள்ளமுடியாது. உங்கள் ஆண்டவனையும் நீங்கள் எத்தனை பிறவி எடுத்தாலும் அறிந்து கொள்ள முடியாது. இம்மையிலும் மறுமையிலும் நீங்கள் குருடர்களே! இது இறைமறை தீர்ப்பு!

“ஷரீஅத்தில் கஅபா முன்னோக்குதல் ஆகிய கிப்லா என்பது போல ஹக்கீகத்தில் ஷெய்கு ஆகிய குருநாதரே கிப்லா ஆவார்கள். அவர்களை முன்னோக்கியே சீடர்களாகிய நாங்கள் தொழுது வணங்குகிறோம்.[2] இதுவே ஸிராத்தல் முஸ்தகீம் என்ற நேர்வழிப்பாதை ”. என்று கூறி சப்தமிட்டார்கள். புரியாத ஊர்மக்கள் விரண்டோடினார்கள்.

ஷெய்கு அலீ அவர்கள் தொடர்ந்து பேசினார்கள். “நான் பிறந்தேன் என்னை பார்க்க முயற்சித்தேன். ஆனால் என்னை நான் பார்க்கமுடியவில்லை. என்னை[3] அறிய முயன்றேன். ஆனால் என்னை நான் அறிய முடியவில்லை கத்தினேன், கதறினேன். என்னை சுற்றி இருந்தவை என் கவனத்தை ஈர்த்தன.

என் தாயின் மார்பகம், என்னை அன்போடு பார்த்த என் தாயின் முகம், என் தாயை சுற்றியிருந்த என் பெற்றோர் குடும்பத்தின் அரவணைப்பான கை, கால்கள். எனக்குள் ஏற்பட்ட அரிப்பின் காரணமாக எனக்கு பால் அமுதம் தேவைப்பட்டது.

நான் பரபரத்து கதறிக் கொண்டிருந்தேன். என் பசி அரிப்பை சாந்தபடுத்துபவர்கள் மீது எனக்குள் பாசம் என்ற ஒருவித உணர்வு பொங்கியது. நான் தவழ்ந்தும், ஊர்ந்தும், நடந்தும் உடவெனும் கூண்டுக்குள் வளரத் துவங்கிய பொழுது என்னை நான் பார்க்க வேண்டும் என்னை நான் அறிய வேண்டும் என்ற உணர்வுகள் மெல்ல மெல்ல மழுங்கிபோனது. நான் சூழ்நிலையின் கைதியாகிவிட்டேன்.

பால பருவத்தில் சிறுவர் சிறுமிகளோடு உல்லாசமாக விளையாடுவதில் என் கவனம் திரும்பியது. பருவம் வந்ததும் பாவையரை கண்டதும் எனக்குள் ஒரு இச்சை பிறந்தது. ஆஹா இது என்ன வித்தியாசமான பூந்தோட்டம்?

என்னை போல் என் உடலை போல், ஆனால் என்னை போலில்லாமல் என் உடலை போலில்லாமல் முதன்முதலாக என் பத்து வயது பருவத்திலேயே ஒரு பெண் எனக்குள் புகுந்துகொண்டு பேமைபோல் ஆட்டிபடைக்க தொடங்கினாள்.

ஐயோ நான் என்னை பார்க்க வேண்டுமே. அதிசயமான என்னை அறிந்து கொள்ள வேண்டுமே, என்ற மூல நோக்கம் முற்றிலும் மறக்கப்பட்டு நான் அந்த பெண்ணை பார்க்க வேண்டுமே அவளை என்னவென்று அறிந்து கொள்ள வேண்டுமே என்று என்னுடைய இலட்சியம் திசை திருப்பப்பட்டது.

வீட்டுக்கு நெல்லறுக்க போனவன், மாட்டுக்கு புல்லறுத்து திரும்பியது போல கையைப் பிசைந்துகொண்டு நிற்கின்றேன். *என்வயது வளர்ந்தது.வாலிபம் முதுமை அடைந்தது.*என்னை சுற்றி இருப்பவர்கள் எல்லாம் சாவது

போல் நானும் செத்து மடிவதற்கு நேரம் நெருங்கி கொண்டிருக்கும்பொழுது நான் என்னை பார்ப்பது எப்படி? நான் என்னை அறிவது எப்படி? வினாக்குறி ஆகிவிட்ட கோமாளி நான். சீடர்களே நீங்கள் கோமாளிகள் ஆக வேண்டாம். நீங்கள் உங்களை அறிந்து கொள்ள வேண்டும்

---

குறிப்பு [1] *செல்வ மகனே என்னிடம் ஞானதீட்சை (பைஅத்) பெற்று என் தோழமையை ஏற்றுக் கொண்டாயே. நான் காட்டிய ஞான வழியை ஒட்டியே நீ வணக்கங்கள் புரியாவிட்டால் என் பைஅத்தும் தோழமையும் உனக்குப் பயன்படுமென்றா நினைக்கிறாய்? நான் காட்டிய படியெல்லாம் சன்மார்க்கத்துக்கு பணிவு காட்ட வேண்டும். அதற்கு சம்மதமில்லாவிடின் என் தோழமையைப் பெறவேண்டாம். ஏனெனில் என் பாரமார்த்திக வழியில் நடந்ததால் கிடைக்கும் ஆதாயங்களை விட எனக்கு மாறுசெய்வதால் உண்டாகும் நாசம் மோசமானதாயிருக்கும்*

*- மல்பூஜாத் 43 கௌதுல் அஃலம் (ரலி)*

*குறிப்பு*[2] *- என் இறைவனை நான் கண்ணால் கண்டேன். அவனை தொழுது வணங்கினேன்.*

*- ஹலரத் அலீ*

*அல்லாவுக்குரிய நல்லடியார்கள் இரணம் முதல் அனைத்து கவலைகளையும் மனத்திலிருந்து எடுத்தெறிந்து விடுகின்றனர். இவர்கள் இறைவனின் அருள், சமீபத்துவம், ஞானம் ஆகியவற்றால் தேவையற்றோர் ஆகிவிடுகின்றனர். இந்நிலையில் இவர்கள் சீடர்கள் முன்னோக்கும் தவமான கிப்லாவாக சமைந்து விடுகிறனர்.*

*- பத்ஹுர் ரப்பானி 13*

*- கௌதுல் அஃலம் (ரலி)*

*குறிப்பு*[3] *நான் அவ்வியக்த புதயலாய் இருந்தேன் (குன்த்த கன்ஜன் மகபியா...) என்னை அறிய நாடினேன் எனவே பிரபஞ்சத்தை படைத்தேன்.*

*-ஹதீ ஸ் குத்ஸி*

*ஈறுமுதலுமற்றே இலங்குகின்ற முச்சுடறாய்*
*காரணிக்கும் பூரணமே கண்ணே ரகுமானே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலி*

## நெற்றிப் புருவத்திடை நின்றாடும் முச்சுடர்.

வான் எங்கும் பரந்த மாலை கருக்கிருட்டு மையிருட்டாய் மாறி கொண்டிருந்தது. சந்தண மரங்களின் இலைகள் காற்றில் ஆடிப் படப்படத்தன. இரவின் வரவுக்காக ஏங்கும் அந்தப் பறவைகள் அவ்வப்போது குரலெழுப்பின.

ஆழ்ந்துப் பதிந்திருந்த அமைதியினூடே நீண்ட நெடும் மலைபாதையில் தவசீலர் நத்தஹர் அமைதியாக நடந்துகொண்டிருந்தார்கள். கடந்த மூண்றான்டு காலத்தில் நடந்த சம்பவங்கள் அவர்களின் நினைவில் எழுந்தன.

ஷைகு அலீ அவர்களிடம் ஞான தீட்சைப் பெற்று மெய்ஞ்ஞானப் பாலருந்தி ஷைகின் சீடர்களோடு தங்கிய அவர்கள் பல்வேறு யோக சாதனைகளையும் பயின்றார்கள். உடலை வருத்தி உயிரை வளர்த்து குரூஃபெ இலாஹி என்ற தெய்வ நெருக்கத்தைப் பெற அவர்கள் செய்த முயற்சிகள் கை மேல் பலன் தந்தன.

ஆதி இறைவனாகிய ஆண்டவனோடு சமப்பட்டு ஒன்றிவிடுவதற்கான திடமான வழிதான் புருவ மையத்தில் விழிகளால் ஊடுவிப் பார்ப்பதாகும். சாதகனின் விடாமுயற்ச்சிக்கு ஏற்ப இந்த தவயோகத்தால் சிறந்த பலன் ஏற்படுகிறது.

பார்வைக்குள் பனிப்படலம், புகை, சூரியன் காற்று, நெருப்பு, மின்னல், சந்திரன் போன்ற சில உருவங்கள் தோன்றி தோன்றிமறைந்து இறுதியில் தெய்வத்தின் தோற்றம் வெளிப்படுகிறது. தெய்வ தரிசனம் முக்தி நிலையை உண்டாக்குகிறது.

*முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே*
*சித்தே என்னுள்ளத் தெளிவே பராபரமே*
*-தாயுமான சுவாமிகள்*

நமக்குள் இருக்கும் ரூஹ் என்னும் ஆன்மாதான் ஆண்டவனாக இருக்கிறது. ஆன்மா இருக்குமிடம் புருவமத்தி. அதை பார்க்கப் பார்க்க ஆன்மா வெளிச்சமடைந்து வெளிப்படுகிறது என்ற வேறு வார்த்தைகளால் இதனை விளக்கலாம்.

பார்க்கும் பார்வையில் பரவசப்படும் போது பரம்பொருளாகிய அல்லாஹ்வுடன் அவன் ரசூலாகிய முகம்மதெம்மானையும் நினைத்து நினைவில் கொள்வது தரீக்கா ஒவ்வொன்றிலும் விதியாகும். ரூஹ் ஆகிய ஆன்மா நம் கண்முன் வரும்போது ஹூர் ஆகிய சொர்க்க கன்னியாக வெளிப்படுகிறது. ஹூர் என்பதில் ஹூ அல்லாவையும் ர் ஆகிய ரே ரசூலாகிய முகம்மதையும் குறிக்கும்.

வெளியே நாகரீகமான தோற்றம் உள்ளுக்குள் அநாகரீகமான எண்ணங்களை குவித்துப் கொண்டு அலைகிறோம். நமது நினைவு ஒரே நிலையில் நிற்பதில்லை. நாய்போல் ஓடிஓடி அலைக்கழியும் நினைவுகளை ஒருமுகப்படுத்தி தெய்வத்தின் மீது திருப்புவது தான் தியானம்.

தியானத்தால் அமைதியடைந்த மனத்தைப் பெற்றவனே பாக்கியவானாவான். அந்த நிராமயமான நிரந்தர நிம்மதியை வார்த்தைகளால் விளக்க முடியாது. இறைவனைப் பற்றிய ஆவலும், முக்தி மீது இச்சையுமே வெற்றிக்கு வழி.

*சாஸ்ம பந்த் வகோஷ் பந்த் வலப்பிபந்த்*
*கர்னா யாபி சிர்ரேஹக் பர்மா பாகந்த்,*
*உன் பார்வை, கேள்வி, பேசும் வாயை மூடிக்கொள்*
*உன்னுள் தெய்வ ரகசியப்பேச்சை நீ கேட்பாய்.*

*- மஸ்னவி ஷரீஃப் மவுலானா ரூமி (ரஹ்)*

இரவும் பகலும் இருபுருவங்களுக்கிடையே நாசி முனைக்கு மேலான முச்சுடரின் தானத்தை இரு கண்களையும் மூடி தரிசித்து கொண்டிருப்பதே தியானத்தின் மைய கருத்தாகும். தொழுகையில் சுஜூது செய்யும் இடத்தை உற்று நோக்குங்கள் என்பதின் பொருள் இதுவே ஆகும். தவசீலர் நத்தஹர் ஓயா தவத்தில் இறங்கினார்கள்.

- - - - - - -

சிற்றின்பம், பேரின்பம் இவ்வுலகில் பரவலாக பேசுகிறார்கள். இதைப்பற்றி விளக்கமாக பேசுவதற்கு வெட்கப்பட தேவையில்லை. ஆண்களும் பெண்களும் எதிர்பால் இனத்தினரின் மூத்திரப்பாதையின் முனையில் தேடுகின்ற ஒரு துளி இன்பத்தைத்தான் சிற்றின்பம் என்று சொல்கின்றோம்.

இது அற்பமானது என்பதை புரிந்துகொள்ள மனிதமனம் மறுக்கின்றது. மலஜல பாதைகளுக்கு நடுவில் உள்ள இதனை பற்றி உலகில் மிகப்பெரும் பேராசை நிலவி வருகின்றது. சொல்லப் போனால் உலக சக்கரம் இந்த அச்சாணியின் மீதுதான் சுழன்று வருகின்றது என்று கூறவேண்டும்.

பெண்கள் ஆண்களின் ஆண்மையின் மீது மனதில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டு புதுமைகளை தேடுகிறார்கள். ஆண்களோ பெண்களின் பத்தினிதனத்தின் மீதும் தனக்காக அவள் வாழ்கின்றாள் என்ற தகமையின் மீதும் ஆசை கொண்டு அலைகிறார்கள். ஒருத்தியிடம் இதைப்பற்றி அவர்களுக்கு சந்தேகம் வரும்பொழுது மற்றொருத்தியிடம் தேடுகிறார்கள்.

பெண்களுக்கு ஏற்படும் ஆண்மையின் பௌருஷத் தன்மையின் மீதான பரபரப்பும், ஆண்களுக்கு பெண்களின் மூத்திர பாதையின் பரிசுத்த தன்மையின் மீது ஏற்படுகின்ற கவர்ச்சியும் கற்பனைமயமானது. இது பெண்ணினத்தின் பொதுவான அடிப்படை விலங்கியல் பண்பும், ஆணினத்தின் பொதுவான உளவியல் பண்பும் ஆகும்.

சரித்திர புருஷர்கள் தோன்றி சட்ட நெறிகள் என்னும் அடித்தளத்தின்மீது சமூக கோட்டைகளை கட்டுகிறார்கள். அங்கு காதலும் கற்பும் வீரமும் இவைகளின் அடிப்படையில் கலைகளும் காவியங்களும் படைக்கப்படுகின்றன.

சமூக கோட்டைகளின் உள்ளே மேற்கூறப்பட்ட மனித இனத்தின் விலங்கியல் பண்புகள் பலம் குன்றி காணப்பட்டாலும் மனிதன் ஆணாயினும் பெண்ணாயினும் தெய்வீக நிலை எய்தும்வரை பஞ்ச பூதங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சூக்குமத்திலும் ஆத்துமத்திலும் நிலைபெறும் வரை விலங்கியல் பண்புகள் அவ்வப்போது தலைதூக்குகின்றன.

இருசாராருமே உண்மை உணராது வாழ்க்கையின் உன்னதமான இலட்சியத்தை பேரின்ப நித்ய வாழ்வை அடைகின்ற இலக்கை மறந்து செத்து மடிகிறார்கள். குருசிஷ்ய உறவின் காரணமாக ஏற்படும் பேரின்ப வாழ்க்கைக்கு உரிய மனித உறுப்பு இருதயமாகும்.

குருபிரானுக்கும் சிஷ்யனோ அல்லது சிஷ்யையோ ஆகிய இவர்களுக்கும் ஏற்படுகின்ற உறவு என்பது பேரின்பத்தின் வாசலாகும். இதனை அரபு மொழியில் ''சீனா மைசீனா'' இதயத்துடன் இதயத்தின் தொடர்பு என்று சொல்வார்கள்.

இந்த தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதைப் பற்றி உலக மக்கள் பெரிதும் அங்கலாய்ப்பதில்லை. பாவம்! உலகம் ஒரு மாயை என்று மெய்ஞானிகள் கூறி திங்கள் தலையில் அடித்துக் கொள்வதை பார்த்து லோகாயதவாதிகள் இவர்களை பைத்தியகாரர்கள் என்று சொல்லி திரிகிறார்கள்.

- - - - - - -

வான் எங்கும் பரந்த மாலை கருக்கிருட்டு மையிருட்டாய் மாறி கொண்டிருந்தது. சந்தண மரங்களின் இலைகள் காற்றில் ஆடிப் படபடத்தன. இரவின் வரவுக்காக ஏங்கும் அந்தப் பறவைகள் அவ்வப்போது குரலெழுப்பின. ஆழ்ந்துப் பதிந்திருந்த அமைதியினூடே நீண்ட நெடும் மலைபாதையில் தவசீலர் நத்தஹர் அமைதியாக நடந்துகொண்டிருந்தார்கள்.

*கோப்பாக மாகஉனை கொண்டாடவும் எனக்குநீ*
*காப்பாகவும் கனவு கண்டேன் மனோன்மணியே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபுஒலியுல்லா*

## பேரின்ப மங்கை மஹ்மூதா

குருநாதரின் உபதேசத்தை சிரமேற் கொண்டு தனித்திருந்தும் விழித்திருந்தும் பசித்திருந்தும் தவமியற்றி வந்த நாட்களில் அடுத்த ஓராண்டில் குருநாதர் உலகை துறந்து மறைந்தார்கள். கான்காவில் வசித்த சீடர்கள் பலரும் அவரவர் நாடு நோக்கி புறப்பட்டு போயினர்.

தவசீலர் நத்தஹர் அவரது நண்பர் ஒருவரும் கன்காவிலேயே தங்கியிருந்தனர். பின்னர் அங்கிருந்து வெளியேறி தவச்சாலை அருகிலமைந்த நத்தஹர் என்ற சிறு குன்றின் மீதேறி அங்கமைந்த குகையொன்றில் தங்கி தவவேள்வியைத் தொடர்ந்தார்கள்.

நாளும் பொழுதும் பார்வையினுடே பார்க்கும் பயிற்சியில் மூழ்கி பசி தூக்கம் மறந்து பைத்தியக்காரனைப் போல் திரிந்த அவரை அவர்கள் தங்கியிருந்த குன்றின் பெயரை வைத்து நத்தஹர் என்று ஹூர்மூஸ் நகரமக்கள் அழைக்க தொடங்கினார்கள். லைலாவை அடைந்தே தீரவேண்டும் என்ற மஜ்னூனின் பேராசையைப் போல தவசீலர் நத்தஹர் பேரின்ப பேராசையில் விழுந்தார்கள்.

மஜ்னூன் ஆகிய கைஸ் மதரஸாவில் படித்து கொண்டிருக்கும் போது அதே மதரஸாவின் மாணவி லைலாவை சந்தித்து அவள்மீது காதல் கொள்கிறான். அவர்களின் காதல் ஊரெங்கும் பேசப்படுகிறது. லைலாவின் பெற்றோர் கவலையடைகின்றனர். லைலாவை மதரஸாவிலிருந்து நிறுத்தி பர்தா மங்கையாக ஆக்குகின்றனர். கைஸ் வெறி பிடித்து மஜ்னூனாக காதல் பைத்தியமாக ஆகிவிடுகிறான்.

*எவ்வடிவும் பூரணமாம் எந்தன்உரு என்றிசைந்து*
*அவ்வடிவுக்குள்ளே அடங்கும் நாளென்நாளோ*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்*

ஊருக்கு வெளியே அலைந்து திரியும் மஜ்னூனை அவன் தந்தை லைலாவை மணமுடித்து வைப்பதாக கூறி இல்லத்துக்கு அழைத்து வருகிறார். ஆனால் அவர்முயற்சி பலிக்கவில்லை லைலாவை அவள் தந்தை அண்டை நாட்டு அரசனுக்கு மணமுடித்து விடுகிறான். லைலா கணவனின் ஊருக்கு பல்லக்கில் கொண்டு செல்லப்பட்ட செய்தியறிந்து மஜ்னூன் பதட்டமடைகிறான்.

மஜ்னூன் ஆறுதலற்றவனாக காடு வனாந்தரங்களில் அலைகிறான். மிருகங்களோடு உலவுகிறான். லைலாவும் வெறி பிடித்தவளாகவே காணப்படுகிறாள். தன் தோழிகளின் உதவியால் ஒரே ஒருதடவை மஜ்னூனை சந்திக்கிறாள்.

ஆனால் அந்த சந்திப்புக்குப் பின்னர் லைலா கணவனின் இல்லத்தில் கைதியானாள். வெகு சீக்கிரத்தில் மஜ்னூன் இறந்தான் என்ற வதந்தி அவளை வருத்தத்தில் வீழ்த்துகிறது. லைலா உடல் நலம் குன்றி உயிர் துறக்கிறாள்.

அதனை கேள்வியுற்ற மஜ்னூன் அவள் உடல் தூக்கிச் செல்லப்பட்ட சவ ஊர்வலத்தில் கலந்து கொள்கிறான். மையவாடிக்கு செல்லும் வழியில் அழுது கொண்டும் சிரித்துக் கொண்டும் நடந்து செல்லும் மஜ்னூன் லைலாவின் துணி போர்த்திய சடலம் சவக்குழியில் இறக்கப்பட்டதும் காட்டுக் கூச்சலோடு அக்குழியில் குதித்து காதலி லைலாவின் உடலை கட்டிக் கொண்டு உயிர் துறக்கிறான்.

லைலாவின் உறவினர்கள் மஜ்னூன் லைலா இருவரின் உடலையும் பிரிக்க முயல்கின்றனர். ஆனால் கூடியிருந்த மக்கள் தடுக்கின்றனர். இக்காதலில் உலக இச்சை கொஞ்சமும் இல்லை, இறைவனின் பொக்கிஷத்திலிருந்து இந்த அற்புதம் நிகழ்ந்துள்ளது என்றனர். ஊர்மக்கள் எனவே ஒரே குழியில் இருவரும் கிடந்தவிதமே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.[1]

---

*குறிப்பு[1] - இது உலகியல் காதலின் உச்சகட்ட காட்சி. இம்மாதிரியான கதைகள் காவியங்களாக வடிக்கப்பட்டாலும் இந்த காதல்களின் முடிவு முட்டாள்தனமானதாகும். இரண்டு ஆன்மாக்கள் ஒன்றோடு ஒன்று பொருந்திகொள்ளும் என்பது போலி நம்பிக்கை. ஆன்மா ஆண்டவனின் மட்டும்தான் ஒன்றிப்போக முடியும் எனவே லைலா மஜ்னூன் முடிவு என்பது இரண்டு பேய்களின் பிறப்பே ஆகும்.*

கடைசி நாட்களில் ஷைகு அவர்கள் கூறிய லைலா மஜ்னூனின் இந்த கதையை நினைத்து சுகித்து கொண்டிருந்தவர்களாக என் ஆசை காதலியாகிய ஆதிபரம்பொருளாம் இறைவனை என்று சந்திப்பேன் என்ற ஏக்கத்துடன் நடந்து கொண்டிருந்த நத்தஹர் எதிரில் ஒரு தேவதாரு மரத்தினடியில் நின்றிருந்த அதிசய மனிதரை கண்டார்கள்.

*சத்மல்கிதில் பா நிமலி நிகாஸிமி தஹான் கரித்*
*குயான் தாரின்தில் மாமுலா தக்ஸிர் மிகுனந்த்*
*இறைவா! உன் பாசப் பார்வையில் பாதியை அடைந்திட*
*எத்தனையோ இதய ராஜ்யங்களை தாண்டி வந்தேன்*
*பல காதலர்களின் நடுவே உனைதேடி*
*பலரிடம் பொய்யையும் கண்டு வெளிப்பட்டேன்*

*- சூஃபி ஸச்சல் ஸர்மத்.*

அதற்குள் இரவின் இருள் அந்தி கருக்கலை விரட்டியடித்துவிட்டு பூமியின் மீது கவிழ்ந்து விட்டிருந்தது. வானம் நீலப்பட்டாய் விரிந்தது. நட்சத்திரங்கள் முத்துக்களாய் ஒளிர்ந்தன. நிலவின் ஒளியிலே எழில் உருவாய் முதுகுப்புறம் தெரிய நின்றிருக்கும் அந்த மனிதர் யார்?
அங்கே நின்றிருப்பவர் முஹம்மது ஆகிய நபிகள் பிரான் என்று இளவலுக்கு தோன்றியது.

"இறை தூதே என்னைப் படைத்த பராபரனுக்கு ஒரு தோற்றமிருக்குமானால் அது தாங்களே அன்றோ" என்று பேராவல் உந்த தூதரை நெருங்கிச் சென்று அணுகியபோது அந்த உருவம் திரும்பியது. தன்முன் தோற்றத்தையும் முகத் தோற்றத்தையும் தவசீலர் நத்தஹர் பார்வைக்கு விருந்தாக்கியது.

ஆ! வர்ணிக்க முடியாத வடிவழகியான பெண்ணொருத்தி அங்குநின்றிருந்தாள். "ஆ என் ஆசை நாயகமே நபியே தாங்கள் ஒரு பெண்ணா?" என்று ஆவேசமாக கத்திய படி மயங்கி விழுந்தார் தவசீலர்.

ஆம் இது முஹம்மதின் ஆதி தோற்றம். இலட்சோப இலட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆண்டவன் முகம்மதை படைத்த போதிருந்த தோற்றம். அஹமத் என்ற அன்னத்தின் தோற்றம். யகீன் என்னும் தெய்வீக மரத்தில் ஏறி நின்றாடிய மஹ்மூதா என்னும் மயிலின் தோற்றம்!

ஆண்டவன் ஆதமென்னும் ஆணாகவும் அவனது காதலியாகிய முகம்மத் ஹவ்வா என்னும் பெண்ணாகவும் தோன்றிய ஊழூழி கால பேரின்ப பரவசத் தோற்றம்!(2)

தவசீலர் நத்தஹர் மயக்கம் தெளிந்து கண்விழித்த போது அந்த மலை பிரதேசம் வெறுமை சூழ்ந்து கிடந்தது. தன் உள்ளத்தில் பதிந்து விட்ட முகம்மதின் பெண்மை தோற்றத்தை மட்டும் அவர் மறக்கமுடியவே இல்லை!

*யெதே கன்ஜ் படிட் அமத்டர் ஆன் துகானீஸர் கோபி*
*ஐகெ சூரத் ஐகெ மனிஐகெ கூபிஐகெ கூஹி*

*மெய்ஞ்ஞான பொற்கொல்லனின் கடை வாசலில்*
*கண்டேன் அவளை ஒப்பற்ற அழகின் பொக்கிஷம்*
*ஒரு முறைபார்த்தேன் அவளை!*
*என்னுள் பொங்கும் இன்பம் அடடா!*

- மஸ்னவி ஷரீஃப் - மவுலானாரூமி

---

*குறிப்பு -(2)*
*வேதவழிகாட்டி என்கண்ணே என்தாயே*
*மெய்ஞ்ஞானந் தான்காட்டி*
*சோதியொளி காட்டி என்கண்ணே என்தாயே*
*துய்ய தலந்தான் காட்டி*
*ஆதி நிலைகாட்டி என்கண்ணே தாயே*
*ஆண்டடிமை கொள்வாயோ*
*அரசணுக்குகந்தவளே என்கண்ணே என்தாயே*
*அகமதிரசூலாளே!*

*-ஞான ஒப்பாரி*

*மாசில் பரவெளியே மவுனமணி மாளிகையின்*
*வாயில் பெருவழியே மகத்தே நந்தீஸ்வரனே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## தாயகம் திரும்பி தபோவனம் நிருவிய தவசீலர்

திமிஷ்கின் பாபுஷ் ஷர்க்கியிலுள்ள வெள்ளை மினாராவின் உச்சியில்தான் விண் புகுந்த ஈசா (அலை) மண்ணுலகுக்கு மீண்டு வந்து இறங்குவார்களென்பது சிரியா நாட்டில் வழங்கும் பாரம்பரிய செய்தி.

அதே மினாராவின் அடிவாரத்தில் மழித்த தலையும் தாடி மீசை சிரைத்த முகமுமாக கலந்தர்களின் தோற்றத்தில் நின்று கொண்டிருந்த முன்னாள் மன்னரை நத்தஹர் முத்தஹிருத்தீனை குதிரை படை வீரர்கள் சிலர் கண்டு கொண்டு அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள்.

தாயும், சகோதரரான இந்நாள் மன்னரும், உற்றார் உறவினரும் இளவலை ஆரத்தழுவி வரவேற்று உபசரித்த போதும் அவரது துறவுக் கோலம் கண்டு கலங்கினார்கள். தாயாரும் “மைந்தரே ஏன் இந்த கோலம் இல்லறமல்லவா இஸ்லாமிய வழி” என்று செவிகளில் கிசுகிசுத்தார்கள்.

அரச இருக்கையில் அமருமாறு தமது இளவல் ஜலால் விடுத்த வேண்டுகோளை மறுதளித்துவிட்டு அரசதிகாரிகளின் இருக்கையில் சென்று அமர்ந்தார்கள் பாலமகான் நத்தஹர் என்னும் தவசீலர்.

குடிமக்களின் ஆரவாரம் பெருகியது. “மாமன்னர் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் வாழ்க! தப்லே ஆலம் வாழ்க!” என்ற கோஷம் அரண்மனை மன்றத்தை அதிரச்செய்தது. மந்திரிப் பிரதானிகளும், படைத் தளபதிகளும், அரசு அதிகாரிகளுமாக வரிசையில் நின்று திரும்பி வந்துவிட்ட முன்னாள் மன்னருக்கு கைலாகு கொடுத்து கட்டி அணைத்து வாழ்த்து தெரிவித்தார்கள்.

*தன்னரசு நாடாம் ஜகஜால பூமிமிசை*
*என்னரசே என்னை இறையாக நாட்டினையோ*
*- அருள்திரு தாயுமான சுவாமிகள்*

தவசீலர் தப்லே ஆலம் நத்தஹர் முத்தஹ்ஹிருத்தீன் வலியுல்லா சில ஆண்டு காலம் திமிஷ்கில் தமக்கு வரவேற்பளிக்கப்பட்ட அல்கத்ரா அரண்மனையிலேயே தங்கி அரசராகிய சகோதரர் சையத் ஜலாலுத்தீனுக்கு ஆலோசகராகவும், ஆன்ம ஞானம் தேடி வருவோருக்கு ஷெய்கு ஆகவும் அமர்ந்து ஆன்மீக பரிபாலணம் செய்தார்கள். தப்லே ஆலம் அவர்களின் பெயரும் புகழும் சிரியா நாடு முழுதும் பரவியது.

ஃபாத்திமியா கலிஃபாக்கள் மிஸ்ரிலிருந்தும் அப்பாஸியா கலிஃபாக்கள் பாக்தாத்திலிருந்தும் மேலதிகாரம் செய்து வந்தார்கள். பூயா அரசபரம்பரையின் ஆட்சி நடைபெற்றது. பூயாக்கள் ஷீயா மதுகபை தழுவியிருந்தனர்.

சிரியா நாடு அக்காலத்தில் சிரியா என்றும் சிரியா ஃபீனிசியா (லெபனான்) சிரியா ஜோர்தான் என்றும் மூன்று பகுதியாக விளங்கியது. லெபனானையும் ஜோர்தானையும் ஃபாத்திமிகள் அபகரித்திருந்தனர். எனினும் திமிஷ்க் இரு கிலாஃபத்தினருக்கும் கட்டுப்படாத சுதந்திர பூமியாக விளங்கியது.

இக்காலத்தில் உலக வரலாற்றில் நடந்த ஒரு முக்கியமான நிகழ்வு இஸ்லாமிய கலாச்சாரத்தின் வளர்ச்சியும் மலர்ச்சியுமாகும். “ஒன்றே குலம் ஒருவனே இறைவன்” என்ற இஸ்லாத்தின் குரல் அட்லாண்டிக் சமுத்திரக் கரையிலிருந்து சீனாவரை ஒலிக்கத் தொடங்கியது.

இஸ்லாமிய தலைநகரங்களான பாக்தாத், காஹிரா (கெய்ரோ) குர்துபா (கார்டோவா) தாலதோ அலெப்போ, (திரிபோலி) திமிஷ்க் (டமாஸ்கஸ்) ஆகிய பட்டணங்கள் உலகளாவிய அரசியல் அறிவியல் மற்றும் நாகரிகத்தின் மத்தியஸ்தலங்களாகவும், பகுத்தறிவின் பாசறைகளாகவும் வழிகாட்டும் ஒளி விளக்குகளாகவும் விளங்கின.

அறிவியல் கண்டு பிடிப்புகள், இலக்கியப் பெரும் படைப்புகள், ஆடை ஆபரண வடிவமைப்புகள், இசை ஆலாபனைகள், நாட்டிய முத்திரைகள் முதலியவை புதிது புதிதாக உருவாக்கப்பட்ட அக்கால கட்டத்தில் அரசியல் பூசல்களுக்கும், மார்க்க கொள்கைப் பூசல்களுக்கும் நடுவில் ஆன்மீகத் துறையில் ஈடுபாடுகளை வளர்த்து கொண்டனர் குடிமக்கள்.

அகண்ட ஸூஃபித்துவ ஞானம் ஒருமைய பீடத்தை தனக்கு அமைத்து கொள்ளாவிடினும் இஸ்லாமிய உலகின் பல பகுதிகளிலும் சிறப்புற்றிருந்தது. மகான் மன்சூர் ஹல்லாஜ் அவர்களின் “அனல் ஹக் - நானே சத்திய இறைவன்” என்ற கோஷமும், அவர் ஷஹீதாகி கொலைசெய்யப்பட்டது, அதனை ஒட்டி நடந்த இயற்கையை விஞ்சிய நிகழ்வுகளும் (மஹ்ரிபா) மெய்ஞ்ஞான மறு மலர்ச்சிக்கு வித்திட்டது.

திப்பு ஆகிய யூனானிய மருத்துவத்துறையிலும் அருள்மறை குர்ஆனை உச்சரித்து பயன்தரும் ஆத்மீக மருத்துவத்துறையிலும் தப்லே ஆலம் அவர்களிடத்தில் பயிற்சி பெறுவதற்காக நூற்றுக் கணக்கான இளைஞர்களும் முதியவர்களும் அவர்களுடைய கான்கா என்கின்ற தியான மடத்தில் கூடத் தொடங்கினர்.

மாணவர்கள், சீடர்களின் எண்ணிக்கை ஆயிரக் கணக்கில் ஒரு சில ஆண்டுகளிலேயே உயர்ந்துவிட்டது. எனினும் லெபனானின் மலை குன்றுகளை கடந்து தான் பிறந்த நகரமான பஹ்ன்னிஸா நகரை அடைந்து சில மாதகாலம் தங்கி தப்லே ஆலம் பாதுஷா தவம்புரிந்தார்கள்.

தமது நகரின் அருகிலிந்து மலை குன்றில் நின்றிருந்த போது பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து ஹிந்தின் தென்பகுதியான திரிசிரபுரம் சென்று ஆன்மிகப் பணி செய்து தமது எஞ்சிய வாழ்நாளை கழிக்குமாறு உத்தரவிடப்பட்டார்கள்.

தான் சிறுவராயிருந்த போது இரவோடிரவாக உலகம் சுற்றி வந்த காலங்களில் ஹிந்திலுள்ள சோழ வள நாட்டின் தலை நகரமான பழையாறைக்குச் சென்றதையும் குழந்தையில்லா சோழ அரச தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள் பிறக்க ஆசிர்வதித்ததையும் நினைவு கூர்ந்தார்கள்.

மறுநாள் தான் கண்டகனவில் ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களுமாக மூன்று குழந்தைகள் தோன்றின. உங்கள் அரசபாரம்பரியத்துக்கும் ஆன்மீக பரிபாலனத்துக்கும் வாரிசுகள் நாங்கள் என்ற அந்த குழந்தைகள் திரிசிபுரம் மலை மீது நின்று தன்னை அழைக்க கனவுகண்டார்கள்.

திமிஷ்கு நகருக்கு திரும்பி நகரமக்களுக்கும் உற்றார் உறவினருக்கும் ஆட்சியார்களுக்கும் ஹிந்த் நாட்டுக்கு பயணப்படும் தமது முடிவை அறிவித்த தப்லே ஆலம் மக்களிடமிருந்து பிரியா விடை பெறுவதென்பது பெரும் பாடாகிவிட்டது.

“உலகத்துக்காக அலைபவன் நாய், மறுமையில் இன்பத்தை இச்சிப்பவன் விலைமாது, ஆண்டவனை அடைய விரும்புபவனே ஆண்மகன்” என்ற முடி துறந்த முன்னாள் மன்னரின் இறுதி வார்த்தைகள் நகர மக்களை நிலை குலையச் செய்தது.

தப்லே ஆலம் நத்தஹர் ஒலியுல்லா அவர்களின் சீடர்கள் ஆன்மிக மாணவர்களும், நகரை சேர்ந்த நேசர்கள் ஆஷிக்கின்களும், அமைச்சர்கள், தளபதிகள் பலரும், தமது தலைவரை தொடர்ந்து ஹிந்த் நாட்டுக்கு பயணம் மேற்கொள்ள விரும்பவே, தடையேதும் கூறாது தென்திசையில் பயணப்பட்டு 900 கலந்தர்களும் செங்கடலின் கடல்துறை பட்டினமான அகபாவை வந்தடைந்தார்கள்.

கலந்தர் என்ற சிரியா மொழி சொல்லுக்கு பொருள் தன்னுடைய நஃப்ஸ் ஆகிய மனக்குரங்கை தன் இஷ்டப்படி ஆட்டிப்படைக்கும் ஆன்ம பலம் உடையவர் என்பதாகும்.

*நிறைந்த பரிபூரணமே நிற்குணமே நின்மலமே*
*கருணைக் கடலேயென் கண்ணே ரகுமானே*
*- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## திரைகடல் நடுவில் பயணித்த திருவோடு

கடந்த மூன்று நாட்களாய் கடலில் பாறை பொருதுகளில் சிக்குண்டு அசையாது நின்றுகொண்டிருந்த கப்பலான யவன நாவாய் அகபா வளைகுடாவில் அன்னப்பறவையைப் போல் ஆடிஆடி மிதந்து செல்ல துவங்கியது.

நாவாய் மேலிருந்த கலந்தர்களும், அகபா பட்டினத்தின் கரையில் நின்றிருந்த மக்களும் அல்லாஹு அக்பர் என்று உற்சாக முழக்கம் எழுப்பினர். பாபா நத்தஹர் ஒலியுல்லாவின் திருவோடு படைவீரர்களுக்கு தளபதியைப் போல, நீண்ட சாரட்டுக்கு குதிரையைப் போல, கப்பலை இழுத்துச் செல்கின்ற அதிசயத்தை கூடி நின்றவர்கள் கண்கூடாக கண்டார்கள்.

பயணம் தடைப்பட்ட மூன்றாம் நாள் அதிகாலையில் மீகாமனுக்கும் மாலுமிகளுக்கும் பாபா உத்தரவிட்டார்கள். “இதோ எனது திருஓட்டின் முனையில் ஒரு நூல் கயிற்றை கட்டி கடலில் இறக்கி விடுங்கள். நூலின் மறுமுனையை சுக்கானின் கைப்பிடியில் கட்டுங்கள்.”

பாபாவின் உத்தரவை செயல்படுத்திய கலப்பணியாளர்கள் சூழ நின்றிருந்த பாபா, “சலோ ஹிந்துஸ்தான் சலோ” என்று உத்தரவிட, மூன்று நாட்களாய் ஆடாது அசையாது நின்றிருந்த நாவாய் அசைந்து நகர்ந்து மிதந்து நடுக்கடலில் ஊர்ந்தது. தொடர்ந்து அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கம் விண்ணைப் பிளந்தது.

*அண்ட பகிரண்டம் அறியாத நின்வடிவை*
*கண்டவரைக் கண்டால் கதியாம் பராபரமே*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்.*

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் மனிதன் அறிந்திருந்த உலகின் பரப்பளவு பூமியின் நிஜமான பரப்பளவில் கால் பகுதிகூட இருந்திருக்கவில்லை. அலைகடலை தாண்டிச் செல்ல இஸ்லாமிய நாகரீகம் அலாவியதால் மட்டுமே புவியியல் இடைவெளிகள் படிப்படியாக நெருங்கிவந்தன.

கடல் நீரோட்டங்கள், பருவக்காற்றுகள், அவைகளின் திசைமாற்றங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத அக்கால கட்டத்தில் பாபா நத்தஹர் ஒலி தமது தொள்ளாயிரம் கலந்தர்களுடன் தொடங்கிய பயணம் அகபா வளைகுடாவை கடந்து செங்கடலில் நுழைந்தது.

அகபாவிலிருந்து புறப்பட்ட நாவாய் ஜஸீரத்துல் ஹிந்து என்று அறியப்பட்ட இந்தியாவின் மேற்கு கரையின் பானாஜி துறைமுகத்தை வந்தடையும் வரை தவசிரேஷ்டர் பாபா ஒலியுல்லாவின் திருவோடே 900 பேர் கொண்ட கப்பலை கடல் அலை நடுவே இழுத்து வந்ததென்பது இயற்கை கடந்த அதிசயம்.(1)

பாலை அரபின் பழமை துறைமுகமான ஜித்தாவில் இறங்கி மூதாதைதாய் ஹவ்வாவுடைய பூந்தோட்டத்தில் ஜியாரத் செய்தனர். தொடர்ந்த கடல் பயணம் சில நாட்களில் அதன் என்ற (ஏடன்) துறைமுகத்தை அடைந்தது.

கடல் நீரோட்டங்களாலும் பருவக்காற்றாலும் பயணத்தை தடுத்துவிடாதிருக்க ஆழ்கடல் நுழைவை தவிர்த்து ஏமன், ஓமன் கரை ஓரமாக விரைந்து மசீரா தீவை கடந்து அரேபிய தீபகற்பத்தின் ராஸ் அல்ஹாத் கடல்முனை வழியாக அரபிக்கடலில் பயணித்து தேபலை (கராச்சி) வந்தடைந்தார்கள்.

தேபலிலும் மூல்தானிலும் முகம்மத் பின்காஸிம் ஏற்றி வைத்த இஸ்லாமிய ஆட்சிதீபம் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது. அங்கு வாழ்ந்த முஸ்லிம் சிற்றரசர்கள் உமையா, அப்பாஸிய, பாத்தீமிய, கிலாஃபத்துகளுடன் எந்த தொடர்பும் கொள்ளாமல் ஆட்சி செலுத்தி வந்தனர்.

---

*(1) குறிப்பு - இந்த திருஓடு தப்லே ஆலம் பாதுஷாவின் தர்காவில் பாதுகாக்கப்படுகிறது.*

தேபலில் சில வாரகாலம் தங்கிவிட்டு பயணத்தை தொடர்ந்தார்கள் பாபா. கத்தியவார் கட்ச் நிலப்பகுதியை கடந்து கடற்கொள்ளையர்களின் வாசஸ்தலமான கொங்கன் கடற்கரை ஓரமாகவே துனிந்து பயணித்து பானாஜியை வந்தடைந்தார்கள்.

பண்டை துறைமுகமான பனாஜி மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து சரிந்து விழும் கோவா ஆறு ஓடி வந்து கடலில் கலக்கும் உப்பங்கழியின் முகத்துவாரத்தில் அமைந்த பட்டினம். இது சாளுக்கியர்களுக்கும் இராட்டிர கூடர்களுக்கும் துறைமுகப் பட்டினமாக விளங்கியது.

மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவுகளில் சந்தன மரங்களும் தேக்கு மரங்களும் காடுகளாக வளர்திருந்தன. மைசூரையும் அதை சுற்றியிருந்த பிரதேசங்களையும் அக்காலத்தில் தாழைக்காட்டு மேலை கங்கர்கள் என்ற அரச வம்சத்தினர் ஆண்டு வந்தனர். இவர்களின் ஆட்சி உரிமை பெற்ற பிரதேசம் முழுவதும் கங்காவதி என்று அழைக்கப்பட்டு வந்தது.

பாபா நத்தஹர் ஒலியும் தொள்ளாயிரம் கலந்தர்களும் கலங்களில் வந்து பனாஜியில் கரையிரங்கிய தகவல் தெரிந்ததும் அக்காலத்திய கங்கமன்னன் இராட்சச கங்கா பெரும்படையுடன் புறப்பட்டு சென்று அவர்களை எதிர்க்க விரும்பினான்.

அண்மை காலங்களில் வடக்கில் கைபர் கணவாயின் வழியே கஜினி முகம்மதின் படையெடுப்புகள் தொடர்ந்து நடந்து வந்ததால் பனாஜியிலும் அத்தகைய அரசியல் படையெடுப்பு நிகழ்ந்துவிட்டதோ என்று அஞ்சினான் இராட்சச கங்கா.

சிவசமுத்திர நீர் வீழ்ச்சியின் அருகிலமைந்த தலைநகர் தாழைகாட்டுக்குள் நுழைந்து வந்த பாபாவை நேரில் சந்தித்தபோது இராட்சச கங்கா பதைபதைத்தான். “உனது எண்ணம் தவறு. நான் அரசனுமல்லன். என் உடன்வந்திருப்பவர்கள் படைவீரர்களுமல்லர்” என்ற பாபாவின் வார்த்தைகள் அவனை அமைதிப்படுத்தின.

ஆத்ம போத அறிவைப் பரப்பும் இஸ்லாமிய ஞானமரபினர் என்பதை அறிந்து மன்னன் பாபாவைப் பணிந்து தனக்கும் தனது நாட்டு குடிமக்களுக்கும் அண்மையிலுள்ள அடர்காடுகளில் வாழும் தீர்ச்சலா என்னும் கபாலிகர்களின் தலைவனான மந்திரவாதியால் ஏற்பட்டு வரும் இன்னல்களை எடுத்துரைத்தான்.

கபாலிகர்களின் கொடுமை தாங்க முடியாமல் அவர்கள் ஆடுமாடுகளைப் போல் மனிதர்களைப் அவ்வப்போது பிடித்துச் சென்று கொன்று தின்பதை கூறிவிட்டு சகிக்க முடியாமல் கண்ணீருகுத்த மன்னனை பாபா தேற்றினார்கள்.

நாட்டை ஒட்டிய கானகப் பகுதியின் எல்லையில் நின்று கொண்டு பாபா இரு கரங்களையும் உயர்த்தி உத்தரவிட்டு காடுபற்றி எரியச் செய்ததால், மூன்று நாட்கள் தொடர்ந்து எரிந்த காட்டுத் தீயில் தீர்ச்சலாவும் அவனது சீடர்களான கபாலிகர்களும் கருகி மாண்டார்கள்.

சிலமாத காலம் கங்க மன்னனின் விருந்தாளியாக தங்கியிருந்த பாபாவும் கலந்தர்களும் புதன் கிரிமலை பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அனைவரும் பாபா ஹயாத் கலந்தர் என்ற நபித்தோழரின் தர்கா வளாகத்தில் தங்கி தவம் புரிந்தார்கள்.

*கோலங்குறியில்லா குருவடி தொழார்கள் மனம்*
*காலனிருப்பிடமோ கண்ணே ரகுமானே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## சோழவள நாட்டின் சுந்தரப்புறா

"ஆண்டகையே எமது சகோதரன் இளவரசு பட்டம் சூடிய ஆதித்த கரிகாலன் சதியாளர் சிலரால் கொள்ளப்பட்டபின் எங்களுக்கு அடுத்தடுத்து நிகழ்ந்த துன்பங்கள் எண்ணில.

"என் தந்தை மதுராந்தக சுந்தர சோழன் என்று பார்போற்றும் பராந்தகன் மாண்டு போனார். எமது தாயும் உடன்கட்டை ஏறி மடிந்தாள். வேதனையால் வெதும்பி நின்ற எங்களை எமது தந்தையின் குருபிரான் ஆகிய சித்தர் கருவூரார் என்னையும் என் தமையன் அருண்மொழி தேவனையும் தங்களிடம் அனுப்பிவைத்தார்."

தன்முன் வந்து நின்று பேசும் பதிமூன்று வயது இளம் பெண்ணையும் பத்து வயதே நிறைந்த பாலகனையும் தப்லே ஆலம் நத்தஹர் ஒலியுல்லாஹ் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். ஓராண்டுக்கு முன் தான் தனது தாயகத்தில் பஹன்னிஸா நகரில் தங்கியிருந்த போது கண்ட கனவில் தன்னை, தந்தையே என்று வருந்தி அழைத்த பிள்ளைகள் அல்லவா இவர்கள். பாபாவின் உள்ளொளி அறிவில் (இல்ஹாம்) புலர்ந்தது.

பாபா நத்தஹர் ஒலியுல்லாவின் எண்ணங்கள் பின்னோக்கி ஓடின. தனது இளம் பருவத்தில் திமிஷ்கின் அரண்மனையில் வாழ்ந்த காலத்தில் இரவோடிரவாக பறந்து பயணித்து உலகை சுற்றி வந்த நாட்களில் ஒரு நாள் இரவில் ஹிந்து தேசத்தின் தென்புலத்தில்,

சோழ பெருவள நாட்டின் தலைநகர் பழையாறையில் மாமன்னன் பராந்தகனுக்கும் அவன் மனைவி வானவன் மாதேவிக்கும் ஆசிபுரிந்ததால் பிறந்த அருமைப் பிள்ளைகள் அல்லவா இவர்கள். தன்முன் வந்து நிற்கும் பெற்றெடுக்காத பிள்ளைகளை பேரின்ப உணர்வு பொங்க பார்த்துக் கொண்டே இருந்தார்கள் பாபா தப்லே ஆலம். பராபரனின் விளையாட்டுகளில் இதுவும் ஒன்று போலும்.

*என்னறிவை உள்ளடக்கி என்போல் வருமவுனி*
*தன்னறிவுக் குள்ளேநான் சாரு நாளென்னாளோ*
*-அருள்திரு தாயுமானசுவாமிகள்.*

இருகரங்களையும் விரித்து இருப்பிள்ளைகளையும் தன் மார்பில் அணைத்துக் கொண்டு உச்சிமுகர்ந்தார்கள் தவசீலர். இல்லறம் துறந்து துறவறம் பூண்ட அந்த தவஞானி இவர்கள் தன் உயிரின் குழந்தைகளே என்று உணர்ந்தார்கள்.

புதன்கிரி மலையின் உச்சியிலமைந்த குகையில் தன்னை தேடிவந்து அடைந்துவிட்ட பிள்ளைகளை கண்டு பாபா பூரித்த நேரம் அவர்களைத் தொடர்ந்து பாதுகாப்புக்காக வந்த நூற்றுக்கணக்கான படைவீரர்கள் பரிகளின் மீது அமைதியே உருவாய் அமர்ந்து அந்த பாசப் பிணைப்பை பார்த்து வியந்தார்கள்.

இளவரசியும் இளவரசரும் விடைதரவே தளபதியின் செய்கையை ஏற்று படைவீரர்கள் மலைப்பாதையின் நெடுவழியில் பழையாறை நோக்கி பயணப்பட தலைப்பட்டார்கள்.

புதன்கிரி மலை விரிந்து பரந்து கிடந்தது. திறந்த வெளியை கடந்ததும் அடர்ந்து படர்ந்த கானகம். தேக்கு தேவதாரு மரங்களும் இடையிடையே சந்தன மரங்களும் வானத்தை நோக்கி தவயோகிகளைப் போல கிளைக்கரங்களை உயர்த்தி நின்றன.

தூரத்தே பாய்ந்தோடும் கொட்டும் நீர் வீழ்ச்சிகள். உயர்ந்ததும் தாழ்ந்ததுமாய் மலைசிகரங்கள் அமைதி நிலவிய அம்மதியப் பொழுதில் குகையில் அருகருகே அமைந்த குடிசைகளில் இருந்த கலந்தர்களை அழைத்து பாலகர்கள் இருவருக்கும் பசியாற்றும்படி கட்டளையிட்டார்கள் பாபா.

உணவுண்டு பசியாறிய தமக்கையும் சகோதரனும் பாபாவின் அருகிலே வந்து அமர்ந்தார்கள். பாலகன் உறங்கிப் போனான். "உன் தம்பியின் பெயரென்ன" என்ற பாபாவின் வினாவுக்கு "அருண்மொழித்தேவன்" என்ற பாவையின் பதிலைக் கேட்டுவிட்டு, "ராஜ்ராஜ்" என்று உச்சரித்த படி அவன் சிரசை கைகளால் தடவிவிட்டுவிட்டு "இவன்தான் சோழநாட்டின் எதிர்கால அரசன்" என்றார்கள் பாபா.

அன்றுமுதல் குந்தவை நாச்சியார் தன் சகோதரனை ராஜராஜா என்றும் ராஜராஜசோழன் என்றும் அழைக்க துவங்கினாள். அதன் பின் இளவரசி பேசிக்கொண்டே இருந்தாள். சமகால அரசியலை அவ்விளம்பெண் இவ்வளவு விவரமாக தெரிந்துகொண்டிருக்கிறாளே என்று பாபா வியந்தார்கள்.

“மகளே குந்தவை நீ என்னை எப்படி அடையாளம் கண்டு கொண்டாய்? உன் தந்தையின் குருநாதர் கருவூரார் குறிப்பிட்டது என்னை தான் என்பது உனக்கு எப்படி புரிந்தது?”

“எந்தையே எனது குருநாதர் கூறியது மட்டுமல்ல நானும் தங்களை பலமுறை கனவுகளில் கண்டுள்ளேன். மறைந்த என் தந்தையும் தங்களை பற்றி குறிப்பிட்டுள்ளார். “நான் சிவனது பாதங்களில் படுத்து குழந்தை வரம் கேட்டு விடாப்பிடியாய் மன்றாடிய ஓர் இரவில் ஒரு சிறுவர் துறவு கோலத்தில் சந்திரப் பிரபை முகம்சுற்றி ஒளிர என் கண்முன் தோன்றி உனக்கு இரு ஆண் மக்களும் ஒரு பெண்ணும் உண்டு” என்று ஆசிர்வதித்தார் என்று என் தந்தை கூறினார்.

“எந்தையே தங்களை முதன்முதலில் நான் பார்த்த போது தங்கள் முகத்தையும் சிரசையும் சூழ்ந்திருந்த சந்திரப் பிரபையை நான் என் இருகண்களாலும் கண்டேனே.”

மழலை மாறாத நாவோடு பேசிய எழிலரசி குந்தவையின் கூற்று பாபாவை இன்புறச் செய்தது.

“என் செல்வமே” என்று குந்தவையின் கழுத்தையும் முகத்தையும் ஆரத்தழுவி அன்பு முத்தங்களை பாபா பொழிந்தார்கள். “மகளே உன் பார்வையில் பார்” என்று பாபா உத்தரவிட மூடிக்கிடந்த குந்தவையின் விழிகளுக்குள் மூன்று உலகங்களும் சுழன்று சுழன்று வந்தன. கருவூராரின் பூஜா விதிகளின் ஒரு பாடலை அவள் வாய் முணுமுணுத்தது.

*“தெளிவதற்கு சூட்சமிது தெளிவாய் பாரு*
*சிவனிருந்து விளையாடும் தெருவைப்பாரு*
*மொழிவதற்கு என்னிடம் வேறொன்றில்லை*
*முன்னாதி அந்தமொடு நடுவுங்கண்டாய்”*

\- - - - - - -

இரண்டுமுறை பிறந்து பிறவியெடுக்காதவன் பரலோக சாம்ராஜ்யம் புகமாட்டான் என்று நபி ஈசா (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். உலகில் ஒரு தாய்க்கு உதிரமும் எலும்பும் கொண்ட தசைபிண்டமாக அவள் கருவில் அமைந்து உருவாகி மனித சடலத்துடன் குழந்தையாக பிறப்பது முதல்பிறப்பு. இதற்கு காரணமாக இருப்பவன் உடலின் தகப்பன்.

மனிதனாக பிறவி எடுத்தவன் நல்லதொரு ஞான குருவிடத்தில் தீட்சைபெற்று அடிபணிந்து அவரை ஞானத் தந்தையாக ஏற்று அவரது உயிருக்கும் பிள்ளையாக அமைந்து அதன் பலனாக தனக்கென்று ஒரு சூக்கும உடலை அடையப் பெறுவது இரண்டாம் பிறப்பு.

ஆலமே அர்வாஹ் ஆகிய ஆன்மாவின் விண்உலகில் இருந்த நாம் தாயின் கர்ப்பத்தில் புகுந்து மண்புவியில் மனித பிண்டமாக கீழ் இறங்கிடச் செய்தவர் தான் உடலின் தந்தை.

ஆலமுல் மலகூத் என்னும் விண்ணுலக சாம்ராஜ்யத்தில் மீண்டும் புகுவதற்கு ஒரு சூக்கும உடலை அடைய பயிற்றுவிக்கும் ஆத்ம ஞான கலையை கற்றுகொடுத்த குருபிரானே நம் உயிரின் தந்தை.

எனவேதான் நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் உடலின் தந்தையைவிட மண்ணுலகில் இருந்து நம்மை விண்ணுலகில் புகச் செய்யும் குருபிரானாகிய உயிரின் தந்தை பன்மடங்கு உன்னதமானவர் என கூறியுள்ளார்கள். *ஹைருல் அபாயி மன்அல்லமத் - அல்ஹதீஸ்.*

தனக்கு பார்வையில் பார் என்று ஒரே வார்த்தையில் ஞானம் புகட்டி, தொட்டவுடன் ஜோதி தட்டவும் தொடுமுன் சிவயோகம் கிட்டவும் என்ற பொன்மொழிக்கிணங்க மூவுலகையும் தன்னுள் சூக்கும தரிசனம் காண வைத்த உயிரின் தந்தையரான பாபா நத்தஹர் ஒலியின் பாதங்களில் குந்தவை தன் சிரசை வைத்து உறங்கிப் போனாள்.

அது தூக்கமல்ல தூங்காமல் தூங்கி தெய்வத்தை தொழுது சுகம்பெறும் ஆன்மாவின் தவ உறக்கம்.

கீழ் வானத்தில் பொன்னிறம் பூசியெழுந்த கதிரவன் உச்சி நோக்கி விரைந்து கொண்டிருந்தான். வானத்தில் வெள்ளி பாய் விரித்தது போல் ஒளிவெள்ளம் விசிரிகிடந்தது. நூற்றுக்கணக்கான பறவைகள் பாடிக்கொண்டிருந்தன. வண்டுகள் ரீங்காரமிட்டு பறந்து கொண்டிருந்தன. இதழ் விரித்த மலர்களில் அமர்ந்து தேன் உரிஞ்சி மயங்கின. தட்டாம் பூச்சிகள் காற்றில் பறந்து ஆனந்த கூத்தாடின.

*வேதவேதாந்த மெல்லாம் விட்டேறியே கடந்து*
*காதலித்து நின்றேனென் கண்ணே ரகுமானே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## பாபா தப்லே ஆலம் பள்ளி எழுச்சி

சுந்தரசோழனும் வானமாதேவியும் மறைந்ததும் சுந்தர சோழனின் அண்ணன் மகன் உத்தமசோழன் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தான். அண்ணன் ஆதித்ய கரிகாலன் கொல்லப்பட்டதற்கான சதியின் மர்மம் புலப்படாமல் போகவே குந்தவையும் இராஜராஜனும் புதன்கிரி மலையில் பாபாவிடம் அடைக்கலம் பெற்று தங்கிவிட்டார்கள்.

சோழ மன்னர்களின் காலத்தில் சமுதாய நிலை ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக இருந்தது. பார்ப்பனர் சமுதாயத்தின் மேட்டு குடிகளாய் வாழ்ந்தனர். மன்னர்கள் அவர்களை போற்றி ஏராளமான சலுகைகளை செய்தனர். தமிழினை விஞ்சி சமஸ்கிருதம் மேலாதிக்கம் பெற்றிருந்தது.

சமஸ்கிருத இலக்கணத்தை கற்பதற்கு பார்ப்பன குடியிருப்புகளான சதுர்வேதி மங்கலம் பிரம்மதேயம் போன்றவற்றில் பள்ளிகள் அமைந்தன. கல்வியிலும் அரசு அதிகாரங்களிலும் பார்ப்பனர் உயர்ந்ததால் தமிழருக்குள் சாதிய பூசல்கள் தோன்றின. இடங்கை வலங்கை என்ற சாதிப் பிரிவு வளர்ந்தது. ஒவ்வொரு பிரிவிலும் தொன்னூற்றொன்பது சாதிகள் இருந்தன. மன்னர்களும் சாதிக்கேற்ற நீதி வழங்கினர்.

பெண்கள் கல்வியிலும் கலைகளிலும் சிறந்து விளங்கினர். ஆனால் பல பெண்களை மணக்கும் வழக்கம், குழந்தை மணம், உடன் கட்டை ஏறுதல், தேவதாசி முறை, முதலியவற்றால் பெண்கள் தாழ்வு பெற்றனர். சோழர் காலத்தில் வைதீக இந்து சமயம் சிறப்புற்றதால் நாடு முழுவதும் கோயில்கள் எழுப்பப்பட்டன. சைவ வைணவப் புராண காப்பியங்கள் தோன்றின. அரசர்களும் குடிமக்களும் இலக்கிய ஆர்வம் கொண்டிருந்தனர்.

*சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்றஉன்னை*
*தந்தவுனக் கென்னையும்நான் தந்தேன் பராபரமே*
*-தாயுமான சுவாமிகள்*

பெண்கள் கல்வியிலும் கலைகளிலும் சிறந்து விளங்கினர். ஆனால் ஒருவர் பல பெண்களை மணக்கும் வழக்கம் இருந்ததாலும், குழந்தை மணம், கணவனுடன் உடன் கட்டை ஏறுதல், தேவதாசி முறை, பரத்தமை, முதலியவற்றால் பெண்கள் தாழ்வு பெற்றனர். சோழர் காலத்தில் வைதீக இந்து சமயம் சிறப்புற்றதால் நாடு முழுவதும் கோயில்கள் எழுப்பப்பட்டன. சைவ வைணவப் புராண காப்பியங்கள் தோன்றின. அரசர்களும் குடிமக்களும் இலக்கிய ஆர்வம் கொண்டிருந்தனர்.

சாந்தம் சக்தி வழிப்பாடு, சௌரம் சூரிய வழிப்பாடு, காணபத்தியம் கணபதி வழிப்பாடு, கௌமாரம் முருக வழிபாடு புத்தம் மற்றும் சமண மதத்தை தழுவியர்களும் தமிழ்நாட்டில் வாழ்ந்தனர்.

சைவ சமயம் ஞானத்தை அடிப்படையாக கொண்டது. வைணவம் பக்தியை அடிப்படையாக கொண்டது. கடவுள் ஒருவர் உண்டு, உயிருக்கு அழிவில்லை, அது தன்னை தான் அறியும் போது இறைவனை அறிகிறது. அது தன்னைத்தானே அறியாமல் தடைசெய்வது அறியாமை என்னும் இருளாகும் என்பதே சைவம் மற்றும் வைணவத்தின் தத்துவமாகும்.

வைணவத்தின் பக்தி பண்புகளையும் சைவ சமயத்தின் தத்துவ நெறிகளையும் ஷரீயத் தரீகத் ஹக்கீகத் மகரிபத் என்று தனக்குள் பிரதிபலித்த ஏகதெய்வ மார்க்கமான இஸ்லாத்தின் சூஃபித்துவ ஞான தீபமாக புதன்கிரி மலையிலமர்ந்து பாபா ஆன்மீக பரிபாலனம் (1)தொடங்கினார்கள்.

புலர்ந்தும் புலரா கருக்கிருட்டில் சயனஅறையில் ஓய்வு கொண்டிருந்த பாபா தன்மீது பள்ளியெழுச்சி பாடும் ஆத்துமக் குமாரியின் குரல் கேட்டு ஆச்சர்யத்தால் நெகிழ்ந்தார்கள்.

குந்தவை நாச்சியாரும் இளவல் ராஜராஜனும் பாபாவோடு தங்கிவிட்ட ஆறாம் ஆண்டு ஒரு வசந்த கால காலைப் பொழுதில் இந்த இனிமையான சம்பவம் நிகழ்ந்தது. குந்தவையின் குயிலினும் இனியக் குரலைக் கேட்டுக் கொண்டே பாபா படுக்கையில் சாய்ந்து கொண்டிருந்தார்கள்.

---

*குறிப்பு - பாபா ஹயாத் கலந்தர் அடக்கமாகியுள்ள புதன்கிரி மலை பெங்கலூரிலிருந்து 150 கலே மீட்டர் மேற்குத் சிக்மலூர் நகருக்கு புறம்பாக அமைந்துள்ளது.*

*திரைகடந்து கரையடைந்து  கான்கடந்த நாதரே*
*உரைகடந்து உயிர்வளர்ந்து ஆன்ம உய்வு பெற்றவா*
*மறைமுழங்கும் அரபுதேயம் மதினமாநகரில் வாழ்*
*இறைநபிக்கு பகரமாக ஹிந்துதேசம் வந்தவா*
*தரைகளெங்கும் பறைமுழங்கி தத்துவங்கள் பேசவே*
*விரைந்து வந்த தப்லே ஆலம் வேந்தரே எழுந்திரும்*

*உதயமான ஆதவன் ஒளியும் வானில் படருதே*
*விதவிதமாய் பட்சி ஜாலம் ஒலிகள் எங்கும் கேட்குதே*
*மதம்கொளாமல் மார்க்க வழி மக்களை அழைக்கவே*
*புதன்கிரி மலையமர்ந்து புதுமை பேசும் சித்தரே*
*நிதமும்உங்கள் பதம்தொழும் பாவையெந்தன் நெஞ்சிலே*
*இதந்தரவும் தப்லேஆலம் எந்தையே எழுந்திரும்*

*மலர்மணக்கும் தென்றல் காற்று மன்றிலே புகுந்ததே*
*இலைமறைக்கும் கனிகள் வாசம் எங்குமாக பரவுதே*
*சலசலத்து ஓடுகின்ற அருவிபாயும் நீரிலே*
*கலகலத்து அன்னம் வாத்து கூட்டம் ஆட்டம் போடுதே*
*நிலமும் நீரும் கடலும் கரையும் புகழும் சூஃபி ஞானமாம்*
*கலைவளர்க்கும் தப்லேஆலம் கலந்தரே எழுந்திரும்*

*மான்மறைகள் ஆவினங்கள் ஆட்டுமந்தை கூட்டமும்*
*யானைகூட்டம் காட்டெருமை குதிரையோடு பரிகளும்*
*அங்குமிங்கும் உரிமையோடு ஓடுகின்ற காட்டிலே*
*கங்கைபோல காவிரியும் பாய்ந்துவரும் நாட்டிலே*
*மோனதவ பீடம் கொண்ட ஏகதெய்வ பக்தரே*
*ஞானபானு தப்லேஆலம் நாதரே எழுந்திரும்*

*தேவதாரு மரமடர்ந்த ஷாம்சிரியா நாட்டிலே*
*பூமழையாய் பனிபொழியும் பஹன்னிசா நகரிலே*
*நபிவழியாய் வந்துதித்த அகுமத்கபீர் வாரிசே*
*தவம் நிறைந்த பதுஹுன்னிசா பெற்றெடுத்த மைந்தரே*
*ஜீவகோடி உயிர்களுக்கும் அருள் வழங்கும் சீலரே*
*தேவதேவ தப்லேஆலம் பாதுஷா எழுந்திரும்*

*வேண்டிநின்ற குருவின் சிட்சை சிரசின் மீது ஏற்றவா*
*மூண்டத் தீயில் கொதித்த நீரில் குதித்து தீட்சை பெற்றவா*
*நாடுகின்ற மக்கள் நின்று தேடுகின்ற தேட்டமும்*
*வீடடைந்து வந்து சேர்க்கும் தெய்வத்திரு தோற்றமே*
*நான்புனைந்த கவிதை ஏற்று நலமருளும் ஆண்டவா*
*வான்நிறைந்த தப்லேஆலம் தேவதேவே எழுந்திரும்*

படுக்கையில் அமர்ந்து வெளிவராந்தாவில் அமர்ந்து பாடிக்கொண்டிருந்த குந்தவை நாச்சியாரை நோக்கி, ''மகளே பள்ளியெழுச்சி பாடல் முடிந்துவிட்டதா?'' என்று பரிகாசத்தோடு கேட்ட பாபாவுக்கு பாவையின் பதில் கனிவோடு வளர்ந்தது,

''இல்லை எந்தையே, எனக்கென்று ஒரு சொந்த பாடல் உண்டு. அதையும் நான் பாட தங்கள் உத்தரவு வேண்டும்.''

சிறிதுநேரம் மௌனம் காத்த பாபா ''பாடு மகளே நீ என் உயிரின் பேறு அல்லவா. உன் இதயவீணையின் சங்கீதத்தை நான் கேட்க மறுக்கமாட்டேன்.'' குந்தவையின் குரல் கேட்டு குவலயம் இன்புற்றது-

*தோளில்சூடும் மாலைதெய்வம் மார்பில்ஏற்ற கோதையாள்*
*மாலின்பக்தை ஆண்டாள்அவள் பாதைகண்ட பாவைநான்*
*தாழ்பணிந்து தங்கள் மார்பில் பாடல்ஆரம் சூடுவேன்*
*ஊழ்வளர்ந்து எனை மறைத்து தடைபுரிந்த போதிலும்*
*மாரிகால முகிலைப் போல அருள்மழை பொழியும் நின்*
*பார்வை எந்தன் மீதிலென்னும் தப்லேஆலம் தந்தையே!*

*மூர்த்திமூவர் கீர்த்திப் பெற்ற முந்நீர் பரப்பிலே*
*பூர்த்தி பெற்ற ஞானமார்க்க தீபமாய் புகுந்தவா*
*பார்க்குள் ஓங்கும்ட ஏகதெய்வப் பராபர கடவுளின்*
*சூக்குமச் சுடரதாக கோட்டைமலை நின்றவா*
*தீர்த்தமாடி தினமும் உங்கள் கமலபாதம் தொழுபவள்*
*நேர்த்திகடன் தப்லேஆலம் தந்தையே உம்பாதமே!*

*குழல்விரித்து உங்கள்பாதம் துடைத்திடும் பக்தைநான்*
*பழிபடர்ந்து விதியை நொந்து பாரினில் கிடப்பதோ*
*வழியறிந்தும் தெய்வலோக ஜோதிநானும் கண்டிலேன்*
*இழிவடைந்து இகவாழ்வின் இருட்டினில் உழல்கிறேன்*
*நலிவடைந்த உயிர்களுக்கும் இறையருள் கடாட்சமே*
*கலியுகத்தில் தப்லே ஆலம் தந்தையே உம் பாதமே!*

குடிலின் எதிரில் அமைந்த காட்டுக்குளம் மிகஅழகாக பரவிக்கிடந்தது. ததும்பும் காவிரி நீரில் தள்ளாடும் அல்லிமலர்கள் கரையோரங்களில் சுற்றி காவலுக்கு நிற்பதுபோல சந்தண மரங்கள். காலை கதிரவனின் கதிர்வீச்சு குளத்தின் தெள்ளியநீரை வெள்ளித் திரவமாக மாற்றியிருந்தது.

காட்டில் இருந்த நறுமண செடிகளிலிருந்து சுகந்தம் வந்துகொண்டிருந்தது. மரப்பொந்துகளில் ஓடி விளையாடிய அணில்கள் கீச்சு கீச்சு என்று ஒலி எழுப்பியது. எங்கிருந்தோ ஒரு மாமரக்குயில் எழுப்பிய சோகக் குரல் அங்கு நிறைந்திருந்த நிசப்தத்தை விரட்டியது.

பாபா தன் வளர்ப்பு மகளை மீண்டும் பரிவோடு பார்த்தார்கள். கடந்த ஆறாண்டு காலமாக தன்னிடம் புகலிடம் பெற்று ஆன்மீக அறிவையும் வளர்த்துக்கொண்ட அந்த பத்தொன்பது வயதுநிறைந்த சோழ நாட்டு இளவரசியை மீண்டும் பார்த்தார்கள்.

குடிலின் வாசலில் தந்தையும் மகளும், அரங்கனும் ஆண்டாளும் போல நின்றுக்கொண்டிருந்த அந்த தருணத்தில் அடர்ந்த அடவியின் அமைதியை கிழித்துக் கொண்டு எழுந்த குதிரை குளம்பொலிகளின் பேரோசை கேட்டது. அந்த ஓசை கேட்டு ஆடு மாடுகளும் விரண்டோட தொடங்கின.

க்ஷணப்பொழுதில் சோழ நாட்டுப் படைவீரர்கள் நூறுபேர் கீழைசாளுக்கிய நாட்டு சிற்றரசன் வந்தியத்தேவன் வானவராயன் தலைமையில் வந்திறங்கினார்கள். அவன் கூறிய சொற்களை கேட்டு குந்தவை திடுக்கிட்டாள்.

“இளவரசி உங்கள் பெரியப்பர் மகன் உத்தமச் சோழர் இறந்துவிட்டார். தங்கள் சகோதரர் அருண்மொழி தேவரை ஆட்சிக் கட்டிலில் அமர்த்த நாட்டு மக்கள் காத்திருக்கிறார்கள். தங்கள் தமயனை அழைத்துகொண்டு தாங்கள் உடனே தஞ்சாவூருக்கு புறப்பட்டு வரவேண்டும்.”

*வாராயோ ஐயா வந்திறங்கி கொண்டணைக்கப்*
*பாராயோ சற்றே பகராய் பராபரமே*
*- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

# முடிசூடிய மன்னன்

மகுடாபிஷேகம் குறிக்கப்பட்டிருந்த நாளுக்கு இருநாட்களுக்கு முன்னதாகவே நூற்றுக்கணக்கான கலந்தர்கள் உடன்வர பாபா தப்லே ஆலம் நத்தஹர் ஒலி தமது வளர்ப்பு பிள்ளைகளான குந்தவை நாச்சியாரும் பட்டத்தரசு பொறுப்பேற்க இருக்கும் அருள்மொழி தேவனாகிய ராஜராஜனும் உடன் வர தஞ்சை அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அரண்மனை வாயிலில் ஒரு பசுங்கிளி பறந்துவந்து அவர்களை வரவேற்றது.

சோழநாட்டின் எட்டு திக்குகளிலிருந்தும் மக்கள் தஞ்சாவூர் நகரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். தஞ்சை கோட்டைக்கு வெளியே மக்கள் ஜனசமுத்திரம் போல் கூடிகிடந்தார்கள். மறைந்த சுந்தர சோழனின் இளையமகன் அருண்மொழி தேவனுக்கு நடக்கும் முடிசூட்டுவிழாவை காணநாட்டின் குடிமக்கள் அனைவருமே விரும்பினார்கள்.

கொடும்பளூர் வேளார் வீராவேசமாக ஆயிரம் படைவீரர்களுடன் வந்திருந்தார். பழுவூர் வீரர்களும் கொடும்பளூர் வீரர்களும் மகிழ்ச்சி கூத்தில் இறங்கினர். தஞ்சை கோட்டையின் உட்புறமும் வெளிப்புறமும் வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் விருந்தினர்கள் வந்திருந்தனர்.

இளைஞரான அருண்மொழி தேவன் பட்டத்து யானை மீதேறி மேளதாளங்கள் முழங்க வீதிவலம் வந்தான். வைதீகமாக நடத்தப்படும் சடங்குகள் அனைத்தும் நடந்தேறின. சிரசில் வைக்கப்படும் மணிமகுடத்தை தவிர, மார்பில் அணியும் நவரத்தினமாலை, இடை அலங்காரம் ஆகிய நீண்டவாள் முதலிய ஆபரணங்களுடன் அருண்மொழிதேவன் கொலுமண்டபத்தில் வந்து அமர்ந்தான்.

*சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே*
*ஆதியே நின்னை அறியவைத்தால் ஆகாதோ*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்*

சோழர்குல பெருமைகளை புலவர் ஒருவர் பாடல்களாய் பொழியத் தொடங்கினார். அமைச்சர்கள், சிற்றரசர்கள், படைத்தளபதிகள், சாமந்தர்கள், கோட்டத் தலைவர்கள், அதிகாரிகள், சிவாச்சாரியர்கள், விண்ணகரப்பட்டர்கள், தமிழ்பெரும் புலவர்கள் பலரும் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர்

புறா ஒன்றின் உயிரை காப்பாற்ற தன் தொடையின் சதையை அறுத்துக் கொடுத்த சோழ குலத்தின் ஆதிமன்னன் சிபிசக்கரவர்த்தியின் புகழ்பாடபட்டது. பசுவுக்கு நீதிவழங்க தான் பெற்ற மகனை தேரின் காலில் பலிகொடுத்த மனுநீதிச் சோழன் பாடல் வரிகளில் பாராட்டப்பட்டான்.

பூம்புகாரில் முடிசூடி இமயமலைவரை படைநடத்திச் சென்று வட பாரதம் வென்று பனிமூடிய சிகரத்தில் பாறைகல்லில் புலி இலச்சினை பொரித்து வந்த கரிகால் பெருவளத்தான், சிவபெருமானின் பரமபக்தன் கோப்பெருஞ்சோழன் ஆகியோரும் பாடப்பட்டனர்.

முற்கால சோழராட்சிக்குப்பின் ஆறு நூற்றாண்டுகாலம் மங்கி கிடந்த சோழமரபின் புகழை ஒன்பதாம் நூற்றாண்டில் ஓங்கச் செய்தான் விசயாலயன். அவனை தொடர்ந்த ஆதித்தனும் முதலாம் பராந்தனும் நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தினர். கண்டராதித்தன் அவன் தமையன் சுந்தர சோழனும் ஆண்டு உத்தம சோழனும் மறைந்தபின் ஆட்சிகட்டிலில் அமர்ந்தான் இராசராசன்.

தமிழக வரலாற்றிலேயே சிறந்த மன்னன் என்று வரலாற்றாசிரியர்கள் புகழும் அருண்மொழித்தேவன் என்று இயற்பெயர் கொண்டவனும் பொன்னியின் செல்வனன்று நாட்டு மக்களால் புகழப்பட்டவனுமான இராசராசனின் சிரசின் மீது பாபா தப்லே ஆலம் பாதுஷா மணிமுடி சூடினார்கள். அவன் கரங்களில் ஆட்சி செலுத்தும் செங்கோலை எடுத்து கொடுத்தார்கள்.

“ராஜராஜசோழன் வாழ்க” என்று பாபா தப்லேஆலம் எழுப்பிய குரலை மன்டபத்தில் கூடி நின்ற மக்கள் கூட்டம் பரவசத்தோடு எதிரொலித்தது. பாபா அவனுக்கு சூட்டிய ராஜராஜசோழன் என்ற அவன் பெயரை சரித்திரம் காலாகாலமும் புகழ்ந்துபேசி கொண்டே இருக்கிறது.

அதோ மேன்மாடங்களில் பூங்குழலியும் வானதியும் இருபுறமும் அமர்ந்திருக்க நடுவீற்றிருந்தாள் குந்தவைப் நாச்சியார். விழா நிகழ்வுகள் முடிந்து பாபா விடைபெறும் போது கீழை சாளுக்கிய மன்னன் வல்லவராயன் பந்தியத் தேவனை நீ விரும்பினால் திருமணம் செய்துகொள் என்று குந்தவையிடம் குறிப்பிட்டார்கள்.

வல்லவராயனோடு மணமுடிந்தாலும் மேலை சாலுக்கியரோடு நடந்தபோரில் கணவன் இறந்ததால் தஞ்சையில் தன் சகோதரனோடு தங்கிவிட்ட குந்தவை நாச்சியார் அறப்பணிகள் பல புரிந்தாள், தலைநகரில் மருத்துவச் சாலை ஒன்றை அமைத்தாள், குருகுலங்கள் பல ஏற்படுத்தி கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டாள். தந்தையார் பெயரால் ஏரிகளும் குளங்களும் சாலைகளும் சத்திரங்களும் அமைய காரணமாயிருந்தாள்.

சோழ நாட்டுக்கு வந்து தங்களுடன் தங்கியிருக்குமாறு மாமன்னன் இராஜராஜனும் குந்தவை நாச்சியாரும் விடுத்த அழைப்பை ஏற்று பாபா தப்லே ஆலம் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றுவிட்ட கலந்தர்களைத் தவிர எஞ்சியிருந்தவர்களோடு சோழநாட்டுக்குள் நுழைந்து திருசிரபுரம் என்ற திருச்சியில் வந்து தாமதித்தார்கள்.

திருச்சிரபுரத்தில் தங்கிய குருநாதர் பாபாவைத் தேடிச்சென்று நேரில் கண்ட மாமன்னர் இராசராசனும் குந்தவை நாச்சியாரும் தஞ்சைக்கு வந்து அரண்மனையில் தங்குமாறு விடுத்த அழைப்பை பாபா மறுதளித்தார்கள். வெள்ளுடைதரித்த குந்தவையோ தான் பாபாவோடு தங்கிடப் போவதாக கூறி தன் சோதரனுக்கு பிரியாவிடை கொடுத்து பிரிந்தாள்.

பாபாவின் பாத திருவடிகளில் காலம் கழிக்க விரும்பி பாபாவின் திரிசிரபுர தவக்குடிலில் தங்கிவிட்ட குந்தவை நாச்சியாரின் தோள்களில் வந்தமர்ந்தது ஒரு பசுங்கிளி. மூன்றாண்டுகளுக்கு முன் ராஜராஜசோழனுக்கு மணிமுடி சூட தஞ்சைக்குள் பாபாவுடன் சென்று புகுந்தபோது வரவேற்பளித்த கிளியல்லவா இது என்று வியந்தாள் குந்தவை.

*காவேரி விரஜாஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம்,*
*ஸவாஸ*ு*தேவோ ரங்கேஸ ப்ரத்யட்சம் பரமபதம்*
*விமானம் பரணவாகாரம் வேதச்ருங்கம் மஹாத்பதம்*
*ஸ்ரீரங்கசாயி பகவான் பராணவார்த்தம் பிரகாசகம்*

என்று மிழற்றிய கிளியை நாச்சியார் வினவினார்,

“நீ எங்கிருந்து வருகிறாய்.”

“நான் திருஅரங்க திவ்ய தேசத்திலிருந்து வருகிறேன்” என்றது பட்சி.

“ஏன் வந்தாய்” என்றாள் மாது?

“பகவானை ஜீவனோடு தரிசிக்க” என்று பாபாவை பரக்கப்பரக்க பார்த்துகொண்டே பதில் கூறியது கிளி.

---

பார்க்க :

*தாயுமான சுவாமிகள் திருப்பாடல் திரட்டு*

*பைங்கிளி கண்ணி பதிகம்*

*ஆவிக்குள் ஆவியெனும் அற்புதனார் சிற்சுகந்தான்*
*பாவிக்கும் கிட்டுமோ சொல்லாய் நீ பைங்கிளியே*
*நன்னஞ்சத்து அன்பரெல்லாம் நாதரை இன்பணைந்தார்*
*வன்னெஞ்சத் தாலேயான் வாழ்விழந்தேன் பைங்கிளியே*
*மண்ணுறங்கும் விண்ணுறங்கும் மாகடல் மலையுறங்கும்*
*கண்ணுறங்கேன் என் இறைவர் காதலால் பைங்கிளியே*

*உம்பர்க்கும் எட்டாதென் றொன்றிமறை ஓலமிட்ட*
*செம்பொற் கிரியேஎன் ஜெயமே நிராமயமே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## மலைப்பாறையை தடுத்த மந்திரக் கை

திரிசிரபுரம் உச்சிப் பிள்ளையார் கோயிலில் மேளதாளங்கள் முழங்கின. அன்று அதிகாலையிலேயே உறையூரிலிருந்தும் திருவரங்கத்திலிருந்தும் மக்கள் கோயிலை நோக்கி வந்த வண்ணமிருந்தனர்.

விநாயகனே வினை தீர்ப்பவனே குணாநிதியே குருவே சரணம் என்று மக்கள் குறையிரந்து நின்றனர்.

அன்று விநாயக சதுர்த்தி தினம். தமிழகத்தின் எல்லா ஊர்களிலும் கோயில்களில் ஆராதனை நடந்தாலும், உச்சிப் பிள்ளையார் கோயிலின் தனிமகத்துவம் கருதி சுற்றுப்புரங்களிலுள்ள ஊர்களிலிருந்து இந்துப் பெருங்குடிமக்கள் அந்த மலை கோயிலை நாடி வருவது வழக்கமாகிவிட்டது.

கதிரவன் நடு வானத்தை நோக்கி மெல்ல நகர்ந்து கொண்டிருந்தான். சூரியனின் செங்கதிர்கள் கருங்கல் பாறைப் பாதையில் மேலேறி வந்த பக்தர்களின் கண்களை கூசச் செய்தது.

ஆரவாரமிக்க அந்த நாளில் உச்சிப் பிள்ளையாரை உற்சவ நாளில் தரிசிப்பதோடு, குருநாதர் தப்லே ஆலம் பாபாவுடன் தங்கிவிட்ட குந்தவை நாச்சியாரைப் பார்த்து நலம் விசாரித்து விட்டுப் போவதற்காக மாமன்னன் இராஜராஜ சோழனின் மனைவியர் வானவன் மாதேவியும் பஞ்சவன்மாதேவியும் திரிசிபுரம் வந்தனர்.

மன்னனின் மகள் இளைய குந்தவையும், மைந்தன் இராஜேந்திரனும் அத்தையைக் காணவிரும்பியதால், பாதுகாப்பு படையினர் சூழ அனைவரும் காவேரி கரையோரமாகவே யானைகளிலும் குதிரைகளிலும் பயணித்து மலைகோட்டை அடிவாரத்தை அடைந்தனர்.

*கண்ணும் விண்ணும் வந்து வணங்காதோ நின்னருளை*
*கண்ணுற வும்கண்டவரைக் கண்ணே பராபரமே*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்*

வில்லம்பு ஏந்தி வரும் ஏய்ப்படை ஒன்றும், வாள் வித்தைப் பயின்ற வெட்டுப் படை ஒன்றும் மாதண்ட நாயகன் என்றழைக்கப்படும் படைதளபதியின் தலைமையில் ராஜகுடும்பத்துக்கு பாதுகாப்பாக உடன் வந்தனர்.

பாதுகாப்பு படையினர் தரைமீது தாமதிக்க காலாட்படையினர் நூறு பேர் சூழ மலை கோட்டையின் மீது அரசகுடும்பத்தினர் மேலேறி நடந்து வந்தனர். மலைப்பாதையின் நடுவாந்திரமான பகுதியில் அமைந்த குடில்களில் மகான் தப்லே ஆலம் அவர்களுடன் குந்தவையும் கலந்தர்கள் சிலரும் தங்கியிருந்தனர்.

திடீரென வானில் இருள் சூழ்ந்தது. பலத்த சூறைக் காற்று வீசத் தொடங்கியது. கனத்த மழை பெய்யக் கூடுமோ என்ற அச்சம் தலை தூக்கியது. நாலாபுறமும் இருள் சூழ்ந்து வரும் அத்தருணம் குன்றின் உச்சியில் இடியோசை போன்ற சப்தம் எழுந்தது.

மின்னல் இல்லாமல் இடியா? என்று பக்தர்கள் திகைத்த போதுதான் மலைஉச்சியிலிருந்து உருண்டு வரும் பெருங் கருங்கல்லை பார்த்தனர் மக்கள். பெரிய ராட்சதனை போன்று உருண்டு உருண்டு மக்கள் நடந்து வரும் குறுகிய ஒற்றையடிப் பாதைக்கு அருகில் விரைந்து நகர்ந்து கீழே இறங்கி கொண்டிருந்தது அந்த பெருங்கல் பாறை.

“ஐயோ ஐயோ” என்ற கூச்சலும் குழப்பமும் எழுந்திட மக்கள் அங்குமிங்கும் கலைந்து ஓடத் தலைப்பட்டனர். குழந்தைகளின் அபயக் குரல் விண்ணைத் தொட்டது. பெரும் மண்புழுதி படலமாய் எழுந்து கண்ணுக்கெட்டிய தூரம்வரை படர்ந்தது.

“முருகா முருகா” என்ற கூக்குரலும் “பிள்ளையாரப்பா” என்ற கதறலும் க்ஷண நேரத்தில் பரவி சூழ்நிலையை மாற்றிவிட, என்ன செய்வதென புரியாமல் நின்று தவித்தனர் இராஜகுடும்பத்தினரும் பாதுகாப்பு படையினரும்.

அந்த பெரிய கருங்கல் இராட்சசன் எந்த திசையில் கீழிறங்குவானோ? எத்தனை பேர் அவன் காலடியில் மிதிப்பட்டு சாவார்களோ? யாரறிவார்? அவரவரும் தங்கள் குலதெய்வத்தை மனதுக்குள் உருகி மருவி நின்ற அந்த விபரீதமான தருணத்தில் உருண்டு வரும் பாறைமுன் விரைந்து வந்து தன் வலது கரத்தால் அதனை தடுத்து நிறுத்தும் அம்மாமனிதர் யார்?

உருண்டு வந்த பெரும் பாறை அம்மாமனிதர் நிறுத்திய இடத்தில் அசைவில்லாமல் நின்றது. எப்படி? தொடர்ந்து அவர் ''பந்த் பந்த் யா இஸ்ராஃபீல்! (1)பந்த் பந்த்!'' என்று உரத்தகுரலில் உச்சரிக்கவே மிரட்டிய சுழல் காற்றும் மழை மேகங்களும் இருந்த இடம் தெரியாமல் விலகின.

நொடிப் பொழுதுகளில் சூரியன் காட்சிதந்தான். பேரபாயத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தப்பித்து உயிர் பிழைத்தனர். நடைபெற்ற அம்மாபெரும் அதிசயத்தை பார்த்தவாறு மெய்மறந்து நின்றனர் பக்த கோடிகள்.

அண்மை காலமாக திரிசிரபுரத்திலும் அதன் மையமாக அமைந்த மலை கோட்டையிலும் தவவேள்வியில் தங்கிவிட்ட கலந்தர்களான தபோதனர்களின் பீடாதிபதி தப்லேஆலம் என்ற ஞான கோமானை உருண்டு வந்த பெரும் பாறையை கையால் தடுத்து நிறுத்திவிட்ட தவமேருவை இரு கண்களும் விரிய அதிசயமாகப் பார்த்து கொண்டு நின்றனர் மக்கள்.

கூட்டத்தினரில் உடல் முழுதும் திருநீறு பூசி மொட்டைத்தலையுடன் நின்ற சிவ பக்தன் ஒருவன் கூச்சலிட்டான் ''ஆண்டகையைப் பாருங்கள் அவர்கள் இப்போது எனக்கு சிவபெருமானாக காட்சி தருகிறார்கள். நெற்றிக் கண்ணும் கழுத்தில் பாம்பும் கைகளில் உடுக்கையுமாக!'' என்று கூறி கொண்டே ''சிவ சிவா'' என்று ஆனந்த கண்ணீருகுத்தான்.

அதோ அங்கு நெற்றியில் இட்ட நாமத்துடன் நிற்பவன் யார்? ஆழ்வார்கடியானா?. அவன் பரபரத்தான் ''ஐயோ எனக்கு அப்படி தோன்றவில்லையே! எம்பெருமான் இன்று பெருமாளாக அன்றோ எனக்கு காட்சிதருகிறார். அந்த மலர்ந்து புன்னகைக்கும் இதழ்களில், மைதீட்டிய விழிகளில், நெற்றியில் இலங்கும் மூன்று நாமங்களில் என் ஐயன் பாம்பணையில் சாய்ந்து படுத்திருக்கும் இலக்குமியின் பதியாகவன்றோ எனக்கு ஆண்டகை தோன்றுகிறார்.''

இப்படி அவரவரும் தன் கடவுளென கருதும் மாமனிதர் தப்லெ ஆலம் நத்தஹர் ஒலி மலைபாதையின் கீழே இறங்கி வந்தார்கள். திரிசிரபுரத்தில் வந்தேறி வாழும் அரபு பெருந்தனவணிகர்களும் நவமுஸ்லிம்களும் மற்றும் திருச்சி மணிகிராமத்தில் வாழும் வியாபாரிகளும் நடந்த அதிசயத்தை கேள்விப்பட்டு மலைமீது கூட்டம் கூட்டமாக ஓடிவந்து கொண்டிருந்தார்கள்.

ஓடிவந்த முஸ்லிம்களிடையே ஒரு மெலிந்த மனிதர் சப்தமாகப் பேசிக்கொண்டே கொண்டே நடந்து வந்தார். “ஓ அவர்கள் தான் உலகின் அவ்தாதுகளில் ஒருவராவர்கள் அவ்தாது என்றால் ஓ முஸ்லிம்களே உங்களுக்கு அவர் யாரென்பது தெரியுமா?

“அவ்தாத் என்ற இறைநேசப் பெரியார்களைப் பற்றி இறைவன் திருமறையிலே கூறியுள்ளான் “வல்ஜிபால ஔத்தாத் - நாம் மலைகளை பூமியின் முளைகளாக வைத்துள்ளோம்” (78.7) என்பதாக!

“ஆம் இறைநேச ஒலிமார்கள் பல வகைப் படுவர். அவர்களில் ஒரு வகையினர் அவ்தாதுகள் ஆவார்கள். இதன் பொருள் முட்டு, முளை, தூண் என்பதாகும். ஒவ்வொரு காலத்திலும் உலகில் நான்கு அவ்தாதுகள் உயிரோடு இருந்து வருவார்கள் இவர்கள் உலகின் பரிபாலகர் எனலாம்.”

இப்போது அந்த எளிய முதியவரைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிநின்றது. மலையில் வாழ்ந்து வரும் அந்த தவமாமுனியைப் பற்றி இவர் விசேஷமாக ஏதோ கூறுகிறாரே என்று அறிந்து கொள்ள பரபரத்தார்கள் கூடி நின்றவர்கள். அந்த மனிதர் தொடர்ந்தார்.

“இந்த தெய்வீக புருஷர்கள் உலகின் நான்கு மூலைகளிலும் வாழ்கிறார்கள். இவர்கள் மலை குன்றுகளைப் போன்று இறைவழியில் நிலையான இடத்தை அடைந்தவர்கள். இவர்களில் வடத்திசைக்கு உரியவர் அப்துல் மூரீத், தென்திசைக்கு அப்துல் காதிர் மேற்கிற்கு அப்துல் அலீம் கிழக்கிற்கு அப்துல்ஹை என்றும் அழைக்கப்படுவர்.

“நான்கு இமாம்களில் இமாம் ஷாஃபியி (ரலி) அவர்களில் ஔத்தாதுகளில் ஒருவராவார்கள். ஔத்தாதுகள் ஒவ்வோர் இரவும் உலகைச் சுற்றி வருகின்றனர். அவர்களின் பார்வை எவ்விடத்திலாவது விழவில்லையாயின் அடுத்த நாள் அவ்விடத்தில் ஏதேனும் விபத்து நிகழ்ந்துவிடும். பூமியில் ஏதும் குறை கண்டால் குத்பு பொறுப்பில் இருப்பாவரிடம் இவர்கள் கூறுவார்கள் அவர் அதனை சரிசெய்வார்கள்.”

இவ்வாறு அம்மனிதர் பேசிக் கொண்டு இருக்கும் போது மலைச் சரிவில் விரைந்து பாபா தப்லே ஆலம் அவரை சூழ்ந்திருந்த கூட்டத்தருகில் வந்தார்கள். கூட்டம் பாபாவை நோக்கி திரும்பியபோது,

பாபா கூட்டத்தில் பேசிய அம்மனிதரை நோக்கி "யா ஹிளர் அஸ்ஸலாமு அலைக்கும்" என்று உறக்க கூவினார்கள். "யார் யார் யார்? அவர் நபி ஹிளரு (அலை) அவர்களா" என்று மக்கள் அலைமோதி பாபாவையும் நபி ஹிளரையும் (அலை) மாறி மாறி முகம்திரும்பி பார்க்க தலைப்பட்டபோது,

ஒடிந்து ஒல்லியாய் கருநிறமாய் கண்களில் ஒளிபொங்க அங்கு நின்றிருந்த முதிய மனிதர் காற்றில் கலந்து கரைந்து மறைந்து காணாமல் போனார். அன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கான பாங்கோசை எழுந்தது.

நூற்றாண்டுகளுக்கு முன் திருச்சிரபுரத்தில் எழுப்பப்பட்டிருந்த தமிழகத்தின் முதல் பள்ளி வாசலை நோக்கி பாபா விரைந்தார்கள். கல்லுப்பள்ளி என்ற பெயரில் இன்னும் சிதிலமாகி கிடக்கும் கல்லுப் பள்ளியை நோக்கி மக்கள் பாபாவைப் பின் தொடர்ந்து ஓடினார்கள்.

---

*குறிப்பு(1) - பந்த் பந்த் இஸ்ராஃபீல் - காற்றிக்கும் மழைக்கும் அதிபரான வானவரே நிறுத்தும்!*

*முத்தரெல்லாம் வாழியெங்கள் மோனமணித் தாயருளும்*
*சித்தரெல்லாம் வாழி சுத்தசிவமே நந்தீஸ்வரனே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## முத்தராம் நத்தஹர் ஒலியுடன் சித்தர்கள் சந்திப்பு

மாலை நேரங்களில் இருள் சூழும் முன்னிரவில் தோட்டத்தில் நின்று குந்தவை நாச்சியார் பாடிக் கொண்டிருப்பார். அவரைச்சுற்றி மின்மினி பூச்சிகள் அல்லது நெருப்பு பொறிகள் பறப்பது தோழிகளுக்கு அச்சம் தந்தது.

தொடர்ந்து நடந்து வந்த இந்த அருங்காட்சியை இன்று பாபாவிடம் சொல்வது என்று முடிவெடுத்தார்கள். அது அமாவாசை முன்னிரவு. நன்றாக இருள் சூழ்ந்துவிட்டது. வடதிசையில் தோன்றி மேலே வந்த மேகங்கள் வானப் பரப்பை முழுவதுமாக மறைத்துவிட்டன. ஆகாசத்தில் ஒரு நட்சத்திரம் கூட கண்சிமிட்டவில்லை.

ஆனால் குந்தவை பாடத் தொடங்கியதும் மரங்களின் மீதிருந்தும் புதர்களின் மீதிருந்தும் பறந்து வந்தது போன்ற மின்மினிப் பூச்சிகள் குந்தவையின் முகத்தையும் உடலையும் சுற்றத் தொடங்கின. வியப்போடு ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த பெண்கள் பாபாவின் தவச் சாலையினுள் நுழைந்து தங்கள் அச்சத்தை வெளியிட்டார்கள்.

பாபா தோட்டவாயிலுக்கு வந்தார்கள். குந்தவை பாடுவதை கேட்டார்கள்.

*ஓடிஓடிஓடிஓடி உட்கலந்த சோதியை*
*நாடிநாடிநாடிநாடி நாட்களும் கழிந்துபோய்*
*வாடிவாடிவாடிவாடி மாண்டு போன மாந்தர்கள்*
*கோடிகோடிகோடிகோடி எண்ணிறந்த கோடியே*

*வானிலும் மண்ணிலும் வாயுநீர் நெருப்பிலும்*
*தானிருந்த ஜோதியை கண்டுணர்ந்து கொள்ளவே*
*லாயிலாஹ இல்லல்லாவை வாய் மணக்க ஓதடா*
*ஓய்வில்லாமல் ஓதஓத உன்னகத்தில் ஜோதியே*

*எண்ணரிய சித்தர் இமையோர் முதலான*
*பண்ணவர்கள் பத்தரருள் பாலிப்ப தெந்நாளோ*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்*

குந்தவை நாச்சியார் சித்தர் பாடல்களில் ஒன்றை பாடவும், அதனை அவர் வளர்த்து வந்த கிளிப்பிள்ளை சொல் பிசகாது திரும்பக் கூறவும் கண்டு பாபா மகிழ்ந்தார்கள். சேடிகளுக்கு புரியாதது பாபாவுக்கு புரிந்தது. குந்தவை நாச்சியாரை சுற்றி சூழ்ந்து பறந்தவை மின்மினிப் பூச்சிகளுமல்ல நெருப்பு பொறிகளுமல்ல.

அது தவ முயற்சிகளில் ஈடுபடுவோரின் ஜடலத்தை சூக்குமம் மிகைக்கும் போது ஏற்படும் தெய்வீக ஒளிச்சுடர்.

பாபா தப்லே ஆலம் தன் ஆத்தும குமாரத்தி குந்தவையை நோக்கி "மாமாஜிக்னி - ஒளி பொருந்திய முகத்தையுடைய பெண்ணே" என்று செல்லமாக அழைத்தார்கள். ஆனால் பாபா தன் மகளை வினவினார்கள். "அது என்ன மகளே புதிதாக ஒரு பாடல் பாடுகிறாய்?" "தந்தையே இது சித்தர் சிவ வாக்கியர் பாடல்" என்றார் குந்தவை.

*ஆகிகூவென்றே உரைத் அச்சாரத்தின் ஆனந்தம்*
*யோகியோகி என்பர்கோடி உற்றறிந்து கண்டிடாள்*
*பூகமாய் மனக்குரங்கு பொங்குமங்கு மிங்குமாய்*
*ஏகம்ஏக மாதவே இருப்பர்கோடி கோடியே*

"தந்தையே இந்தப் பாடலைத் தான் நான் என் மனதுக்கு இசைந்தபடி மாற்றி பாடியுள்ளேன் என் தோழி பைங்கிளிக்கும் கற்றுத் தந்துள்ளேன்."

சிரித்துக் கொண்டே தொடர்ந்தார் குந்தவை "ஆம் தந்தையே இன்று மகா சித்தர் போகரின் தலைமையில் நான்கைந்து சித்தர் பெருமக்கள் தங்களை சந்திக்க வந்தார்களே. என்ன தான் பேசினீர்கள்?

"நாள் முழுவதும் அவர்களுக்கு விருந்து தயாரிப்பதிலேயே என் நேரம் கழிந்ததால் உங்களுக்குள் நடந்த வாதப் பிரதிவாதங்களை பேச்சுவார்த்தைகளை என்னால் முழுமையாக கவனிக்க முடியவில்லை!"

மாமா ஜிக்னியின் வார்த்தைகளை கேட்டு மகிழ்ந்த பாபா நடந்தவைகளை சொல்லிகாட்டினார்கள்.

"வாதப் பிரதிவாதங்களுக்கு இடமே இருக்கவில்லை. தமிழர்களின் ஆதிமதமே சித்தர்களின் மார்க்கமென்பதை விளக்கினார்கள். அப்படி விளக்கும் போது அது அடிப்படையில் இஸ்லாமிய மார்க்கத்தை தவிர வேறெதுவுமில்லை.

"நீ கூறிய சித்தர் சிவவாக்கியரின் வேறுசில பாடல்களை அவர்கள் கூற கேட்டு நானே வியந்து போனேன். போகருடன் வந்திருந்த ஒவ்வொரு சீடருமே அற்புதமான மனிதர்களாக காணப்பட்டனர். குறிப்பாக கொங்கணர், கருவூரார், புலிப்பாணி போன்றவர்கள்!"

"எந்தையே போகர் முடிவாக தங்களிடம் என்ன சொன்னார்? நமது இடத்தை விட்டு அவர் வெளியில் போகும் போது பாடிய பாடலை மட்டும் நான் நினைவில் வைத்துள்ளேன்."

பாடினார் குந்தவை நாச்சியார் :-

*பாரப்பா நூற்றெட்டு தலமுமாச்சு*
*பலவிதமாய் பெயர்படைத்து நானும் நின்றேன்*
*வேரப்பா இன்னமோர் ஆச்சரியங்கேளும்*
*விதமான துளுக்கர் மதம் ஒன்றுண்டாகி*
*ஆமப்பா அம்மதத்தின் வெளியாய் நின்றேன்*
*அநேகவித ரூபமாய் வெளியாய் நின்றேன்*
*சாரப்பா பராபரத்தின் மார்க்கமாகும்*
*சார்ந்து பாராஏக ரூபம் தானே*

*தானென்று ஆதியிலே நந்தியானேன்*
*தவஞ்செய்து சித்தனயன் மாளுமானேன்*
*வேனென்ற சுப்பிரமணிய ரூபமானேன்*
*விண்ணவர் சேனாபதி யிந்திரனுமானேன்*
*நானென்ற கிருஷ்ணன்வடி வாகிநின்றேன்*
*நபி ரூபமாயுலக மெங்குமானேன்*
*வானென்ற பராபரமாய் நின்று கொண்டேன்*
*மாநிலத்தில் போகரென்று வாழ்ந்திட்டேனே(1)*

"எந்தையே இப்பாடலில் துலுக்கர் மதமென்றும் அம்மதத்தில் நிறைந்து நின்றேனென்றும் பாபா எதை சொல்கிறார்? நபி ரூபமாயுலக மெங்குமானேன் என்கிறாரே? என்னதான் நடந்தது?

"ஒன்றுமில்லை மகளே போகர் என்னிடம் விடைபெறும் போது கலிமாவை சொல்லி கொடுங்கள் என்றார். நானும் லாயிலாஹ இல்லல்லாஹூ முகம்மதுர் ரசூலுல்லாஹி என்று கலிமாவை சொன்னேன். இங்கு வந்த சித்தர்கள் அனைவருமே அதனை வாயால் உரைத்தார்கள். அவர்களுக்குள் ஏன் இந்த தேட்டம் என்பது எனக்கு தெரியாது" என்றார்கள் பாபா.

மாமாஜிக்னியாகிவிட்ட குந்தவை நாச்சியார் மீண்டும் பாடினார், அவர் கையமர்ந்திருந்த கிளியும் அப்பாடலை பிழையின்றி மிழற்றியது.

*லாயிலாஹ இல்லல்லாவை வாய் மணக்க ஓதடா*
*ஓய்வில்லாமல் ஓதஓத உன்னகத்தில் ஜோதியே*

"*பாபா போகரின் குருநாதர் யாராம்?*"
"*அகத்தியர் என்றார் மகளே!*"

"*அகத்தியர் 15000 ஆண்டுகளுக்கு முந்தியவர்* "*ஆதிசிவனின் சீடர்? அல்லவா?* "இவர் எந்த அகத்தியரை சொல்கிறார் பாபா?"

"தெரியவில்லையே மகளே? அகத்தியர் தான் குரு என்றார்? பின்னர் என் அகத்தில் யார் இருக்கிறார்? நீங்கள் தானே இருக்கிறீர்கள். என் அகத்தியர் தாங்களே!" என்று கூறிவிட்டு போகிறார் மகளே.

*குறிப்பு (1)- நூல் - போகர் ஜெனன சாகரம். வெளியீடு- தாமரை நூலகம் சென்னை - 26*
*பக்கம் 95 பாடல் 323, 324*

*எத்திசையும் நோக்கின் இசையாத் திருக்கூத்தாய்*
*வித்தை விளையாட்டு விளைப்பாய் பராபரமே!*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## *நிகரிலி சோழனா? நத்தஹர் ஒலி சோழனா?*

கரிகால சோழன் கட்டுவித்த கல்லணை வழியே ஆரவாரமாகப் பயணித்து வந்த படைபரிவாரங்களின் வேகத்தை குறைத்தான் மாமன்னன் இராஜராஜசோழன். திரிசிபுரம் எல்லையை வந்தடைந்ததும் தான் பயணித்து வந்த யானை அம்பாரியிலிருந்து கீழிறங்கி பாதசாரியாய் நடக்கத் தொடங்கினான்.

மன்னனின் மரபுக்கு மாற்றமான செயலுக்கு பொருள் புரியாமல் மெய்க்காப்பாளர்களும் படைத் தலைவர்களான பெரும்படை முதலி, சேனாவரையன் சேனாதிராயன் பொறுப்பிலிருந்த வீர மறவர்களும் தரை மீதிறங்கி மன்னரை தொடர்ந்து நடந்தார்கள். பாபா தப்லே ஆலம் மீது மன்னன் கொண்டிருந்த பக்தி விசுவாசமே அவன் பாதசாரியாக நடந்து வந்ததற்கு காரணம் என்பதை யாரும் அறிவதற்கில்லை.

பாபா தப்லே ஆலம் நத்தஹர் ஒலி அவர்களும் தபோதனர்களான கலந்தர்களும் அவர்களோடு தமக்கை குந்தவை நாச்சியார் தன் சேடிகளோடும் வாசம் செய்த மலையடிவாரதிலமைந்த வளாகத்துக்குள் வந்து புகுந்தனர் மன்னர்பிரானும் மறவர்களும்.

“இராஜராஜ சோழன் வாழ்க! உய்யக் கொண்டான் வாழ்க! பாண்டிய குலாசினி வாழ்க! கேரளாந்தகன் வாழ்க! சிங்களாந்தகன் வாழ்க! மும்முடிச் சோழன் வாழ்க!” என்று தொடர்ந்து எழுப்பப்பட்ட கோஷங்களை தன் இருகரங்களையும் உயர்த்தி தடுத்தான் சோழமன்னன்.

*பார்த்த விடமெல்லாம் பரவெளியாய் தோன்றஒரு*
*வார்த்தை சொல்லவந்த மனுவே பராபரமே!*
*- அருள்திரு தாயுமான சுவாமிகள்*

எதிரில் தோன்றி காலை கதிரவனைப் போல் காட்சி அளித்த குருநாதர் தப்லே ஆலம் பாத்துஷாவின் பாதங்களில் பணிந்தான். குனிந்து எழுந்த அவனது பார்வையில் சோழர் குலமகள் குந்தவைநாச்சியார் நின்றிருந்தார். பாசத்தால் இருவர் கண்களும் பனித்தன. பாபா இருவரையும் பரிவோடணைத்தபடி ஆனந்த கண்ணீர் உகுத்தார்கள்.

“இராச மார்த்தாண்டன் வாழ்க! நிகரிலிச் சோழன் வாழ்க!” என்று பின்னால் நின்றிருந்த மறவர் பெருமக்கள் குரல் எழுப்பினார்கள். மன்னன் திரும்பி நின்று அவர்களை நோக்கி புன்னகைத்தான்.

“போதும் எனது புகழ்! நிகரிலிச் சோழன் என்ற பெருமை எனக்கு வேண்டாம். நத்தஹர் ஒலி சோழன் என்று என் பெயரை மாற்றுங்கள் என்றார்.

“நத்தஹர் ஒலி சோழன் வாழ்க!” என்ற மன்னரின் புதிய திருநாமத்தை மறவர் பெருமக்களும் வீரர்களும் மட்டுமல்லாது கலந்தர்களும் சேர்ந்து கோஷம் எழுப்பினார்கள்.

கூடி நின்ற நகர மக்களெல்லாம் சாதி பேதமின்றி இராஜராஜ சோழனின் புதிய திருநாமத்தை “நத்தஹர் ஒலி சோழன் வாழ்க” என்று ஒலித்தார்கள்.

- - - - - -

பெருமானார் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன் ஜஸீரத்துல் ஹிந்த் என்று அறியப்பட்ட ஹிந்து நாட்டுடன் அரேபியர்கள் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். அரபுகள் மலபார் நாட்டின் ஒவ்வொரு துறைமுகங்களிலும் காணப்பட்டனர்.

நபித் தோழரான உக்காஷாவின் அடக்கஸ்தலம் கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையில் உள்ளது. மற்றொரு தோழர் தமீமுல் அன்சாரி என்பாரின் அடக்கஸ்தலம் சென்னைக்கு அருகில் கோவளம் கடற்கரையில் உள்ளது.

இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காக மாலிக் பின் தீனார் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தன் குடும்பத்தினருடனும் தோழர்களுடனும் மேலை கடற்கரையில் வந்திறங்கினார். காசர் கோடில் தென்னகத்தின் முதல் பள்ளிவாசல் இவரால் எழுப்பப்பட்டது.

அதே ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழக கடலோரப் பகுதிகளில் முஸ்லிம் குடும்பங்கள் உண்டாகத் தொடங்கின. வணிகத்திற்காக வந்தவர்கள், மற்றும் வாழ்வின் கடமையாக மார்க்கத்தைப் போதிக்க வந்தவர்கள், இங்கேயே தங்கினர். இல்வாழ்க்கை உறவுகளை ஏற்படுத்தி கொண்டனர். இஸ்லாமிய சமுதாயம் மெல்ல தழைத்தோங்க தொடங்கியது.

கோவளம், பரங்கிப்பேட்டை, பழவேற்காடு, தொண்டி, பெரியப்பட்டினம், கீழக்கரை, காயல்பட்டினம், நாகப்பட்டினம், தேங்காய்ப்பட்டினம், கோட்டாறு, கொடுங்களூர், கள்ளிக்கோட்டை, காஸரகோடு, கிரங்கானூர், கண்ணனூர், பொன்னானி ஆகியவை முஸ்லிம்கள் வந்திறங்கிய கடற்கரை பட்டினங்கள்.

பாலக்காடு கணவாய் வழியாக தமிழகம் புகுந்த அரபுகள், உறையூர், அரிக்காமேடு, கரூர் பகுதிகளிலும் தங்கி குடியிருப்புகளை ஏற்படுத்தினார்கள்.

பச்சை நீலம் சிகப்பு மாணிக்கம் போன்ற விலையுயர்ந்த கற்களை சோழ நாட்டாரும், முத்துக்களைப் பாண்டிய நாட்டாரும், அரபு வணிகர்களிடம் விற்று வந்தனர். சோழ பாண்டிய சேரர்களுக்கு தேவையான குதிரைகளை அரபுகள் கொண்டுவந்தனர்.

பாண்டிய மன்னர்கள் தலைநகரமான மதுரை பகுதியிலும், சோழர்கள் தலைநகரமான உறையூர் பகுதியிலும் அரபு வணிகர் கூட்டம் நிறைந்திருந்தது. முஸ்லிம்கள் இங்கு தங்கிவாழ தலைப்பட்டனர்.

திருசிரபுரத்தில் கி.பி.733 ம் ஆண்டில் அப்துல்லா இபுனு அன்வர் என்பவர் ஒரு பள்ளி வாசலை (கல்லுப்பள்ளி) கட்டினார்.

கி.பி. 9ம் நூற்றாண்டில் ஞானமகான் தப்லே ஆலம் நத்தஹர் ஒலியுல்லா இங்கு தங்கி இஸ்லாமிய மார்க்கத்தையும் ஸூஃபி ஞான மார்க்கத்தையும் போதித்தார்கள்.

- - - - - - -

மன்னரும் மற்றவரும் பயண களைப்பு தீர்ந்தபின், மன்னர் குருபிரான் தப்லே ஆலம் பாதுஷாவுடனும், தமக்கை குந்தவை நாச்சியாருடனும் அமர்ந்து பேசி மகிழ்ந்தார். மன்னர் தம் நீண்ட படைப்போர் விவரங்களை அறிவித்தார்.

பாபா கூறினார்கள் "மைந்தரே நீர் வென்று வந்த தேசங்களையெல்லாம் மெய் கீர்த்திகளாக்கி, அதனை கல்வெட்டுகளில் பொறிக்க! உமது தமக்கை எழுதி வைத்துவிட்டார்!" என்றார்கள்.

அருகிலிருந்த குந்தவை நாச்சியார் சிரித்துக் கொண்டே படிக்க தொடங்கினார்.

*காந்தளூர் சாலைக் கலமறுத் தருளி*
*வேங்கை நாடும் கங்கபாடியும்*
*குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்*
*முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும்*
*இரட்டபாடி யேழரை இலக்கமும்*
*முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்*
*திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்*
*எழில் வளர் ஊழியுள் எல்லாயாண்டும்*
*தொழுதக விளங்கும் யாண்டே*

இவ்வாறு தமக்கை பாடவே சோழ மன்னர்! "போதும் போதும் அக்கா போதும்! இதற்குமேல் நான் எங்கும் போவதாக இல்லை. உன்னைப் போல் யானும் ஆத்தும தந்தையோடு தங்கவே விரும்புகிறேன்."

பாபா குறுக்கிட்டு கூறினார்கள். "மகனே தஞ்சையில் உன் கோயில் பணி முடிவடையவில்லையே. உன் ஆலயத்தில் மூலவர் யார்?"

பாபா இசுலாம் உருவத்தை விரும்புவதில்லை என்று தாங்கள் தானே கூறுவீர்கள் "நான் அங்கு முகத் தோற்றமில்லாத சிவ லிங்கத்தை அமைத்துள்ளேன்!

"என்ன சொல்கிறாய் நீ?"

"ஆம் தந்தையே இறைவனின் ஆதி ஆலயம் கஅபாவை நான் கண்டதில்லை. ஆனால் அது மிக உயரமான நாற் சதுர கருங்கல் மேடை என்று கூறினீர்கள். நான் இந்த நாட்டில் எங்குமில்லாத உயரமான அளவில் நாற்சதுரமான கருவறைக்குள் சிவ லிங்க வடிவத்தை தஞ்சையில் எழும் ஆலயத்தின் மூலமூர்த்தியாக நிறுவியுள்ளேன்."

"என்ன மகனே சொல்கிறாய்?"

---

*குறிப்பு (1)-* சோழ மன்னர் மெய் கீர்த்தி

“ஆம் தந்தையே நான் சைவன்! சிவபாதசேகரன் என்ற பெயர்கூட எனக்கு உண்டு. ஆனால் நான் தங்கள் ஆத்துமகுமாரனல்லவா?”

“நல்லது மகனே எதை செய்தாலும் நோக்கம் நல்லதாக இருந்தால் முடிவு நல்லதாக அமையும் என்பது நபிமொழி மகனே உன் நோக்கம் என்ன?”

“தந்தையே! ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு என்பதே எனது நோக்கம்.”

அன்புடன் ஆரத்தழுவி நெற்றியில் முத்தமிட்டு தன் ஆத்தும குமாரனாகிய இராஜராஜ சோழனை ஆசீர்வதித்து வழி அனுப்பி வைத்தார்கள் பாபா தப்லே ஆலம் நத்தஹர் வலி பாதுஷா. தயங்கினார் மன்னர்.

“எந்தையே கோயிலின் வானளாவிய விமானத்தின் உச்சியில் கபாலக் கல்லை ஏற்றுவது சிரமமாக உள்ளது. மற்றபடி எல்லா வேலைகளும் முடிவடைந்து விட்டன!” என்றார் மன்னர்.

“அப்படியா? ஒன்று செய் பெரியப்பெரியப் பஞ்சுப் பொதிகளை ஆலயத்தை சுற்றி ஏணிப்படிபோல சரிவாக அமைத்து அதன்மீது கபாலக் கல்லை உருட்டி மேலேற்றச் சொல் அந்த அந்த காரியம் சுலபமாக முடியும்.”

குந்தவை நாச்சியார் குறுக்கிட்டார்,

“வந்த வேலை முடிந்ததா தம்பி? தந்தையிடம் யோசனை கேட்கத்தானே இவ்வளவு தூரம் வந்தாய்? நீ என்ன செய்கிறாய்? என்ன நோக்கத்தோடு இங்கு வருகிறாய் என்பதையெல்லாம் பாபா நேற்றைய தினமே என்னிடம் சொல்லிவிட்டார்கள்.”

திகைத்து நின்றார் மன்னர் பிரான்.

---

*குறிப்பு :*

*தஞ்சை பிரகதீசுவரர் கோவிலின் கபாலக் கல்லை மேலேற்ற பஞ்சு மூட்டைகளை பயன்படுத்தும்படி போகர் கூறினார் என்பது செவிவழி செய்தி. கோயில் கட்டப்பட்ட காலம் கி.பி. 10ம் நூற்றாண்டு. அப்போது போகர் இருந்தார் என்பது பொருந்தாது. தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் பக்கம் 324. டாக்டர் க.சு. உத்தமராயன்*

*இந்த யோசனையை இராசராச சோழனுக்கு கூறியர்கள் பாபா தப்லே ஆலம் பாதுஷா அவர்களே என்று மற்றொரு செவிவழிசெய்திகளால் அறியப்பட்டது.*

*கண்யே மணியே என்கண்ணிறைந்த காரணமே*
*விண்ணே மெய்ஞ்ஞான வெளியே நிராமயமே*
*- குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## இன்பமே எனக்குள் உன் ரூபம்.

அது வசந்த காலத்தின் காலை நேரம். வானம் மப்பும் மந்தாரமுமாய் காணப்பட்டது. மழைத் தூறல் பூமழைபோல் பொழிந்து கொண்டிருந்தது. அவ்வப்போது வீசிய குளிர்காற்றில் வெளிவாசலில் நின்றிருந்த குதிரைகள் பிடரியை சிலிர்த்துக் கொண்டிருந்தன.

முன்தோட்டத்தில் அசோக மரங்களும் வேப்பமரங்களும் தழைத்திருந்தன தவ குடிலின் ஜன்னல்களை மரக்கிளைகள் மறைத்திருந்தன. குடிலுக்கு வெளியே மலையடிவாரத்தை நோக்கி மேய்ச்சலுக்குப் போகும் செம்மறி ஆடுகளை ஆயர்களின் குரல் மிரட்டியது.

குடிலின் வெளிப்புறமாக அமைந்த குளியல் அறையில் பாபாவை வெந்நீரில் குளிப்பாட்டி நீண்ட துவாலையால் துடைத்து ஆசுவாசப்படுத்தி கொண்டிருந்தார் மாமாஜிக்னி என்ற குந்தவை நாச்சியார். எழுபது வயதை தாண்டிவிட்ட பாபாவுக்கு தூய வெள்ளாடை உடுத்தி தன் இரு கரங்களாலும் அணைத்தபடி சாய்மனைப் பலகையில் அமரவைத்தார் அந்த அரசகுல நிறைமதி.

அந்நேரம் ஜன்னல் வழியாக ஒரு மனிதன் எட்டிப் பார்ப்பது தெரிந்தது. “யார் அங்கே?” என்று அதட்டினார்கள் பாபா. மாமாஜிக்னி விரைந்து சென்று வாசல் கதவைத் திறந்து கொண்டு ஓடுகின்றவனை கவனித்தார்கள். பிறகு திரும்பி வந்து “பாபா இவன் தான் என்னிடம் தொல்லை தருபவன்” என்றார்கள்.

பாபா நிமிர்ந்து பார்த்தார்கள்.

“இவன் நம்மைச் சேர்ந்தவனா இல்லையா என்பது எனக்கு தெரியாது. நோன்பு காலம் துவங்கியதிலிருந்து மாலையில் நான் நோன்புதிறக்கும் வேளையில் ரொட்டியும் கஞ்சியும் சமயலறையிலிருந்து வழங்கும் நான் கொடுக்கும் போது இவன் கலந்தர்களின் வரிசையில் நின்று என்னிடம் கை நீட்டி உணவு பெறுகிறான்.

*பந்தெமெல்லாம் தீர பரஞ்சோதி நீ குருவாய்*
*வந்தவடிவை மறவேன் பராபரமே!*
*-அருள்திரு தாயுமான சுவாமிகள்*

“ஆனால் அவ்வாறு வாங்கும் போது என்கையைத் தொடுகிறான். முதல்நாள் அவன் அவ்வாறு செய்தபோது தங்களிடம் கூறினேன் விட்டுவிடு என்றீர்கள். மறுபடியும் அவன் அவ்வாறு செய்தபோது மன்னித்துவிடு என்றீர்கள். மூன்றாவது முறை தாங்கள் கூறியபடி எச்சரித்தேன் ஆனால் இன்று அவன் தங்களையே கேலியாகப் பார்த்து விட்டுப் போகிறானே”.

பாபா மவுனமாயிருந்தார்கள். பிறகு கூறினார்கள். “மீண்டும் அவன் தொடர்ந்தால் அவன் கையைத் தட்டிவிடு” என்றார்கள். அன்று மாலையிலும் நாச்சியார் நோன்பு திறக்கும் பண்டங்களை வழங்கி கொண்டிருந்த போது அந்த இழிகுண மனிதன் தன் செயலை தொடர்ந்தான். மாமாஜிக்னி அவன் கையை தட்டி விட்டார்கள். அவன் குப்புறவிழுந்தான். கலந்தர்களின் கூட்டத்தில் பெரும் பரபரப்பு எழுந்தது.

- - - - - -

மாலை அசர் தொழுகைக்குப் பின்னர் அந்திமாலையில் நோன்பு திறப்பதற்கான வேளை வரும்வரை பாபா தன் கலந்தர்களும் திரிசிரபுரம் நகரமக்களும் கலந்திருந்த கூட்டத்தில் பேசிகொண்டே இருந்தார்கள்.

“ஒரு ஆண் ஒரு பெண்ணை இச்சித்தாலும் சரி ஒரு பெண் ஒரு ஆணை இச்சித்தாலும் சரி இந்த இச்சை நெறிப்படுத்தப்படவேண்டுமென்று நீதி நூல்கள் ஏன்கூறுகின்றன. நெறிப்படுத்தப்படாத இச்சையின் முடிவு என்ன? இவையெல்லாம் மனித வாழ்கைக்கு தேவையான சிந்தனைகள்.

கலந்தர்களில் முதலாமவர் அன்னை ராபியத்துல் பஸரி ஆவார்கள். அவர்களைப் பற்றிய அற்புதமான செய்தி ஒன்று உண்டு. அன்னை ராபியாவின் கணவர் காலமானபின் விதவையான அவரை திருமணம் செய்து கொள்ள பாக்தாத் நகரத்தில் வாழ்ந்த மார்க்க அறிஞர்களான ஆலிம்கள் பலரும் ஞானமகான்களான ஷெய்குமார்கள் பலரும் விரும்பினார்கள்.

இவர்களில் யாருடைய வேண்டுதலுக்கும் தலைசாய்க்காத மாதரசி ராபியத்துல் பஸரீ அவர்கள் மகான் ஹசன் பஸரி அவர்களிடமிருந்தும் வேண்டுகோள் வரவே நேரில் வந்து பேசும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். நேரில் வந்த மகானிடம் ராபியா விடுத்த கேள்விகள் வினோதமானவை ஆனால் மார்க்க ரீதியானவை.

உலகம் படைக்கப் படும்முன்பு (ஆலமே அர்வாஹ் என்கின்ற) ஆன்மாக்களின் உலகில், பல கூட்டமாக பிரிந்து சென்ற ஆன்மாக்களில் என்னுடைய ஆன்மா இறை விசுவாசிகள் கூட்டத்தில் இருந்ததா? இறைநிராகரிப்போர்கள் கூட்டத்தில் இருந்ததா?

நான் புவியில் பிறக்கும் போது என்மீது சாட்டப்பட்ட வானவர் இவள் மூதேவி என்று எழுதினாரா? அல்லது இவள் சீதேவி என்று எழுதினாரா? நான் மூதேவியா? சீதேவியா?

“எனது இறுதிமுடிவு (ஈமான் என்கின்ற) தெய்வவிசுவாசத்துடன் கூடியதா மாற்றமானதா?நான் மரித்து மண்ணறைக்குள் இறங்கி மூடப்பட்டபின் முன்கர் நக்கிர் என்ற வானவர்கள் என்முன் தோன்றி என்னிடம் வினாவிடுக்கும்போது நான் தெளிவான பதிலை கூறுவேனா மாட்டேனா?

நல்லோருக்கு (கபுரென்னும்) புதைகுழி பூங்காவனம் பொல்லாதவர்களுக்கு அது நெருப்புக்குண்டம் என்று அண்ணல் நபிகளார் அறைந்திருக்கிறார்களே. என்முடிவில் நான் புகப்போகும் மண்ணரை(கபுரின்) இயல்பு பூங்காவனமா தீ குண்டமா?

(கியாமத் என்கின்ற) இறுதி தீர்ப்பு நாளில் (மஹ்சர் என்கின்ற) பெருவெளி மைதானத்தில் மனிதர்கள் நல்லோர்கள் என்றும் பொல்லார்கள் என்றும் பிரிக்கப் படும்போது நான் எந்த கூட்டத்தில் சேர்ந்து நிற்பேன்?

மீஜான் என்கின்ற நீதி தராசில் மனிதர்களின் செயல்களில் நன்மைதீமைகள் நிறுக்கப்படும் போது என்னுடைய செயல்களின் நிறுவையில் நன்மை தட்டுகனக்குமா தீமைதட்டு கனக்குமா?

இறைவனிடம் பட்டோலை வழங்கப்படும்போது பாக்கிய சாலிகளுக்கு வலது கையிலும் துரதிருஷ்டம் பிடித்தவர்களுக்கு இடது கையிலும் கொடுக்கப்படும் என்று குர்ஆன் கூறுகிறதே, எனக்கு அந்த பட்டோலை வலக்கையில் தரப்படுமா இடக்கையில் தரப்படுமா?

முடிவு நாளில் சுவர்க்கத்தை சென்றடைவதற்கு மயிர்ப் பாலத்தை கடந்து செல்ல வேண்டுமே நான் அந்த (ஸிறாத்தல் முஸ்தகீம் என்ற) மயிர்ப் பாலத்தை கடந்து சுவர்க்கம் அடைவேனா? பாலத்தில் தவறி நடந்து நரகத்தில் விழுந்து வதைபடுவேனா?

இப்படி வரிசை வரிசையாக எட்டு சவால்களான கேள்விகளை அடுக்கி கொண்டே போன ராபியத்துல் பஸரியா என்னும் மாதரசி முன் பதில் கூறமுடியாமல் தலை குனிந்து அமர்ந்தார்கள் மகான் ஹசனுல் பஸரி. "ஆண்டவனே அறிவான்!" என்று மட்டுமே அவர்கள் கூற முடிந்தது.

ராபியா விடாப்பிடியாக ஒன்பதாவது கேள்வியையும் கேட்டார்கள். பகுத்தறிவை ஆண்டவன் எத்தனை பங்காகப் பிரித்தான்? அதில் எத்தனை பங்கை ஆண்களுக்கு தந்தான்? எத்தனை பங்கை பெண்களுக்கு தந்தான்?

ஹசன் பசரி பளிச்சென்று பதில் தந்தார்கள் "ராபியா பகுத்தறிவை இறைவன் பத்து பங்காகப் பிரித்தான். ஒன்பது பங்கை ஆண்களுக்கு தந்துவிட்டு ஒரு பங்கை பெண்களுக்கு தந்தான்."

மாதரசி ராபியா மீண்டும் கேட்டார்கள் "அறிஞர் பெருமானே (இஷ்கு என்னும்) மோகமாகிய ஆசையை இறைவன் எத்தனை பங்கு வைத்தான் ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வாறு பிரித்தளித்தான்?

"ராபியா இதனையும் முன்னுள்ள மார்க்க அறிஞர்கள் தெளிவுபடுத்தி உள்ளனர். மோகத்தை பத்து பங்காக்கி பெண்ணுக்கு மோகத்தின் ஒன்பது பங்கை கொடுத்து, ஆணுக்கு ஒரு பங்கை கொடுத்தான்" என்றார்கள் மகான் ஹசன் பஸ்ரி.

"அறிஞரே இறைவன் பெண்ணான எனக்கு கொடுத்த ஒரு அறிவைக் கொண்டு ஒன்பது பங்கு மோகமாகிய இச்சையை நான் அடக்கி கொண்டேன். நான் கேட்ட பத்து கேள்விகளில் ஒரு கேள்விக்கு பதில் சொன்னீர்கள். மீதமுள்ள ஒன்பது கேள்விகளில் ஒருகேள்விக்கு கூட எனக்கும் பதில் தெரியாமல் மனம் உடைந்து அழுது கொண்டிருக்கிறேன். நீங்கள் அழைக்கும் உலக சுகத்துக்கு நான் வருவது எப்படி சாத்தியம்?"

"இடிந்து போனார்கள் மேதை ஹசன்பஸரி. இல்லற வாழ்கையை மறுத்தளித்துவிட்ட மாதரசி ராபியா பஸரியாவின் மனத்துறவை நினைத்து வியந்தார்கள். விடைபெறாமலே ராபியாவின் வீட்டைவிட்டு வெளியில் போனார்கள்."

பாபா தொடர்ந்து பேசினார்கள்.

"கலந்தர்களான நாம் ராபியா பஸரி என்ற அந்த மெய்ஞ்ஞான மாதரசியை நம் முன்னவராக கொண்டுள்ளோம். மனத்துறவு நமக்கு வேண்டும்.

- - - - - - -

மாலைவேளை மஹ்ரிபு வக்து தொழுகைக்கான நேரம் நெருங்கியது. நோன்பு திறப்புக்கான அழைப்பு வந்தது. கலந்தர்கள் உணவு பரிமாறும் குடிலில் வரிசையாக நின்றிருந்தார்கள்.

பாபாவின் உபதேசத்தை செவிமடுத்த பின்னரும் கூட மாதரசி குந்தவை நாச்சியாரின் கரங்களைத் தொட்டவன் அம்மையார் அவன் கையைத் தட்டவும் நின்ற இடத்திலேயே கவிழ்ந்து விழுந்தான். கைகளும் கால்களும் தலையும் வாளால் வெட்டப்பட்டது போல் கீழே விழுந்து இறந்தான்.

மஹ்ரிபு தொழுகைக்குப்பின் இறந்த மனிதனின் உடல் அங்கங்களோடு பொறுத்தி புதைக்கப்பட்டது. தராவீஹ் தொழுகையின் போது பாபா மீண்டும் பேசினார்கள்.

“ஆசைகளை கட்டுப்படுத்துங்கள். சரீஅத்தின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு நடந்து கொள்ளுங்கள். உங்களில் துறவுப் பாதையில் நடக்க முடியாதவர்கள் உள்ளூர் வெளியூர்களில் சென்று நல்ல பெண்களை மண முடித்துக் கொண்டு வாழ நான் அனுமதிக்கிறேன். அங்கும் நீங்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சட்ட நிலையை பேணிவாழ்ந்தால் தான் உரிய மோட்சம் பெறுவீர்கள்.

“ஷரீஅத் எனது சொல் தரீக்கத் எனது செயல் என்றார்கள் நபிகள் பிரான். தரிக்கா என்ற செயல் வழி மார்க்கத்தில் வந்து புகும் ஆணாயினும் பெண்ணாயினும் ஷெய்கு ஆகிய குருநாதரின் மீது ஆசையும் மோகமும்(1) காதலும் கொள்வது சீடனின் மீது கடமையாகிவிடும்.

அது குருநாதனின் உடல்மீது கொள்கின்ற காதலல்ல. குருநாதரின் ஆன்மாவின் மீது கொள்கின்ற காதல். ஆம் உங்கள் உருவத்தை மறந்து விட்டு குருபிரானின் ஆன்மரூபத்தை உங்கள் ரூஹ்ஆகிய ஆன்மாவாக உங்களுக்குள் நிறைத்து கொள்ளுங்கள்.

சிற்றின்ப வேட்கையில் ஒரு ஆணும் பெண்ணும் இரண்டற கலந்துவிட விரும்புகிறார்கள். ஆனால் அந்த விருப்பம் ஒரு சில வினாடிகள் கூட நீடிக்காமல் உடைந்து சிதறிவிடுகிறது. ஆனால் நீ ஆண்மகனோ பெண் மகளோ பார்வையில் உன் குருபிரானின் ஆன்ம ரூபத்தை நிலைநிறுத்தி பழகு. இது ஹக்கீகத்தான சத்திய நிலை. உனக்கு மஹ்ரிபா என்ற மெய்ஞ்ஞானம் சித்திக்கும்.” பாபாவின் சொற்பொழிவு பலருக்கும் தெளிவுதந்தது.

மறுநாள் அதிகாலையில் குந்தவை நாச்சியார் ஆகிய மாமாஜிக்னி படுக்கையிலிருந்து எழுந்து பாபாவின் பாதங்களில் முத்தமிட்டார்கள். "என்ன மகளே?" என்றார்கள் பாபா "தங்கள் உபதேசத்தின் படியே தங்கள் ஆன்ம ரூபத்தை என்க்குள்ளாக்கினேன். என் இதய கமலத்தில் பேரின்ப பிரவாகம் இரவு முழுவதும் பெருகிவர கண்டேன்."

"சஹர் உணவுக்கும் பஜ்ரு தொழுகைக்கும் பின் அதிகாலையில் தூங்கிவிட்ட நான் தற்சமயம் கண்டகனவோ வினோதமானது என்னை போலவே ரூபம் கொண்ட ஒரு ஆண்மகன். அவர் என்முன் தோன்றினார். தாங்கள் யார்? என்று நான் வினவியபோது, "உன் ஆன்மா நான்தான் நானே முஹியித்தீன்!"(2) என்று கூறி விட்டு மறைந்துவிட்டார்.

பாபா தன் தோள்களை தாழ்த்தி தலையை பணிவுடன் குனிந்து "அவர் பாதங்கள் என் சிரசின் மீதும் தோள்களின் மீதும்" என்றார்கள். "மகளே உன்முன் தோன்றிய முஹியித்தீன் ஆகிய அவர் ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் அப்பாஸிகளின் தலைநகரமான பாக்தாத் நகரத்தில் பிறப்பார்.

"இஸ்லாமிய மெய்ஞ்ஞான உலகின் அதிபதியாக விளங்குவார். தரீக்காவின் பாதையிலும் சட்டதிட்டங்கள் உள்ளன. அவர் மெய்ஞ்ஞான மரபின்சட்ட திட்டங்களை நெறிப்படுத்தி, உடல்பொருள் ஆவி மூன்றும் உத்தம குருவுக்காய் என்ற தரீக்காவின் தத்ததுவத்துக்கு தெளிவான விளக்கம் தருவார். அனைத்து தரீக்காக்களுக்கும் தலைமை பீடமாக இருப்பார்.

இறைநேசர்களின் தோள்களிலெல்லாம் எனது பாதகமலங்கள் பதியப்படும் என்று பாரறிய பறைசாற்றுவார்" என்றார்கள். மீண்டும் தன் தோள்களை பணிவுடன் தாழ்த்தினார்கள். மஹ்பூபு சுபுஹானியின் பாதங்களை தன் தோளில் சுமப்பது போல பாவித்தார்கள்.

---

*குறிப்பு-*

*(1) மோகந் தவிர்க்க முலையாரையணை யாமல் உமை*
*முத்தமிட அருள் புரியவும்*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

*(2) சீன்எனும் கண்ணாடிக்குள் சிறந்தநூரன் கோலமாக*
*தான் எனும் வடிவுகொண்ட தாசிமா நபியின் பேரர்*
*-பக்ருத்தீன் புலவர்*

*சுத்தத் திருவடியில் சொக்கியருள் பெறும்முன்*
*செத்திறந்து போனால் உன் செய்வேன் நிராமயமே*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## "மகனே இராஜராஜ் சூக்குமத்தில் பாய்ந்துவிடு"

இருள் சூழ்ந்து புவி எங்கும் பரவியது தவச்சாலையின் நாலா திசைகளிலும் அமைதி அரசோச்சியது. இஷா தொழுகைக்குப்பின்னர் பாபா தோழர்களுக்கு உபதேசம் புரிந்தார்கள்.

"இம்மையை நேசிப்பவர்களுக்கு இம்மையும் கிடைப்பதில்லை மறுமையும் கிடைப்பதில்லை. மறுமையை நேசிப்பவர்களுக்கு மறுமையும் கிடைக்கிறது. இம்மையும் கிடைக்கிறது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

எனது இனிய பிள்ளைகளே எந்த ஒரு பொருளிலும் அதன் ஜீவனை நேசிக்க கற்று கொள்ளுங்கள். எந்த ஒரு மனிதனிலும் அவனது ஆன்மாவை நேசிக்க நீங்கள் கற்று கொள்ளுங்கள். உங்களை நீங்கள் அமைதிப் படுத்திக்கொள்ள இதுதான் வழி. இகபர மிரண்டிலும் ஜெயம்பெற இதுவே வழி.

மனிதன் தன்னுடைய ஆன்மாவையே தனது இறுதி நேசனாக கருதவேண்டும் என்பதுதான் மதங்களின் முடிவாகும். எல்லா மதங்களும் ஒரே மூலத்திலிருந்து உண்டாகியிருப்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். அந்த மூலமும் உங்கள் ஆன்மாவேதான்.

மனிதர்களே உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவிலிருந்து தான் படைத்திருக்கிறோம் என்று புனித குர்ஆன் அறைகூவல் விடுத்திருக்கிறது. உங்கள் அனைவருக்கும் ஒரே ஆன்மாதான். ஆண்டவனும் ஒருவன்தான். ஆனால் அதே ஆண்டவன், மனிதர்களே உங்களை நாம் ஒரு துளி இந்திரியத்திலிருந்து உண்டாக்கி இருக்கிறோம் என்று தெளிவு படுத்தியுள்ளான்.

*தீதணையார் கற்பூர தீபமென நான்கண்ட*
*சோதியுடன் ஒன்றித் துரிசறுவ தெந்நாளோ*
*-தாயுமான சுவாமிகள்*

“ஒரு துளி இந்திரியத்திலிருந்து உண்டான இந்த உடல் ஒரு நாள் உடைந்து மண்மீது சிதறிவிழுந்துவிடும். கண்காணா இந்திரிய துளியாக மிஞ்சி நிற்கும் இதனை அரபிமொழியில் உஜுபதன்பு என்பர்.

உடலில் இருந்த ஆன்மா தன் மூலஸ்தானத்துக்கு திரும்பிவிடும். இப்படி ஓடும் உன் ஆன்மாவை ஓடாமல் நீ பிடித்து வைத்து கொள்ளும் வழியைத்தான் மதங்களில் உள்ள அந்தரங்க ஞானம் உனக்கு போதிக்கிறது.*(1)*

நீங்கள் வாழும் இந்த பிரபஞ்சம் எல்லையற்றது. திசைகளும் திக்குகளும் எட்டாத இந்த பரந்த வெட்டவெளியில் ஒரு கொசுவைவிட அற்பமான ஜந்து என்பது தான் உங்கள் நிலை. ஆனால் உங்களை நீங்கள் மிகப்பெரிய வஸ்து வாக நினைத்திருக்கிறீர்கள்.

இந்த முடிவற்ற ஆழங்காண முடியாத வெட்டவெளியில் உங்களுடைய நூற்றாண்டு கால வாழ்நாளென்பது ஒரு நொடிப்பொழுதிலும் அற்பமானது. ஏனெனில் இந்த பெருவெளி எப்படி எல்லையற்றதோ அதுபோலவே காலமென்பதும் எல்லையற்றதுதான் ஆரம்பமும் முடிவும் அற்றதுதான். ஆனால் நீங்களோ உங்கள் கையில் கிடைத்திருக்கும் காலம் என்னும் அவகாசத்தை வீண் விரயம் செய்து வருகிறீர்கள். கிடைத்திருக்கும் கால அவகாசததில் உங்கள் பூத உடலை பிரபஞ்ச பேருடலாகவும் உங்கள் வயதென்னும் ஆயுட் காலத்தை நித்ய காலமாகவும் ஆக்கி கொள்ளவே பூமியில் பிறந்திருகிறீர்கள். இறைவனுடைய திருகுர்ஆனில் நீங்கள் வாழும் இந்த பிரபஞ்சத்தை ஆலம் என்று இறைவன் கூறுகிறான்.

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்ற வாக்கியத்தில் உள்ள ஆலம் என்ற இந்த அரபு சொல்லுக்கு அணு என்ற பொருளும் உண்டு. அண்டம் என்ற பொருளும் உண்டு.

---

*குறிப்பு*

*(1) என்னுள் ளிருக்குமெங் கோமான் என்னுள்ளே*
*இருந்திடற் கருள் புரியவும்*

*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலி*

“அதுபோல அல்ஹம்து சூராவிலுள்ள மாலிக்கி யவ்மித்தீன் என்ற வாக்கியத்திலுள்ள யவ்ம் என்ற சொல்லுக்கு நொடிப் பொழுது என்ற பொருளுமுண்டு யுகாந்திர காலம் என்ற பொருளுமுண்டு. இவைகளெல்லாம் அல்லா என்கின்ற இந்த பிரபஞ்சத்தின் உள்ளமையாக இருக்ககூடிய பரம் பொருளை காலவெளியின் உள்ளீடாக இருக்ககூடியதை (ஹையுல் கய்யூம்) உங்களுக்கு உணர்த்துகிறது.

இருக்க கூடியது என்பதெல்லாம் உங்களுடைய (இலாஹ் என்ற) உள்ளமைதான். நீங்கள் இருக்கிறீர்கள். உங்களைச் சுற்றி இருப்பதெல்லாம் உங்களுக்கு இருப்பது போல தோன்றுகிறது. இந்த (இலாஹ் என்ற) உங்களுடைய உள்ளமை, நான் இருக்கிறேன் என்ற நினைவு தான், வானத்து சந்திரனைப் போல பிறப்பதும் வளர்வதும் தேய்வதும் மறைவதுமாக இருக்கிறது.

ஆனால் நீங்கள் தேய்ந்து மறைகின்ற சந்திரனாகவே இருந்துவிடாமல் என்றும் நிலைத்திருக்கின்ற பிரகாசமான சூரியனாக உங்களை மாற்றிகொள்ள வேண்டும்.”

பேசிக்கொண்டே இருந்த பாதுஷா தப்லே ஆலம் கிழக்குமுகமாக திரும்பினார்கள். “மகனே ராஜராஜ் சூக்குமத்தில் பாய்ந்துவிடு! வெட்டவெளியில் நிற்காதே! உன் சூக்கும கூட்டில் பாய்ந்து கொள்!”

பாபா என்ன பேசுகிறார்கள் என்பது யாருக்கும் புரியவில்லை. கலந்தர்களின் கூட்டத்தில் பேரமைதி நிலவியது. பின்னர் அவர்கள் பேசத் துவங்கியபோது இருகண்களையும் துடைத்து கொண்டார்கள். வார்த்தைகளை ஒவ்வொன்றாக உதிர்த்தார்கள்.

ஏதோ வருத்தத்தில் ஆழ்ந்துவிட்டது போன்ற அவர்களுடைய தோற்றத்தையும் வார்த்தைகளையும் கண்டு தோழர்கள் சோர்வடைந்தார்கள். எனினும் பாபா தொடர்ந்து பேசி கொண்டே இருந்தார்கள்.

“பிள்ளைகளே தொழுகைக்காக ஐந்து வேளையிலும் எழுப்பப்படும் பாங்கோசை ஆன்மீக வெற்றிபெற உங்களை அழைக்கும் அழைப்பாகும். ஹையஅலல் ஃபலாஹ் என்ற குரலை நீங்கள் கேட்கிறீர்கள். ஆனால் அதன் பொருளை நீங்கள் புரிந்து கொள்வதில்லை.

“தொழுகையும் நோன்பும் உங்களிடத்திலே பழக்கத்தின்பால் பட்டதாகிவிட்டது. ஷரீஅத்தான சட்டதிட்டங்களை கவனிக்கிறீர்களே தவிர அதன் ஹக்கீகத்தான தத்துவத்தை நோட்டமிடுவதில்லை. தொழுகையும் நோன்பும் சடஉடலின் உள்முகமாக இருக்கும் சூக்கும உடலை வெளிப்படுத்துவதற்கான பயிற்சியாகும்.

மண் நீர் நெருப்பு மற்றும் ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களில் மண்ணை நீர் கரைத்து விடுகிறது. நெருப்பு நீரை ஜீரணிக்கிறது. நெருப்பை காற்று அணைத்துவிடுகிறது. காற்று ஆகாயத்தில் ஒடுங்குகிறது. ஆகாயம் மறையும் இடம் சூக்குமம்.

தம்பூராவின் கம்பியில் நாதம் இருப்பதுபோல (நாசூத் ஆகிய) நமது ஜடலத்தில் சூக்குமம் மறைந்திருக்கிறது. அந்த சூக்கும சரீரத்துக்குள்தான் ஆன்மா (என்ற ரூஹ்) இருக்கிறது. சூக்குமத்துக்கு அரபியில் மலக்கூத்து என்று பெயருண்டு. எப்படி இந்த ஜடஉடலம் ஐம்பூதம் கொண்ட ஜடஉலகில் வாழ்கிறதோ அதுபோல சூக்குமம் பூத கண்ணுக்கு தெரியாத சூக்கும உலகில் வாழ்கிறது.

இந்த சூக்கும உடலுக்கும் மரணத்துக்கும் சம்பந்தம் கிடையாது. தனக்கென்று அழியா சூக்கும உடல் ஒன்றை உருவாக்கிக் கொள்ளவே மனிதன் பூமியில் பிறக்கிறான். ஆனால் பூமியின் மீதுள்ள கவர்ச்சிப் பொருள்களான மண் பொன் பெண் இவைகளின் மீதான ஆசை அவன் கண்ணை மறைத்துவிடுகிறது. இவை ஜடஉலகை சேர்ந்த கவர்ச்சிகள்.

நித்திய சொர்க்க வாசமென்பது இந்த சூக்குமத்துக்கு உரியதாகும். இதனை ஒவ்வொரு மதமும் அதனதன் போக்கில் வருணித்தாலும் உண்மையென்பது ஒன்றுதான். சூக்கும உடலை நீ கைப்பற்றி கொள்ள வேண்டிய இடம் இந்த பூமியாகும். எனவே இந்த பூமிக்கு வந்த வேலையை நீங்கள் முதலில் கவனிக்க வேண்டும்.

ஜபதபம், திக்ருஃபிக்ரு, யோகம் ஞானம், தரீக்கத், ஹக்கீகத் மஅரிபத் என்ற எல்லா வார்த்தைகளுக்குமான ஒரே பொருள் நீ சூக்கும உடலை அடைந்து கொள்ள வேண்டுமென்பதுதான். மதங்களில் கூறப்படும் யோகசாதனைகள் பலவாறு உள்ளன. மதங்களின் வெளிப்படையான சட்டதிட்டங்கள் இறைவனால் வெளியாக்கப்பட்ட வேதநூல்களை ஆதாரமாக கொண்டவை.

“ஆனால் மதங்களின் அந்தரங்க ஞானம் என்பது ஞானகுருமார்களை ஆதாரமாக கொண்டதாகும். ஒரு தாயின் கற்பகுவளறையில் பத்துமாத காலம் ஒரு குழந்தை வளர்ந்து முழுமையடைநது பூமிக்கு வெளிவருகிறது. இந்த குழந்தை உண்டாவதற்கு தகப்பன் காரணமாகயிருக்கிறான்.

ஒரு சிஷ்யன் அல்லது சிஷ்யையின் ஜட உடலத்தில் உள்ள இருதய கமலம் என்னும் கல்பாகிய கருவறையில் ஒரு சூக்குமம் உருவாகி வெளிப்பட நீண்ட கால அவகாசம் தேவைப்படுகிறது. உள்ளுள் உயிராக தோற்றப்படும் ஆன்மா ஆகிய மெய்ப்பொருள் ஜடஉடலின் கோலத்தை தன்கோலமாக ஆக்கி கொள்ளும் போதுதான் சூக்குமம் முழுமையடைந்து வெளிப்படுகிறது.

சென்மம் எடுப்பது என்பதெல்லாம் ஆன்மா ஜட உடலில் புகுந்து கொண்டு சூக்கும உடலை தயாரித்துக்கொள்ள தேவைப்படும் கால அவகாசமாகும். அந்த சூக்கும உடல் இறைநேச அழியா நிலையை அடைகிறது இந்த சூக்குமம் முழுமையடைந்து வெளிப்பட குருதான் காரணமாயிருக்கிறார்.

எனது பிள்ளைகளே நான் பல்வேறு சாதனைகளை உங்களுக்கு போதித்திருக்கிறேன். இப்போது நான் கூறுவதை கவனியுங்கள். உங்களை போன்று கண்ணாடியில் நீங்கள் காணும் உருவத்தை உங்கள் முன் ஒளி உருவமாக நிறுத்தி பழகுங்கள். பின்னர் அந்த ஒளி உடலை உங்களுக்குள் நிறைத்து நீங்கள் அதிலிருந்தபடியே தொழுகை முதலான அனைத்து அனுஷ்டானங்களையும் உணவருந்துதல் முதலான அனைத்து நடவடிக்கையும் செய்து வாருங்கள்.

“ஆண்டவன் அடியானுக்கும் கஅபத்துல்லாவுக்கும் நடுவில் இருக்கிறான் என்ற எண்ணத்துடன் தொழுதுகொள்ளுங்கள் என்ற நபி மொழியின் பொருளை கூர்ந்து கவனியுங்கள். உங்களுக்கிடையே நபி உண்டாகியிருப்பதை நீங்கள் கவனிப்பதில்லையா என்ற மறைதிருவசனம் என்ன கூறுகிறது என்பதையும் ஆராய்ந்து பாருங்கள். இந்த நபி மொழியும் இந்த இறை வசனமும் நான் கூறுகின்ற சூக்கும ஒளி உடலைப்பற்றிய தெளிவான குறிப்பாகும்.

அல்லாஹ்வை திக்ரு செய்து தியானிப்பதிலிருந்து உலக கவர்ச்சிகள் உங்கள் கவனத்தை திசைதிருப்பிவிட வேண்டாம் என்ற இறைவனின் எச்சரிக்கை திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

“உலகப் பொருள்களை நீங்கள் நுகரலாம் ஆனால் உலகத்தின் அற்புதங்களான மண் பொன் பெண் இவை உங்கள் மனதில் தாமரை இலை தண்ணீரைப் போலவே நிற்கவேண்டும்.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மயங்காதவர் மனக்கண்ணாடிக்குள் முகமாம் என்று ஞானிகள் கூறுவது போல உங்கள் மனதை உலகக் கவர்ச்சிகளிலிருந்து விலகியிருக்க பழகுங்கள். யோக சாதனைகளின் நோக்கம் மனதை பரிசுத்தப்படுத்துவது தான்.

பரிசுத்தமனம் கஅபாவினும் உன்னதமானதாகும். மனம் என்ற கருப்பையிலிருந்து தான் சூக்கும ஜோதி உடல் வெளிப்படும். நீங்கள் நித்ய வாழ்வுமட்டுமல்ல ஆகுக என்றதும் நீங்கள் இச்சிக்கும் எப்பொருளும் ஆகிவிடக்கூடிய ஆண்டவனின் ஆற்றலையும் பெற்று பேரின்ப வாரிதியில் திளைப்பீர்கள்.”

பாபா மௌனித்தார்கள். அந்த மௌனம் கலையாமலே படுக்கைக்கு சென்று உறங்கிவிட்டார்கள். இரவு பூமிமீது கவிழ்ந்தது. அதிகாலை பொழுதில் விடியாவிடியலில் தஞ்சையிலிருந்து இரு குதிரை வீரர்கள் விரைந்து வந்தார்கள்.

தஞ்சை மகராஜன் இராஜராஜசோழன் முன்னிரவில் காலமாகிவிட்டதாக வந்த செய்தி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது. தன் மடியில் வந்து விழுந்து அழுது புரண்ட ஆத்தும குமாரி மாமாஜிக்னி என்ற குந்தவை நாச்சியாரின் கூந்தலை வருடி பாபா ஆறுதல் கூறினார்கள். “மகளே உன் சகோதரனின் பெயர் செத்தவர்களின் பட்டியலில் இடம் பெறவில்லை” என்றார்கள்.

குந்தவை நாச்சியார் முந்திய இரவில் சொற்பொழிவின்போது பாபா கிழக்கு நோக்கி கூச்சலிட்ட வார்த்தைகளை நினைவு கூர்ந்தார்கள். “மகனே ராஜராஜ் வெட்டவெளியில் நிற்காதே சூக்குமத்தில் பாய்ந்து விடு” என்ற அந்த வார்த்தைகளின் அர்த்தம் நாச்சியருக்கு புரிந்தது.

தோழர்கள் பலரும், கலந்தர்கள் அனைவரும் நாச்சியருக்கு ஆறுதல் கூற வந்து நின்றனர். அவர்களில் பலரின் மனதிலும் ஒரு கேள்வி எழுந்தது, மறைந்த மன்னன் இராஜராஜன் சிவபக்தன். இஸ்லாமிய ஞானியான பாபாவுக்கும் அவருக்கும் எப்படி ஆத்மீக நெருக்கம் இருக்க முடியும்?

மற்றவர்களின் மனதில் இருக்கும் கேள்வியை பாபா உணர்ந்து கொண்டு எல்லோரும் அறிந்துக் கொள்ளுமாறு பாபா தெளிவாக கூறினார்கள்.

"குருவுக்கும் சீடனுக்கும், குருவுக்கும் சிஷ்யைக்கும் இடையில் தான் மதம் உயிரோட்டத்துடன் இருக்கிறது. மறைந்த மன்னன் இராஜராஜன் தப்லே ஆலம் ஆகிய எனது உத்தமமான சீடர்களில் ஒருவன்."

*குறிப்பு -*

*(1) சூக்குமம் காரணம் மாகாரணத்தொடு*
*துலங்கிடற் கருள்புரியவும்*
*ஏற்றபடி ஆன்மவடிவு என்முகத் தெதிர்நின்று*
*இலங்கிடற் கருள் புரியவும்*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா பாடல்*
*பாகம் -பொறை நிலை*

*குறிப்பு-*

*(2) இம்மை மறுமையாகிய சகலவிதப் பந்தங்களையும் புனிதமாகத் திரஸ்கரித்தால் தான் உன் சிரேஷ்டமான உள்ளத்துக்கு ஹக்குத் தஆலாவின் திவ்விய சூக்கும தரிசனம் பிராப்தமாகும்.*

*- ஃபத்ஹீர் ரப்பானி 61 - கௌதல் ஆஃலம் (ரலி)*

*குறிப்பு-*

*(3) பூதறி சதுர்திஹி சம்ஹிதஹ சூட்சுமைஹி*
*மனோஜீவா தேகம் உபைதி தேகாத் கர்மாத்*
*வக்த்வாத்து தஸ்ய திருஷ்யம் தீப்மையஹி வினாதர்சனம்*
*அஸ்திரூபம்*

ஐம்பூதங்களில் மண்ணாகிய பூதத்தை தவிர்த்துவிட்டு ஆன்மா, நீர்காற்று, தீ, வானம் ஆகிய நான்கு பூதங்களுடன் கூடிய சூட்சும சரீரத்துடன் தேகத்தை விட்டுதேகமே தாவி சூட்சும சரீரத்துடன் தேகத்தை விட்டுதேகம் தாவி அலைகிறது மோட்சம் என்ற தெய்வீக நிலை அடையும்வரை ஆன்மாவின் பயணம் நீடிக்கிறது

*-சரஹ சம்ஹிதா - சரஹர்*

*கொண்டணைத்துக் கொள்ளும் குணங்குடியான் சீரடியைக்*
*கண்டணைக்க நீயருளாய் கண்ணே பராபரமே!*
*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## பாபாவின் மறைவும்
## மாதா மாமாஜிக்னியின் அருள் உரையும்.

பிற்பகல் தொடங்கி இரவு முழுவதும் பெரும் புயல் வீசியது. நூற்றுக்கணக்கான பேய்கள் கூடி சப்தமிடுவது போல காற்றின் பேரோசை காதுகளை செவிடுபட செய்தது. பெரிய பெரிய மரங்கள் முறிந்து விழுந்தன.

பெருமழை நீடித்தது. இடியின் பேரோசையால் மலை குன்றுகளும் கிடுகிடுத்தன. காவிரியிலும் கொள்ளிடம் நதியிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இருட்டின் போர்வையில் ஊரும் உலகமும் உறங்கிக் கொண்டிருந்த இரவில் பாபாவின் தவவளாகம் கண் கொட்டாமல் விழித்திருந்தது.

“அதிகாலையில் நான் இம்மைநீங்கி மறுமை புகுவேன்!” என்று பாபா முன்னிரவிலேயே அறிவித்தார்கள்.

*துஜன்னத் ரபாநிகான் தேமன்பத் ராபா தொஷாக் பார்*
*கிபாஷ் பஷத் மாரா அன்ஜா தமனயெயெ விசார்*

*நல்லவர்களுக்கு சொர்க்கத்தையும்,*
*தீயவர்களுக்கு நரகத்தையும் தாராளமாக கொடு,*
*உன்னோடு இரண்டற கலந்திடும் ஆசையை*
*எனக்கு தந்தருள்*
*- மந்திக்கு தைர் - ஃபரீதுத்தீன் அத்தார்.*

கடந்த ஓராண்டு காலமாகவே பாபா பெரும்பாலும் படுக்கையிலேயே இருந்தார்கள். ஐவேளை தொழுகைக்கும் அவர்களுக்கு அருகில் பாங்கொலி எழுப்ப, பாபா சைக்கினையால் மட்டும் தொழுது கொண்டார்கள்.

*சின்னஞ் சிறியேன் தன் சிந்தை கவர்ந்தார் இறைவர்*
*தன்னந்தனியே தவிப்பேனோ பைங்கிளியே!*
*- அருள்திரு தாயுமான சுவாமிகள்*

ஓராண்டு காலமும் தவவளாகத்தின் நிர்வாகம் மாதரசி மாமாஜிக்னி குந்தவை நாச்சியார் அவர்களிடம் இருந்தது. பாபாவின் சகோதரரின் மகளான சுல்தான் பீவியும் பாபாவின் கலிஃபாவும் மகளாரின் கணவருமான அப்துல் ரஹ்மான் சித்திக்கியும் நிர்வாகத்தில் உடன் இருந்து உதவி செய்தனர்.

அந்திமக் காலத்தில் பாபாவைத் தேடி வருவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது. மதபேதமின்றி சோழவளநாட்டின் நாலாதிசைகளிருந்தும் ஆண்களும் பெண்களும் முதியோரும் சிறுவர்களும் வாலிபர்களும் பாபாவை நாடிவந்தனர்.

பாபாவை நேரில் கண்டு உடல் பிணியும் மனப்பிணியும் தீர்ந்தனர். வாழ்க்கையில் ஏற்படும் துன்பத் துயரங்களை தீர்த்துக்கொண்டனர். பேய் ஜின் பிசாசு பிடித்தவர்கள், செய்வினை சிஹ்ரு சூன்யம் வைப்பு போன்றவற்றால் பாதிக்கப் பட்டவர்களும் பாபாவின் பார்வையிலேயே பரிகாரம் பெற்றனர்.(1)

அது ரமலான் மாதம். உடல் நலிவடைந்த நிலையிலும் அன்று பிறை பதினான்கு வெள்ளிக் கிழமை அதிகாலை தஹஜத் நேரத்தில் பாலருந்தி நோன்பு வைத்தவர்களாக படுக்கையில் எழுந்தமர்ந்து தக்பீர் கட்டிக் கொண்டு, பஜ்ரு தொழுகையை தொடங்கி சிரசை தரைமீது வைத்து சுஜூது சிரவணக்கம் செய்தவர்களாக பாபா காலகதி அடைந்தார்கள்.

பொழுதின் விடியலோடு சூறாவளி பேய்காற்றும் பேராழி பெருமழையும் ஓய்ந்தது. சோழநாட்டின் பல பகுதியிலிருந்தும் பெருங்கூட்டம் திரண்டு வந்து பாபாவின் நன்மரண இறுதி காரியங்களில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

\- - - - - - -

மூன்றாம் நாள் அதிகாலையில் நகரமக்களும் கலந்தர்களும் கூடி அமர்ந்து அருள் மறை திருக்குர்ஆனை ஓதி பாபாவின் ஆன்மாவுக்கு ஹதியா தானம் செய்தனர்.

மாதரசி மாமாஜிக்னி அம்மையாரின் கிளியும் அவர்களோடு அமர்ந்து பாபாவுக்காக குர்ஆனை ஓதி தானம் செய்த காட்சி அனைவரின் உள்ளத்தையும் உருக்கியது. மாமாஜிக்னி குந்தவை நாச்சியார் பாபாவின் பீடத்தில் அமர்ந்து மக்களுக்கு நல்லுபதேசம் புரிந்தார்கள்.

நாச்சியார் பேசத் துவங்கியதும் அவர்கள் நாக்கு குழறியது. கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது. சமாளித்து கொண்டு தொடர்ந்து பேசினார்கள். அம்மையாரின் நிலை கண்டு மக்கள் அதிர்ந்தனர்.

“இறைநேசர்கள் மரணிப்பதில்லை. அவர்கள் நித்திய காலமும் ஜீவித்திருக்கிறார்கள். வாழ்நாள் முழுவதும் இறைநேசத்தில் இறைகாதலில் மூழ்கியவர்களாக வாழ்ந்த பாபா தப்லே ஆலம் நத்தஹர் ஒலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆன்மா இப்போதும் நம்அனைவரையும் அருகிலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறது.

*யா ஷெய்க் !*
*வ கர்தர் தும் கஷம் கி மக்ஷெ இஸ்திகான் சொயாத்*
*மாரா தர்தேஸ்த் தில் அகர் கோயம் ஸபான் சோஸத்*

*எனது குருவே! உங்களை பிரிந்த பிரிவின் வேதனை*
*என் நெஞ்சில் தீயாய் எரிகிறது*
*என் வேதனையைப் பற்றி நான் பேச வாய்திறந்தால்*
*எனது நாக்கு தீய்ந்து போகும்*
*வேதனையை என்னுள் மறைத்து கொண்டாலோ*
*உடலுக்குள் எலும்புகளும் உருகிப்போகும்*

*- ஸூஃபி நஸீர்.*

“கடந்த ஆண்டு ஒரு நாள் நமது குருபிரானாகிய பாபா அவர்களிடத்தில் கலந்தர் ஒருவர் வந்து நின்று ஷெய்கு நாயகமே தீர்க்கமான சம்பூர்ணம் பெற்ற காமிலான ஞான மகானின் நிலை எவ்வாறு இருக்கும் என்று கேட்டார். அதற்கு பாபா அவர்கள் அவரில் நான் என்ற அகங்காரம் அழிந்து தானாகி மற்றயாவற்றையும் அடிமையாக்கி நான் என்ற தன்னை எஜமானாக்கிக் கொள்ளவேண்டும் என்று பதிலுரைத்தார்கள்.

---

*குறிப்பு -(1) அல்லாஹ்வின் நல்லடியார்கள் தலைவர்களாயும் அதிகாரிகளாயும் உள்ளனர். அடைப்பதையும் திறப்பதையும் இறைவன் அவர்களின் கரங்களில் தந்துள்ளான். அவர்களை முன்னிட்டே வானம் பொழிகிறது பூமியும் விளைகிறது. சிருஷ்டிகளனைத்தும் அவர்களின் பிரஜைகளே.*
*ஃபத்ஹுர் ரப்பானி 14 ஹலரத் கௌதுல் ஆஃலம்*

“இதன் யதார்த்தம் என்ன என்பதை விளங்கிக் கொள்ளுங்கள். நம்மிடத்தில் உள்ள நான் என்ற அகம்பாவம் அழிந்து ஹமஓஸ்த் - எல்லாம் அவனே என்ற நினைவு மனதில் பூரித்தெழுந்தால் தான் இந்த காரியம் சித்தியாகும். பிறவிப் பயன் கைகூடும். முக்தி நிலை வாய்க்கும்.

ஆனால் குருவின் திருவடியில் சரணடைதல் நபியின் பாதத்தில் பொருத்தம் பெறுதல் இறைவனின் யதார்த்தத்தில் இரண்டற கலத்தல் என்ற மூன்று நெடுஞ்சாலைகளில் பிரயாசைப் பட்டு பயணித்தால் தான் நம்மில் இருக்கின்ற நான், தான் என்கின்ற அவனாக மறுமலர்ச்சி யடையும்.

வாழ்நாள் முழுவதும் காமம் கோபம் லோபம் முதலிய தீய உணர்வுகளின் கைதியாக நாம் இருக்கின்றோம். வாய்குறுகிய தோண்டியிலிருந்து தின்பண்டத்தை எடுக்க ஒரு திருட்டுக் குரங்கு முயற்சி செய்தது. தின்பண்டம் கைக்குள் வந்ததும் தோண்டியின் குறுகலான வாய் வழியே குரங்கு தன் கையை வெளியில் எடுக்க முயற்சித்தும் முடியவில்லை. உலகில் ஆசைவசப்பட்ட மனிதனின் நிலை இந்த குரங்கின் நிலைதான்.

இச்சைகளையும் ஆசைகளையும் மனம் என்ற கையில் அடக்கிக் கொண்டு குரங்கைப் போல் கதறுகிறோம். ஆனால் ஆசை நம்மை விடாது. ஆசையை நாம் தான் விட்டுவிடவேண்டும். மனதை கட்டுப்படுத்துவது முடியவே முடியாது என்று மனம் தளரவேண்டியதில்லை. அதற்கான உபாயம் இறைவனுக்காக வாழ்வது என்ற வாழ்க்கை முறையாகும்.

இறைவனுக்காக தொழவேண்டும் என்பது மட்டுமல்லாமல் இறைவனுக்காக உண்ணுவது உறங்குவது எல்லாக் காரியங்களையும் அவனுக்காக அற்பணிப்பது என்ற கருத்தின் அடிப்படை தான் எதைச் செய்தாலும் பிஸ்மில்லாவை கொண்டு ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும்.

இந்து மக்களின் ஐந்தாம் வேதமான பகவத் கீதையில் பிஸ்மில்லாவின் சாரம் நிஷ்காமிய கர்மம் என்று கூறப்பட்டுள்ளது. கீதை முழு நூலின் ஞானமே இதுதான் என்று சொல்வார்கள். எக்காரியத்தையும் இறைவனுக்காக செய்து பலனை எதிர்ப்பார்க்காமல் இருப்பது என்பதே இதன் சாரமாகும்.

“ஆனால் ஷரியத்தில் அல்லாஹ் என்று நாம் சொல்கின்ற பரம்பொருள் முகம்மது நபி (ஸல்) அவர்களே ஆவார்கள்.(1)

ஹகீகத் என்ற தத்துவ நிலையில் நம்முடைய குருபிரானே நம்முடைய கடவுளாக இருக்கிறார். குருபிரானின் மீது கொள்ளும் நேசமும் பாசமும் அல்லாஹ்வின் மீதும் அவன் தூதரின் மீதும் கொள்ளும் ஆசையும் பாசமும் ஆகும்.

ஷரியத்தின் சட்டதிட்டங்களான கலிமா தொழுகை நோன்பு ஜக்காத்து ஹஜ்ஜு இவை அனைத்தும் இஸ்லாத்தில் உள்ள யோக சாதனைகளாகும். இந்த யோக சாதனைகளில் ஈடுபடுவதின் மூலம் நம் புலன்களை அடக்கி இடைவிடாது கட்டுப்பாட்டில் வைக்க முடிகிறது.

இந்த தியானத்தின் மூலம் மூமினாகிய இறைவிசுவாசி தன் ஜடஉலக வாழ்க்கை சக்கரத்தை நிறுத்துகிறான். இறைவனின் தெய்வீக சாம்ராஜ்யத்தில் நுழைகிறான்.

குருபிரானின் அன்பு நம்மீது சம்பூர்ணமாகும் போது நான் என்ற நமது அகமே மெய்ப்பொருளாகிவிடுகிறது. கல்பு என்னும் மனம் ஒரு வீடு ஆன்மா ரூஹ் என்னும் ஆணும், அறிவு (நப்ஸ்) என்னும் பெண்ணும் கூடிவாழும் இல்லமாகும். நஃப்ஸ் ஆகிய பெண் ரூகூஹ் ஆகிய ஆணுக்கு பணிந்தால் பேரின்ப வாழ்வை பெறலாம்.

நம்மில் இருக்கும பெண்ஆகிய நஃப்ஸ் உலக கவர்ச்சிகளில் சிக்கி கொள்ளும்போது சொல்லமுடியாத துயரங்களுக்கு ஆளாகிறது. உலக வாழ்க்கையில் பெண்ணை மணமுடித்து இல்லறம் பேணி வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் நமது கல்பென்னும் வீட்டிலுள்ள அறிவு (நஃப்ஸென்னும்) பெண்ணை கூடிஅதை பண்படுத்தி வாழும் போதுதான் பேரின்ப உலக வாசல் திறக்கிறது. உங்களிலிருந்து உங்கள் மனிவியைப் படைத்துள்ளோம் என்ற திருமறை வாக்கியத்தின் பொருளும் இதுதான்.(2)

---

*குறிப்பு (1) இந்துமதத்தில் இது பகிரங்கமாகவும் இஸ்லாமிய சன்மார்க்கத்தில் அந்தரங்கமாகவும் சொல்லப்படும் ஞானமாகும்.*

*கோடானு கோடி மறையாலும் மறியாக் குணம்*
*குடிகொண்ட கருணை வடிவே*
*ஹூலாயிலாஹ இல்லல்லாஹூ என்பதற்*
*குரிய மஹ்மூது நபியே*

*-குணங்குடி மஸ்தான் சாஹிபுஒலியுல்லா*

*குறிப்பு (2) கௌதுல் அஃலம் (ரலி) யின் தஃப்ஸீரே கரீம் 92 ஸூரத்தலு லைல்*

இறைவனின் மீதான தியானத்தை விட்டு சற்றே விலகினாலும் மீண்டும் அவனளவிலேயே மனதை கொண்டுவர மகத்துவானவன் பழகிவரவேண்டும்.

இதற்கு தொடர்ந்து அப்பியாஸம் தேவைப்படுகிறது. உண்மையான ஆனந்தம் ஜடஉலகின் புலன் இன்பங்களில் இல்லை. நமக்குள் மறைந்திருக்கும் ஆன்மீக புலன்களின் அனுபவத்திலே தான் இருக்கிறது என்பதை உணர்வது அவசியமாகும்.

ஆன்மீக இன்பங்கள் ஜடஉலக புலன் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவை. இதை உண்மையாக நாம் நம்பாதவரை நமது மனம் புலன் இன்பங்களின் மீது அலைந்து கொண்டே இருக்கும்.

பாபா தப்லே ஆலம் பலவிதமான அப்பியாஸ் பயிற்சிகளை போதித்திருக்கிறார்கள். கண்களை மூடி பார்வையில் பார்ப்பது, செவிகளை மூடி உள்ளில் ஒலிக்கும் ஹூம் (ஓம்) என்னும் ஆன்ம தொனியை கேட்பது. நாசியில் ஓடும் மூச்சில் தெய்வ நாமத்தை இழைய விடுவது.

குருவின் உருவத்தை நமக்குள் பதிய செய்வது. நம்முடைய சொந்த ரூபத்தை நினைவில் நிறுத்தி பழகுவது ஆகிய இந்த பயிற்சிகளில் எது உங்கள் மனதில் ஒப்புதலாகிறதோ அதை நினைவு கண்ணியப் படுத்தப்படவேண்டும்.

சமாதி எனப்படும் பரம்பொருளோடு ஐக்கியப்படும் சமநிலையில் சாதகனின் மனம் உலக சலனங்களிலிருந்து விடுபட்டு ஸலாம் என்கின்ற சாந்தியில் அமைதி கொள்கிறது. பரிசுத்தமான அந்த மனம் ஆன்மாவைத் தொட்டு அனுபவிக்கிறது. ஆண் பெண் தொடுதலுக்கும் இதற்கும் மிகப்பெரும் வேறுபாடு உண்டு. ஆன்மாவை தொட்டு அனுபவிக்கும் இடம் எல்லையற்ற பேரானந்த தலமாகும்.

இத்தகைய ஆத்மீக பேரானந்தம் பெற்றுவிட்ட மகான்கள் உலகில் எத்தகைய கஷ்டங்களும் துன்பங்களும் மான அவமான இடர்களும் வந்தாலும் அவற்றை சட்டை செய்வதில்லை. இது தான் இறைநேச நிலை என்பதாகும்.

மனிதனுடைய நண்பனும் விரோதியும் இரு விலா எலும்புகளுக்கிடையே உள்ள இருதயமே! என்று பொருள்பட நபிகள் பிரான் உபதேசித்திருக்கிறார்கள். மனத்தை வென்றவனுக்கு அது சிறந்த நண்பன். அவ்வாறு செய்யாதவனுக்கு அது கொடிய விரோதி.

இந்திர பிரஸ்த யுத்த களத்தில் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசித்தது போலும், எம்பெருமான் (ஸல்) அரபகத்தில் தோன்றி அகிலமக்களுக்கெல்லம் உபதேசித்தது போலும் தெய்வீக புருஷர்களான குருமார்கள் தங்கள் சீடர்களுக்கு "கடுமையான சொற்களால் உபதேசிப்பதெல்லாம் சீடர்களின் ஜடஉலகின் பிணைப்பிலிருந்து அவர்களை விடுதலை செய்வதற்கேயாம்.

உண்மையிலேயே மோட்சகதி பெறுவதில் நமக்கு விருப்பமிருக்குமானால் நாமும் இத்தகைய கடும் சொற்களை ஆத்ம குருவிடமிருந்து கேட்டுப் பணிய தயாராகி விடவேண்டும். இல்லையெனில் பல்வேறு சோதனைகளுக்கு ஆளாக நேரிடும்.

இந்த உலகம் மாறி மாறி வரும் தன்மைகள் உடையதாகும். ஒருகணம் கோடையின் வெப்பம் மறுகணம் குளிர்காலத்தின் கடும்குளிர் நம்மை தாக்குகின்றது. ஒரு கணம் ஆனந்தம் மறுகணம் துக்கத்தில் ஆழ்கிறோம். போற்றுதல் ஒரு நாள் தூற்றுதல் ஒரு நாள் நம்மை நோக்கி வருகிறது.

இவ்வாறு மாறிவரும் சூழ்நிலைகளில் புவிமீது எந்த தன்மையையும் அதன் எதிரிடைத் தன்மையை அனுபவிக்காமல் உணர்ந்து கொள்ள முடியாது. தூற்றல் என்பதை அறிந்தால்தான் போற்றலை புரிந்து கொள்ளமுடியும், துன்ப துயரங்கள் சுகத்தையும் இன்பத்தையும் வெளிச்சம் போட்டு காட்டும்.

நமக்கென்று ஒரு ஜடஉடலம் இருக்கும் காலம்வரை இந்த மாறுபட்டத் தன்மைகள் நம்மை தொடர்ந்துவரும். இந்த தேகாதி அனுபவங்களிலிருந்து விடுபட விரும்பினால் புவியின் இருமைகளை சகித்துக் கொள்ள வேண்டும். இருவித தன்மைகளும் இறைவனிடமிருந்தே நமக்கு அருளப்படுகிறது. உணர்ந்து சகிப்புடன் இறைவனை வணங்கும்போது இறைநேசம் நமக்கு சித்திக்கிறது.

உலகில் நாம் சந்திக்கும் மனிதர்களும் இந்த இருமையின் பால்பட்டவர்களே, உண்மையான ஞானத்தை எய்தியவன் தன்முன் நண்பனையோ எதிரியையோ காணமாட்டான். உலகில் எவரும் நமக்கு எதிரியோ நண்பரோ அல்ல தாயோ தந்தையோ அல்ல, "நாமெல்லாம் விதவித வேடங்களில் தாய்தந்தை மகன் மகள் சகோதரன் சகோதரி நல்லவன் கெட்டவன் பாவி புண்ணியவான் என்று நடிக்கும் ஆத்மாக்களே.

இந்த பூவுலகம் தேர்ந்த நடிகர்கள் நடித்துக் கொண்டிருக்கும் பிரம்மாண்டமான நாடகமேடை. ஒரு குறிப்பிட்ட நடிகர் நாடகத்தில் நமது எதிரி. ஆனால் மேடைக்கு வெளியே அவர் நண்பர். ஜடஉலகில் நாம் ஒருவருக்கொருவர் எதிரியாக இருந்தாலும் ஆன்ம உலகில் அனைவரும் ஒருவருக்கொருவர் நண்பர்களே உடல் என்ற ஒப்பனையுடன் நாம் அனைவரும் நடிக்கிறோம்.

இவன் எனது மகன், இவள் எனது மகள் என நினைக்கிறோம். யதார்த்தத்தில் நம்மால் ஒரு மகனையோ ஒரு மகளையோ உற்பத்தி செய்யமுடியாது. எந்த ஒரு ஆணாலும் பெண்ணாலும் ஒரு உயிரை உற்பத்தி செய்ய முடியாது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒன்று சேர்ந்து விடுவதாலும் ஒரு குழந்தையை ஜனிக்கச் செய்யமுடியாது.

ஒரு மனித கரு உண்டானாலும் கருவின் நடுவில் ஆன்மா உட்காரும்போது தான் அது குழந்தையாகிறது. இவ்வுலகில் உண்டாகும் எல்லாவிதமான உறவுகளும் பிணைப்புகளும் நாடக நடிப்பே ஆகும். ஆண்டவனோடு ஆன்மாக்கள் கொள்கின்ற உறவுதான் உண்மையானது நிலையானது.

உலக வாழ்க்கையில் நானும் என் சகோதரர்களும் சுந்தர சோழருக்கும் வானவன் மாதேவிக்கும் பிள்ளைகள் யதார்த்தில் நாங்கள் எங்கள் ஆத்தும தந்தையாகிய தப்லே ஆலம் பாதுஷா நத்தஹர் வலியுல்லாஹ்வின் துஆவில் புவியில் தோன்றிய மனித ஜீவிகள். எங்களுடைய அடைக்கலம் அவர்களோடுதான்.

“புரிந்து கொள்ளுங்கள் மறைந்த எங்களுடைய குருநாதர் எங்களுக்கு நபிகளாருக்கு பகரமான நாயிபு ரசூலாவார்கள்(1) எம்பெருமான் (ஸல்) அவர்கள் யாதார்த்தத்தில் மன்ரஆனிஃபகத்ராஅல் ஹக் - என்னை சந்தித்தவன் இறைவனை சந்தித்தான், என்று கூறியிருக்கிறார்கள்.

---

*குறிப்பு - (1) உங்களுக்கிடையே சூரத்துன் நபி (நபியின் உருவம்) இல்லை என்பது உண்மையே. என்னும் நபியின் மெய்யான சிஷ்யர்களை நீங்கள் பின்பற்றுவது நபியையே பின்பற்றுவதேயாகும். நீங்கள் அவர்களைக் காண்பது நபியைத் தரிசிப்பது போன்ற புண்ணிய கருமமாகும்*
*- பத்ஹுர் ரப்பானி - 14 ஹலரத் கௌதல் அஃலம்*

மகத்துகள் சாதகர்கள், தரிக்காவில் தங்களை இணைத்து கொண்டவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் தம்கரம்பிடித்து உங்களை பராபரனின் சன்னிதானத்துக்கு அல்லாஹ்வின் அர்ஷென்னும் அரண்மனைக்கு அழைத்தேகும் வரை பெருமானார் (ஸல்) சன்னிதானத்திலேயே அமர்ந்திருங்கள். இது எனது குருநாதர் பாபா தப்லே ஆலம் தந்திருக்கும் உபதேசம்.

மறைந்த என் சகோதரர் இராஜராஜனுக்கும் எனக்கும் ஞான தீட்சை அளித்த குருபிரானான இவர்களை நாங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் எங்களுக்கு போதுமானவர்களாக ஆக்கிகொண்டோம்.''

நீண்ட சொற்பொழிவுக்குப்பின் மாதரசி குந்தவை நாச்சியார் களைப்புடன் காணப்பட்டார்கள். அவசர அவசரமாக அவர்களுக்கு பருகுவதற்கு தண்ணீர் தரப்பட்டது. மூன்றுமுடக்கு தண்ணீர் அருந்திவிட்டு பாபாவின் கபர்சரீஃபின் காலடியில் தலைவைத்துப் படுத்த மாதரசி சில நொடிகளில் காலமானார்கள்.

அவர்களின் அருகில் அமர்ந்து மாதாவின் ஆன்மீக சொற்பொழிவை அவதானித்து கொண்டிருந்த அவர்களின் அன்பு பசுங்கிளியும் ''இன்னா லில்லாஹி வ இன்ன இலைஹி இராஜிஊன சஹாதா - நாம் இறைவனிலிருந்து வந்தோம் அவனிலேயே மீளுவோம்'' என்று மிழற்றியபடி சிறகடித்து உயிர்துறந்தது மாதா மாமாஜிக்னியும் பசுங்கிளியும்(2) பாபா தப்லே ஆலம் பாதுஷா (ரலி) யின் பாத திருவடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். புனித மண்ணறை உயர்த்தப்பட்டது.

---

*குறிப்பு (1) -*

*சாலிஹ் நபி அவர்களின் ஒட்டகம், இபுறாகின் நபி அவர்களின் காளைக் கன்று, இஸ்மாயில் நபி அவர்களின் தும்பை ஆடு, மூசா நபி அவர்களின் காளை மாடு, யூனுஸ் நபியின் உஸைர் நபியின கழுதை, சுலைமான் நபியின் எறும்பு, பல்கீஸ் நாச்சியாருக்கு தூது சென்ற ஹுது ஹுது பறவை, நபி பெருமான் (ஸல்) அவர்களின் ஒட்டகம் ஆகியவை சுவர்க்கம் புகும் விலங்கு பறவையினமாகும் - ரூஹுல் பயான்*

*பாபா தப்லே ஆலம் அவர்களின் பக்தை மாதா மாமாஜிக்னி அம்மையாரின் கிளி இறையருள் பெற்றதால் பாபாவின் தர்பாரில் மாதாவின் கபுரருகிலேயே புனித சமாதி பெற்றுள்ளது. அல்லாஹு அஃலம் - ஆசிரியர்.*

*பரமுத்தன் குணங்குடி தெருவில் வரும்பவனி*
*பார்த்து வருவோம் வாருங்கள்*
*வரமுத்தர் சுரர்கணம் தரமுற்றவர்களிரு*
*பரமொய்த் தினியதுதி தரமுத்தி யருளும் நம்*
*பரமுத்தன் குணங்குடி தெருவில் வரும்பவனி*
*பார்த்து வருவோம் வாருங்கள்*

*சாத்திர வேதம் சலாம் சலாம் சலாமென்ன*
*ஜெகஜோதி மின்னல் பளிர் பளிர் பளீர்ரென்ன*
*போர்துளம் போற்றும் றகிம் றகிம் றகிமென்ன*
*பிஸ்மில்லா ஹிற்றஹமானிற்றகிமென்ன*
*அசையாமல் ஒரு நிலை விசுவாசம் அருளும் நம்*

*பரமுத்தன் குணங்குடி தெருவில் வரும்பவனி*
*பார்த்து வருவோம் வாருங்கள்*

*-குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா*

## நாகூரரார் விஜயம்

“ஹோஸ் பர்தம், நஜர் பர்கதம் - உன்னில் உன் மூச்சையடக்கு, உன்னிரு பார்வையை உன் பாதத்தின் மேல் பதித்திரு.”

பேரொலி பேரோசை எழுப்பியவர்களாக காவி நிறத்தலைப்பாகைகளும், சிகப்பு பச்சை ரோஜா நிறத்தலைப்பாகைகளும் அணிந்த, தூய வெள்ளாடை உடுத்திய நூற்றுக்கணக்கான பான்வா ஃபக்கீர்கள் நகரவீதிகளில் பாதசாரிகளாக நடந்து வந்தனர்.

மாமன்னன் இராஜராஜ சோழனால் மணிக்கிரமமாக விடப்பட்டு, அவனது மைந்தன் இராஜேந்திர சோழனால் அடித்தளமிடப்பட்டு, கால ஓட்டத்தில் கம்பீரமாக எழுந்து நின்ற பாபா தப்லே ஆலம் பாத்துஷாவின் தர்கா என்ற தர்பாரை சுற்றி எழுந்த குடியிருப்புகளால், நகரமாக உருவாகியிருந்த திருச்சி பெருநகரம் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகத்தின் வருகையில் பெருமிதம் கொண்டது.

வாழை மரங்களாலும் தென்னை மர ஓலைகளாலும் தோரணங்கள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த தர்பாரின் வாசலில் பாபா தப்லே ஆலம் மறைந்து

ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு பாதுஷா ஷாகுல் ஹமீது நாயகமவர்கள் ஃபக்கீர்கள் எழுப்பிய துந்துபி முழக்கத்துடன் மலர் பாதம் பதித்து உள்ளே நுழைந்ததும் பரபரப்புடன் ஓடிவந்த தர்கா நிர்வாகிகள் இடுப்பில் கச்சையைக் கட்டிக் கொண்டு வரிசையாக நின்று வரவேற்றார்கள்.

“ஏஜமானே! தங்களுடைய வருகைக்காக கடந்த ஒருவாரமாக ஆவலோடு நாங்கள் வழிமேல் விழிவைத்து காத்துக்கொண்டு நிற்கிறோம்,“ ஷாகுல் ஹமீது என்ற பெயருடைய இறைநேச செல்வர் என்னுடைய தர்பாருக்கு வந்து கொண்டிருக்கிறார். அவருக்கு மிகப்பெரும் வரவேற்புக்கு ஏற்பாடு செய்யுங்கள்” என்று பாபா தப்லே ஆலம் அவர்கள் எங்களில் பலருக்கு கனவில் அறிவித்துவிட்டார்கள்”.

ஒளிசிந்தும் நிலவு முகமும், குற்றமில்லாத புன்னகையும், கொடி போன்ற உடலும், தலையை அலங்கரித்த ரோஜா வண்ண தலைப்பாகையும், பார்த்த கணமே விழுந்துவிடலாமா என தோன்றும் தாமரை பாதங்களுமாக நடந்து வந்த, நானூற்றி நான்கு ஃபக்கீர்களின் நடு நாயகமான நாதாவை, நெருங்கி ஸலாம் கூறி தர்பாருக்குள் அழைத்து வந்த தர்கா நிர்வாகிகள் கை வைத்து திறக்கும் முன் தர்கா கற்பக்கிருகத்தின் கதவுகள் படக்கென திறந்தன.

கற்பக்கிருகத்திலிருந்து பனிப்படலமென பொங்கி வந்த ஒளிவெள்ளத்தில் சங்கைமிகு ஷாகுல் ஹமீது பாத்துஷா நாயகம் அவர்கள் கால்வைத்து நுழைந்ததும் இருகதவுகளும் தானே மூடிக்கொண்டன திகைத்து நின்றனர் நிர்வாகிகள். திகைப்படையாத ஃபக்கீர்கள் புன்னகைத்தனர்.

பாதுஷாவின் கலிஃபாக்கள் நிர்வாகிகளின் கரம் பற்றி அழைத்தேகி எங்களுடைய குருநாதராகிய இவர்கள் வடநாட்டில் அயோத்தி மாவட்டத்தில் பிறந்தனர். குவாலியரில் ஞானம் பயின்றவர்கள். அரபுலகம் முழுவதும் பவனி வந்து இந்துஸ்தானத்தில் பல பாகத்தையும் சுற்றி இந்நகரத்துக்குள் வருமுன் எங்களுக்கு உபதேசித்தார்கள்.

“இப்போது நாம் சென்று ஜியாரத் செய்ய இருக்கும் மாபெரும் ஞானியின் பெயர் தப்லே ஆலம் நத்தஹர் ஒலி பாதுஷா என்பதாகும். இவர்கள் சிரியாவின் அரசராக இருந்து ஆட்சி துறந்து ஆன்மீக ஞானியாக உயர்ந்தார்கள். இறை நேசர்களில் அவ்த்தாது என்னும் தெய்வீக அரசின் கீழ்திசைமுனை

இவர்கள்தான். எனவே மனதில் சங்கையோடு நடந்து வாருங்கள் என்று அழைத்துவந்தார்கள் என்று கூறினார்கள்.

ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெரு விருந்தில் ஃபக்கீர்கள் கலந்து கொண்டார்கள். தர்கா வளாகத்திலேயே தங்கி நிஷ்டை முதலிய அனுஷ்டானங்களில் ஈடுபட தலைப்பட்டார்கள். கற்பகிருகத்தின் மூடப்பட்ட கதவுகள் மூன்று நாட்கள் வரை மூடிக்கிடந்தன. திறக்க முயன்றும் முடியாமல் போகவே ஊரார் பிரமிப்புடன் காத்திருந்தனர்.

- - - - - - -

சங்கைமிகு காதிர்ஒலி ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்கள் பாபா தப்லே ஆலம் பாதுஷா அவர்களின் தர்காவுக்கு விஜயம் செய்து நிகழ்வுக்கு முன்னரும் பின்னரும் பல மகான்களும் அரசர்களும் பாபாவின் தர்காவில் வந்து தவமிருந்து ஜியாரத் செய்தும் சென்றிருக்கிறார்கள்.

பாபா தப்லே ஆலம் அவர்களின் சீடர்களில் அவர்களுடன் வந்த அமைச்சர் ஹலரத் ஷம்ஸ்கோயா தர்கா ஷரிஃபில் அடக்கமாகி உள்ளனர். மற்றொரு அமைச்சர் ஹலரத் சம்ஸ் மீரான் திருச்சி சம்ஸ் மீரான் தெருவிலும் ஹலரத் சம்ஸ் மன்சூர் தஞ்சாவூரிலும் அடக்கமாகி உள்ளனர்.

தொள்ளாயிரம் கலந்தர்களின் ஒருவரான பாபா ஹைதரோ சப்தர் கர்நாடகாவிலுள்ள் முல்பாகல் நகரிலும், சீடர்களில் ஒருவரான பாபா பஹ்ருத்தீன் ஒலியுல்லா ஆந்திராவிலுள்ள பெனுகொண்டாவிலும் அடக்கமாகி உள்ளனர்.

நாகூர் ஆண்டகையின் பேரர் காட்டுபாபா பஹ்ருத்தீன் ஒலியுல்லா தனது இளமை பருவத்திலேயே இங்கு வந்து தங்கியிருந்து தவம் புரிந்தார்கள் என்று அவர்களின் வாழ்க்கைக் குறிப்பில் காணப்படுகிறது.

கி.பி.17ம் நூற்றாண்டில் மலைக்கோட்டையில் தங்கி தவம் புரிந்த தாயுமான சுவாமிகள் படுத்து எழுந்த நிலையிலும், அமர்ந்து எழுந்த நிலையிலும் ஒவ்வொரு முறையும் பாபா தப்லே ஆலம் அவர்களுடைய தர்பாரை நோக்கி சிரவணக்கம் செய்தவராக இருந்தார் என்று அவரைப் பற்றிய செவி வழி செய்திகள் சொல்லுகின்றன.

சுவாமி அவர்களுடைய பாடல்களில் ‘வித்தாந்த சித்தர்கணமே’ என முடியும் பத்துப் பாடல்களும் பாபா தப்லே ஆலம் தர்பாரை முன்னிலைப்படுத்தி பாடப்பட்டவையாகக் கருதப்படுகிறது. ‘பைங்கிளி படலம்’ மாதா மாமாஜிக்னியையும் பசுங்கிளியையும் முன்னோக்கியதென்று கூறப்படுகிறது.

குல்பர்காவில் அமைதி கொண்டிலங்கும் காஜா பந்தே நவாஸ், அஜ்மீரின் அரசர் காஜா கரீபுந்நவாஸ் ஆகிய நாதாக்களின் பேரர் காஜா அஹ்மதுல்லா ஹுசைனி, பாபாவின் தர்பாரில் தங்கி ஆசிபெற்று திருச்சி காஜாமலையில் அடக்கமாகி உள்ளனர்.

- - - - - - -

மூன்றாம் நாள் அதிகாலையில் பஜ்ரு தொழுகைக்கு பின்னர் நிர்வாகிகளும் நகர் வாழ் முஸ்லிம்களுமாக பாபா தப்லே ஆலம் பாதுஷாவின் கதவருகே நின்று யாநபி ஸலாம் அலைக்கும் என்ற பனுவலை பாடி கவலையுடன் துஆ செய்தார்கள்.

அடுத்த நிமிடம் முதல் மூன்று நாட்களும் அடைப்பட்டிருந்த கதவுகள் தானே திறந்தன. உள்ளிருந்து வந்த ஒளிவெள்ளத்தின் நடுவில் எஜமான் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்கள் புன்னகை புரிந்த தோற்றத்தினராக வெளிவந்தார்கள்.

அது ஷஃபான் மாதத்தின் கடைசி நாட்களாக இருந்தது. எஜமான் அவர்கள் பாபாவின் தர்பாரிலேயே நாற்பது நாட்கள் சில்லாவில் தங்கி ரமலான் தொடங்கியதும் நோன்பிருந்தார்கள் ரமலான் பிறை 14ல் பாபாவின் தர்பாரில் சந்தனம் பூசும் நிகழ்வு முடிந்ததும் அதிகாலையில் அங்கிருந்து எஜமான் அவர்கள் தஞ்சாவூர் நோக்கி புறப்பட்டார்கள்.

நானூற்றி நான்கு ஃபக்கீர்களுடன் எஜமான் பாதுஷா நாயகம் பாபாவின் தர்பாரிலிருந்து புறப்பட்ட காட்சி பேரரசர் ஒருவரின் அரண்மனையிலிருந்து மற்றொரு பேரரசர் விருந்தாளியாகத் தங்கியிருந்து விடைப்பெற்று புறப்பட்ட காட்சி போல தோன்றியது.